இந்தியாவின் முதல் புரட்சி

1857

அசோக் மேத்தா

519

முதற்பதிப்பு, 15 ஆகஸ்ட் 1947
உரிமை பதிவு

விலை ரூ. 1-4-0

Printed at KABEER PRINTING WORKS, Madras. Ms. 524
Published by Navayuga Prachuralayam, Karaikudi R. 68-A

519

அன்பு கனிந்த

ஜெயப்பிரகாஷுக்கு

பதிப்புரை

190 ஆண்டுகளாக அடிமைப்பட்டிருந்த இந்தியா இன்று சுதந்திரமடைகிறது. அடிமைப்பட்டிருந்த காலத்தில் இந்தியா நடத்தின புரட்சிகள் ஏராளம். இதில் முதல் புரட்சியே 1857-ல் நடந்தது. இந்தியாவின் சரித்திரத்திலேயே இப் புரட்சி முக்கியமானது.

1857-ம் வருஷ புரட்சி பற்றி உண்மை சரித்திர ஆதாரங்களுடன் இதுவரை நூலே வந்ததில்லை. இந்தப் பெருங்குறையை ஸ்ரீ அசோக் மேத்தா ரொம்ப அழகாக தீர்த்து வைத்திருக்கிறார். இந்திய சரித்திர நூல் அரங்கில் இந்நூல் முக்கிய இடம் பெறுமென்பது நிச்சயம்.

இவ்வழகிய நூலை மொழிபெயர்த்து பிரசுரிக்க அனுமதி தந்த ஸ்ரீ அசோக் மேத்தாவுக்கு எங்கள் நன்றி. இந்நூலை தமிழாக்கித்தந்த நண்பர் 'தினசரி' மாரிசாமிக்கு எங்கள் வந்தனம்.

சுதந்திர தினமாகிய இந்த புனித தினத்தில் இந்நூலை வெளியிடும் பேறு கிடைத்ததற்கு பெருமைப் படுகிறோம்.

சென்னை
15—8—47

டி. ஆர். அருணாசலம்
நிர்வாகி.

I. புரட்சிக்குக் காரணங்கள்

பத்தொன்பதாம் நூற்றூண்டின் மத்தியிலே ஆயிரக் கணக்கான சக்திகள் தோன்றி இந்தியாவை மூலைக்கொரு பக்கமாக இழுத்து அலைக்கழித்தன. 1857-ம் ஆண்டுக்குள் இந்திய வானில் கருமேகங்களின் குமுறல் கேட்க ஆரம் பித்துவிட்டது. வரப்போகும் புயலின் உக்கிரம் அக் குமுறலில் பிரதிபலித்தது. போன நூற்றூண்டில் இந்தி யாவின் தென் கோடியிலிருந்து வடக்கே பனிமலை இமயம் வரை பிரிட்டிஷ் ஆட்சி வியாபித்து நிலையூன்றி விட்டது. அல்லோல கல்லோல் நிலையிலிருந்த இந்தியாவின் வாழ் விலே சுதந்திர ஆர்வம் ஒன்று லேசாக மலரத் தலைப் பட்டது. சில விடங்களில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து சுதேச மன்னர்கள் போராட்டம் நடத்தியிருந்தார்கள். 1845-ல் லாத்வா மன்னரும் 1847-ல் ஆங்குல் மன்னரும் வீரப்போர் புரிந்தனர். ஹைதராபாத், திருவாங்கூர், கொச்சி போன்ற இடங்களில் திவான்கள், ஆதிக்கம் செலுத்தும் அந்நியரை எதிர்த்து போராட்டத்தில் இறங்கினுர்கள். மண்ணுசை வெறி பிடித்தலையும் பிரிட்டிஷாருக்கு விரோதமாக எங்கு பார்த்தாலும் மக்க ளிடையே மிகுந்த பரபரப்பு காணப்பட்டது.

பல சமஸ்தானங்களையும் ஏராளமான சொத்துக் களையும் பிரிட்டிஷார் கைப்பற்றியும் பறிமுதல் செய்தும் இருந்தனர். இந்த சுரண்டல் முறையால் நானுசாகிப், ஜான்ஸி ராணி, அயோதி பேகம், மற்றும் பலர் தத்தம் பட் டங்களை இழக்க நேரிட்டது. இவர்களிடையே பழிக்குப் பழிவாங்க வேண்டுமென சீற்றம் கேட்டது. கொழுந்து

விட்டுக் கொண்டிருக்கும் அதிருப்தியை, எதிர்ப்பை வெளிப்படுத்துவது எப்படி என்று இவர்கள் மந்திராலோசனை நடத்தினார்கள். "இந்தியாவை ஒடுக்குவது எப்பொழுதும் சுலபம், ஆனால் அடக்கி ஆள்வதுதான் சிரமம்."[1]

புரட்சி அலைகள் எழுந்து பல வருஷங்களாக மோதிக் கொண்டிருந்தன. சாஹரன்பூர் ஜில்லாவில் சற்று கடுமையான கிளர்ச்சியே தோன்றியது. டில்லி டிவிஷனில் இதன் எதிரொலி கேட்டது. மிராத், முரதாபாத் ஆகிய இடங்களிலும் ஜனங்கள் திரண்டெழுந்தார்கள். மேற்குப்பகுதி மாகாணங்களில் மக்களை ஒன்றுபடுத்தும் இயக்கம் உருப்பட்டது. "வெள்ளையன் ஆட்சி ஒழிந்தது—அந்நியர் ஒழிக" என்று கோஷங்கள் முழங்கின. 1826-27ல் உமாஜி நாயக் தலைமையில் நடந்த கிளர்ச்சியால் புனா கொதித்துக் கொண்டிருந்தது. 1831-3ம் ஆண்டுகளில் பீஹாரில் எழுந்த கோல் புரட்சியை அடக்க பிரிட்டிஷார் ஏராளமான உயிர்ப்பலி கொடுக்கவேண்டியிருந்தது. 5,000 சதுரமைல் பிரதேசத்தை எதிர்த்து நாசமாக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1844-ல் சவன்வாதி என்னுமிடத்தில் நடந்த புரட்சியை அடக்க அவுட்ராம் 10,000 பேரைக்கொண்டு போராடவேண்டி ஏற்பட்டது. எனினும் புரட்சித் தீயின் கங்கு புகைந்துகொண்டுதானிருந்தது. 1857-ம் ஆண்டுவரை இக்கங்கை அணைக்க முடியவில்லை. 1848-ல் கங்ரா, ஜாஸ்வர், தாதர்பூர் ஆகிய சமஸ்தான மன்னர்களும் நர்பூர் வாஜீரும் குருநானக் வழி வந்த வேதி விக்கிரம சிங்கின் துணைகொண்டு—அவர் வீரத்தைக்கண்டு உணர்ச்சிபெற்று—புரட்சியை உக்கிர

1. வில்லியம் ஆர்ச்சர்: **இந்தியாவும் எதிர்காலமும்** என்னும் நூலில் 42-ம் பக்கத்தில் இவ்வாறு கூறுகிறார்.

மாக்கினார்கள். பிரிட்டிஷ் ஆட்சி செத்தொழிந்து விட்டது என்று பிரகடனப் படுத்தினார்கள். பிரிட்டிஷ் ஆட்சியின் அந்தியகாலம் இந்தியர் கண்முன் தோன்றிக் கொண்டிருந்தது.

"பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அபாயகரமான ரகசிய யுத்தம் பல வருஷங்களாக நடந்து வந்திருக்கிறது; இதை நடத்தினவர்கள் யார் யாரென்று தெரியாவிட்டாலும் அவர்கள் ஏராளமானவர்கள்.'

"நமது துருப்புகளுக்கு துரதிர்ஷ்டம் எதுவும் சம்பவித்தாலும் அல்லது நமது துருப்புகளே கலகம் எதுவும் செய்தாலும் புரட்சிக்காரர்களுக்கு நிலைமை அனுகூலமாகத் தோன்றுகிறது. இந்த சமயத்தில் தேசம் முழுவதும் சுற்றறிக்கைக் கடிதங்கள் பறக்கின்றன. பிரகடனங்கள் வெளிக்கிளம்பி தேசம் முழுவதும் அனுப்பப்படுகின்றன. இவை நடக்கும் துரிதத்தைப் பார்த்தால் ஆச்சரியமாகவும் நம்பமுடியாதபடியும் இருக்கின்றது" என்று ஸர் ஜான்மால்கம் எழுதினார். புரட்சிக்காரர்களின் பிரகடனங்களை மக்கள் ரொம்ப ஆர்வமாகப் படித்தார்கள். இங்கிலீஷ்காரர்கள் நாட்டைப் பறித்த கீழ் ஜாதி மக்கள், இந்தியாவை பாழ்படுத்த வந்திருக்கும் மிருக வெறிகொண்ட கிராதகர்கள், இந்தியாவின் செல்வத்தையெல்லாம் வாரி சுருட்டிக்கொண்டு போக வந்திருக்கும் கொடூரக்காரர்கள், இந்தியாவின் பழக்கவழக்கங்கள், மதம் முதலியவைகளை உருக்குலைத்துத் திரியும் விரோதிகள் என்றெல்லாம் புரட்சிக்காரர்களின் பிரகடனங்கள் முழங்கின. பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்திய சிப்பாய்களை தம் கட்சிக்கு வரும்படி இப்புரட்சிக்காரர்கள் கோருவார்கள். இன்னின்னபடி நடக்க வேண்டுமென புத்தி சொல்லுவார்கள். 'உங்கள் எஜமானர்களான இந்த

இங்கிலீஷ்கார கிராதகர்கள் வெகு சொல்ப பேரே, அவர்களைக் கொல்லுங்கள்' என்று இப்பிரசுரங்கள் எல்லாவற்றிலும் எழுதப்பட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்" என்று ஸர் ஜான் மால்காம் எழுதுகிறார்.

இதே சமயத்தில் பிரிட்டிஷார் எப்படி இருந்தார்கள்? வல்லமை மிக்கவர்களாகவும் தோல்வி என்பதே அண்டாது என்பவர்களாகவும் இருந்தனர். அசைந்து கொடுக்காத பருவதங்கள் போன்று விளங்கினார்கள். சுதந்திர ஆர்வத்தின் கூக்குரல் நாலாபக்கமும் பரவி, மக்கள் மனதிலே ஒரு வியாகூல நிலைமையை உண்டுபண்ணியது.

ஆப்கானிய யுத்தத்தில் பிரிட்டிஷார் திணறினார்கள். பாஞ்சாலத்தில் நடந்த யுத்தங்களில் சீக்கியர் காட்டிய எதிர்ப்பு பிரமாதமாக இருந்தது. இவை இரண்டும் சேர்ந்து, வெள்ளைக்காரர்களை வெல்லவே முடியாது என்றிருந்த எண்ணத்தை சிதற அடித்தன. பிளாஸி யுத்த நூற்றாண்டு விழா தினத்தன்று பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவில் தனது சவக்குழியை தேடும் என்ற நம்பிக்கை உடனே ஏற்பட்டது. தேசம் முழுவதும் இந்த நம்பிக்கை பரவ ஆரம்பித்துவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியை குழி தோண்டி புதைத்துவிட மக்களும் உறுதியுடனிருந்ததால் இந்த நம்பிக்கை வலுவடைந்து வந்தது. அசைந்து செல்லும் கப்பலை ஓங்கி அடிக்கும் காற்று எவ்வாறு பிரவாகத்தின் போக்கில் இழுத்துச் செல்லுகிறதோ அதே போல பிரிட்டிஷ் ஆட்சி ஒழிந்துவிடுமென்ற நம்பிக்கையும் மக்களிடையே பரவி பலப்பட ஆரம்பித்தது. பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்கவேண்டுமென்றிருந்த ஆசை, ஆர்வமாகத் தழைத்து, சிப்பாய்களும் தங்களுடன் இதில் சேருவார்களென்றதும் சீரிய லட்சியமாக மாறியது.

என்ன செய்கிறோமென்பதை அறியாமலேயே இங்

திய சிப்பாய்கள் பிரிட்டிஷாருக்கு ஒரு ஏகாதிபத்தியத்தை சிருஷ்டித்துக் கொடுத்து விட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சி உன்னத நிலையை அடைய அடைய சிப்பாய்களின் நிலையோ படுபாதாளத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. "சிப்பாய்கள் தங்கள் எஜமானவர்களுக்கு எந்த வெற்றியை சம்பாதித்துக் கொடுத்தார்களோ, அதே வெற்றி தான் அவர்களின் தாழ்வுக்கு அடிகோலியது."[2] சிப்பாய்களின் பராக்கிரமத்தைக்கண்ட அரசாங்கம் அவர்களிடத்தில் அவநம்பிக்கைகொள்ள ஆரம்பித்தது. "ஒவ்வொரு பட்டாளத்திலும் இரண்டு மூன்று இந்திய ஆபிஸர்கள் இருந்தார்கள். இவர்கள் போரில் ரொம்ப கெட்டிக்காரர்களாக இருந்தால் முழு சம்பளத்தையும் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். சன்மானம் தந்து கவுரவிப்பதாக இதற்கு சாக்குக்கூறி விடுவார்கள். சிப்பாய்கள் அந்த ஆபிஸர்களை நேசிக்கிறார்கள். பிரிட்டிஷ் ஆபிஸர்களுக்குத்தான் ஏகபோக மென்றிருந்த வீரத்தை, இந்திய ஆபிஸர்களிடம் இருப்பதைக்கண்டு வியக்கிறார்கள் என்றால், அந்த ஆபிஸர்களை வீட்டுக்கு உடனே அனுப்பிவிடுவது தான் வழக்கமாக இருந்தது."[3]

இந்த கொள்கையின் பயனாக ஒரு சிப்பாய்க்கு அதிக பட்சமாகக் கிடைக்கக்கூடிய சம்பளம், அதாவது தரைப் படையின் சுபேதாராகிப் பெறும் சம்பளம் ரூ. 174 தான். அதாவது தேர்ச்சியே அடையாத ஒரு வெள்ளைக்கார சோல்ஜருக்குக் கிடைக்கும் குறைந்த பட்ச சம்பளத்தை விட சற்று குறைவுதான். ஸர் ஜார்ஜ் காம்பெலிடம் இதைக்குறித்து வாஜிர்கான் என்பவர் ரொம்ப வருத்

2. டி. ரைஸ் ஹோம்ஸ்: இந்திய சிப்பாய் கலக சரித்திரம் பக்கம் 49.

3. வி. ஜாக்கிமான்ட்: இந்தியாவிலிருந்து வந்த கடிதங்கள் பக்கம் 23.

தத்தோடு கூறினர். இந்த பாரபட்சத்தைக் கண்டு இந்திய சிப்பாய்களே மனமுடைந்து இருக்கிறார்கள் என்று கூறினர். தான் சோல்ஜராக எப்படி ராணுவத்தில் சேர்ந்தாரென்பதையும், அந்த பதவியிலேயே இன்னும், எதிர்காலத்திலும் அப்படியே இருக்கவேண்டிய துர்ப்பாக்கியம் இருப்பதையும் 'வருத்தத்தின் சாயலோடு' எடுத்துரைத்தார். கறுப்பராகிய எங்களுக்கு பதவியில் உயர்வு என்பதே இல்லை" என்று முறையிட்டிருக்கிறார். இதைவிட படுமோசமான நிலை என்னவென்றால் இந்திய சிப்பாயின் சுயமரியாதை ஒவ்வொரு கட்டத்திலும் பிரிட்டிஷாரின் காலடியில் மிதிபடவேண்டியிருந்தது.

"ராணுவ அணிவகுப்பில் இருக்கும் இந்திய சிப்பாய்களை வைவதும், தூஷிப்பதும், வெறுப்படையும்படியான அநாகரிக பாஷையில் திட்டுவதும் பிரிட்டிஷ் ஆபீஸர்களின் சகஜமான வழக்கமாக இருந்துவந்திருக்கிறது."

இந்திய சிப்பாய்க்கு பதவியில் உயர்வுமட்டும் இல்லையென்றில்லை. மற்ற துறைகளிலும் நிலைமை வரவர மோசமாகிக்கொண்டே வந்தது. இந்திய சிப்பாய்கள் தங்களின் உடல் வலியால் பிரிட்டிஷாருக்கு ராஜ்யம் பிடித்துக் கொடுக்கக் கொடுக்க, பிரிட்டிஷ் எல்லையும் வியாபித்துக்கொண்டே வந்தது. எல்லை விஸ்தரிக்க விஸ்தரிக்க சிப்பாய்களும் தங்கள் வீடுவாசல்களை விட்டு வெகுதூரம் செல்லவேண்டி ஏற்பட்டது. தொலை தூரம் செல்லும் இவர்களுக்கு விசேஷப் படி எதுவும் உண்டா என்றால் கிடையாது. சிந்து, பாஞ்சாலம் ஆகிய பிரதேசங்களை பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்ததின் பலனாக சிப்பாய்களுக்கு ஏராளமான பொருள் நஷ்டமேற்பட்டது.

"சம்பள உயர்வு கோரி வேலைநிறுத்தம் செய்வதென அவர்கள் முடிவுசெய்து, சாதாரணமாக அனுமதி கிடைக்குமென நினைத்து ஒரு யூனியனை ஸ்தாபித்தார்கள்."[4]

இந்திய சிப்பாய்களை ஹிந்துஸ்தானத்தில் போராடத்தான் வேலையில் சேர்த்தார்கள் என்றாலும் அடிக்கடி கடல்கடந்த நாடுகளுக்கும் போராட அனுப்பினார்கள். 1824-ல் பரக்பூரில் இருந்த சிப்பாய்கள் பர்மா போக முடியாதென மறுத்தனர். இதைக்கண்டு கோபமடைந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் துப்பாக்கிகொண்டு அவர்களை சுட்டார்கள். வீரமாக நின்று அதை அந்த சிப்பாய்கள் ஏற்றனர். தங்கள் எதிர்ப்புக்கு சிகரமாக மரணத்தைத் தழுவினர் அந்த வீரர்கள். 1856-ல் கவர்னர் ஜெனரல் 'பொது ராணுவ திரட்டல் சட்ட'மென ஒரு சட்டத்தை பிறப்பித்ததும் சிப்பாய்கள் மன முடைந்து போயினர். ராணுவத்தில் சேரும் யாரும், எங்கு போகவேண்டுமென்றாலும் போகமாட்டேன் என்று மறுக்கக்கூடாது என்று அந்த சட்டம் கூறியது. இந்த சட்டத்தின்மூலம் அரைநொடியில் இந்திய ராணுவமென்பது ஏகாதிபத்திய ராணுவமாக ஆக்கப்பட்டது. வங்காளத்திலிருந்த சிப்பாய்கள் தன்னிச்சைப்படி இலவசமாக கடிதங்கள் எழுதிக்கொள்ளலா மென்றும், பிரயாணம் செய்யும் போது சுங்கக் கட்டணம் கட்டவேண்டா மென்றும் விதிவிலக்கிருந்தது. ரொம்பக் காலமாக இருந்துவந்த இந்த சலுகையை திடீரென ரத்து செய்தார்கள். இதைவிட மற்றொரு காரியம் செய்ததுதான் அவர்களை ஆத்திரமடையச் செய்தது. அதுதான் அவர்களை கிறிஸ்தவர்களாக்க முயற்சிசெய்தது. "தன் மதத்தைவிட்டு கிறிஸ்துவ மதத்துக்கு வருகிற சிப்பாய் எவருக்கும் ஹவில்தார் பதவி வாங்கித் தருவதாகவும், ஹவில்தார் மதம் மாறி வந்தால்

4. டபிள்யூ. பாரஸ்ட்: "சிப்பாய் கலக சரித்திரம் பக்கம் 20.

சுபேதாராக்குவதாகவும், சுபேதாரை மேஜராக்குவதாக வும் ஐரோப்பிய ஆபீஸர்கள் சிப்பாய்களிடம் கூறிவந் தார்கள்" [5] என்று கூறப்பட்டிருக்கிறது. இக்கார ணங்களும், இதர காரணங்களும் உதாரணமாக துப்பாக் கிக்கு கொழுப்புத் தடவுவதற்காக என்று கூறப்படுவை களுமாக சேர்ந்து இந்திய சிப்பாய்களை ஆத்திரமடையச் செய்தன. "இந்திய சிப்பாயின் துயர்களை படிப்படியாக நாம் குறைக்காவிட்டால், அவனே அவற்றைக் குறைக்க முன்வந்துவிடுவான்" என்று ஸர் ஹென்ரி லாரன்ஸிடம் ஒரு சிப்பாயே கூறியிருக்கிறுன்.

அயோதியை வஞ்சகமாகவும் திடீரெனவும் பிரிட்டி ஷார் தங்களுடன் சேர்த்துக்கொண்டதும் இந்த ஆத்திரம் பன்மடங்காகியது. சிப்பாய்களின் தாயகம் அயோதி. வங்க ராணுவத்திலிருந்த சிப்பாய்களில் ஐந்தில் மூன்று பகுதியினர் ராணுவப் பயிற்சிக்காக அயோதியிலிருந்து தான் திரட்டப்பட்டார்கள். இப்படியாக சிப்பாயின் தேசீய உணர்ச்சி இதனுல் புண்பட்டது. சில்லரைத் தேவைகளைப்பற்றிய புகார்களை சிப்பாய்கள் மறந்து விட்டனர். இதயத்தின் மாபெரும் ஆர்வத்தை எப்படி நிறைவேற்றுவது என்பதை சிந்திக்கத் தலைப்பட்டுவிட்ட னர். சுதந்திரத்தின் பரிசத்தை உணர அவர்களின் உள்ளம் துடித்தது." [6] மொகலாய சக்ரவர்த்தியும்,

---

5. ஒரு வங்காளி எழுதிய **இந்திய புரட்சிக்கு காரணங்கள்** (1857)

6. அயோதி சமஸ்தான ராணுவத்தை முதலில் கலைத்த பின்னரே சமஸ்தானத்தை பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்தனர். இதனுல் 60,000 பேர் வேலையின்றி தவிக்க நேரிட்டது. பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த சிப்பாய்களின் உறவினர்களே இவர்கள். தங்கள் உறவினர்கள் வேலையில்லாமல் அவதிப்படுவதைக்கண்ட சிப்பாய்கள் துடிதுடித்தார்கள்.

நானா சாகிபும், அயோதி பேகமும் இந்திய வீரர்களின் மரியாதைக்குரிய வீரர்கள். பாரம்பரியமாக இவர்களைக் கண்டு இந்திய ராணுவ வீரர்கள் வணங்கி வாழ்த்துவது மரபு. பிரிட்டிஷ் ராணுவத்திலிருந்த இந்திய சிப்பாய்களின் உள்ளத்திலே அரும்பிய சுதந்திர ஆர்வக் கொடி, இத்தலைவர்களை சுற்றிசுற்றி வந்தது. பழக்கப்பட்ட செவிகளில் புரட்சியின் இரைச்சல் லேசாகக் கேட்கிறது என்று புலப்பட்டது.

ஏற்கெனவே அதிருப்தி கொண்டிருக்கும் இனங்கள் மும்முரமடைந்தன. அவர்களின் செல்வாக்கால், பேரிடியான புரட்சி வெகு சீக்கிரத்தில் குமுறுவது துரிதப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்க யந்திரம் 'போதிய திறமையோ, போதிய சக்தியோ' கொண்டிருக்கவில்லை. புதிதாக பிரதேசங்கள் சேர்க்கப்பட்டால் அதை சமாளித்து நிர்வகிக்க முடியாமல் அது திணறியது. 'மனக் கசப்பால், விவசாயிகள் கிளர்ச்சி பல எழுந்தன' என்று கர்னல் மால்லஸன் கூறுகிறார். அநேக ஜில்லாக்களில் ஓயாது கிளர்ச்சி இருந்துவந்தது. பிரிட்டிஷ் ஆட்சிக்கு இந்த ஜில்லாக்கள் மனமுவந்து அடங்கவே இல்லை. மூலைக்கொருபக்கமாக இந்த புரட்சி ஒலிகள், ஒன்றுபட்ட புரட்சி சங்கநாதத்துக்காக காத்திருந்தன.

அரசாங்க நிர்வாகக் கோளாறு எப்படி இருந்தது என்பதை ஹோல்ட் மெக்கன்ஜி எடுத்திருந்த பிரஸித்தி பெற்ற குறிப்பு விகசிதமாக தெளிவுறுத்துகிறது :

"ஜனங்கள் எந்த அமைப்பில் இருந்தார்களோ அந்த அமைப்பை நாம் ஏற்காமல், அவர்களை பொருத்தமற்ற நிலையில் பிரித்தும், அவர்களுக்குப் புறம்பான சட்டங்களை அவர்கள்மீது விதிப்பதற்காக அவர்களை சிதைத்தும் நாம் காரியங்களை

நடத்தினோம். வேண்டுமென்றே அவர்களது சொத்துகளையும் உடைமைகளையும் வர்ணிக்க முடியாத குழப்பத்தில் சிதறடித்தோம். சட்ட நீதிப்படி ஆராய்ந்து, நீதிபரிபாலன முறைப்படி வரி விதிக்காமல் புது முறையில், வரி பற்றி எவ்வித ஞானமும் இல்லாமல் வரி விதித்தோம்.''

பழைய நாட்கள், பழக்கமான முறைகள் எல்லாம் தொலைக்கப்படுவதைக் கண்ட இந்திய அதிகாரிகளும் ஜனங்களும் பெரிதும் வருந்தினார்கள். மறைந்த நாட்கள் தான் மகா சிலாக்கியமான நாட்களாயிற்றே! அந்த நாட்கள் கண்ணியம் நிறைந்தது, கவுரவம் கொண்டது, பாரம்பரிய உயர்வில் நிகரற்றது என்று அதிகாரிகள் நினைந்து உருகினர். பட்டாடைகளும், பல வர்ண பாதரக்ஷைகளும், கண் கவர் தலைப்பாகைகளும், ராஜகம்பீர ஹுக்காவும், அளவோடுகூடிய புன்முறுவலும், தாடிகளை வருடிவிடும் விரல்களின் கோலாகலமும், சர்க்கார் அறிக்கைகளில் காணப்படும் வரட்சியைப் போக்க கலைப் பண்போடுகூடிய நாசுக்கும், பொருள் செறிந்துள்ள கூடார்த்த சொல்லடுக்குகளும் இப்போது மறைந்தொழிகின்றன என்பதைக் காண மனம் வருந்தினார்கள். வருத்துவதையும், மக்களிடம் அண்டாமல் விலகி நிற்பதையும் தொழிலாகக் கொண்ட அந்நிய அதிகாரிகள் தங்களிடம் இப்பொழுது முளைத்திருக்கிறார்க ளென்பதைக் காண ஆத்திரமடைந்தனர். ஆங்கிலேயர்களில் சிறந்த குணமுடையவர்களான பெர்ட், தாம்ஸன் போன்றவர்கள் கூட, சிப்பாய் காவலாளர்களை சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் அவமானப்படுத்தி மனதைப் புண்படுத்தியிருக்கிறார்கள்!

"எங்கள் துன்பமும் இன்பமும் அவர்களுக்கு அல்ப காரியமாகத் தோன்றியது. களைப்புற்ற ஒரு

வன் எவ்வாறு சிறு பூச்சிகளை துச்சமாக மதித்து பார்த்து நிற்பானே, அதேபோல எங்கள் வாழ்வைக் கண்டு அலட்சியமாக இருந்தார்கள். அவர்களின் அன்பற்ற அந்த இரக்கம், புராணங்களில் கூறப்படும் கொடூரத்தைவிட மகாக் கொடூரமாக இருந்தது."

பிரிட்டிஷாரிடம் நீதி, போலீஸ், ரெவின்யூ இலாகாக்களில் வேலைபார்த்த இந்தியரில் முதியவர்கள், முக்கியமாக உயர்ந்த குடும்பங்களிலிருந்து வந்தவர்கள் புரட்சி இயக்கத்துக்கு அனுதாபம் காட்டினார்கள். உடலில் வலுவிருந்தவர்கள் புரட்சி இயக்கத்தில் இரண்டறக் கலந்தனர். புரட்சிக்காரர்களின் திட்டங்களை ரகசியமாக வைக்க உதவி செய்தனர்.

புகைந்துகொண்டிருக்கும் புரட்சித் தீயை பொருளாதார சீர்கேடும் கிளறிவிட்டது. நிலம் எவ்வளவு நாளுக்கு தம்மிடம் சொந்தமாக இருக்குமென்ற நிச்சயமற்ற நிலைமைவிவசாயிகளிடைஏற்பட்டிருந்தது. தனிப்பட்டவர்கள் நிலபுலம் வாங்கினால் அதை செல்லாதெனபிரிட்டிஷ் அதிகாரிகள் கூறினர். எந்த நியாயப்படி இதைச் செய்தார்கள் என்றில்லை. கோர்ட்டுகளின் உத்தரவுகளைக்கூட மீறினார்கள். மயின்புரி ராஜாவுக்கு 158 கிராமங்கள் சொந்தமாயிருந்ததில் 116 கிராமங்களை பிரிட்டிஷார் பறித்ததை உதாரணமாகக் கூறலாம். அதே பகுதியைச்சேர்ந்த மற்றொரு ராஜாவுக்குச் சொந்தமாயிருந்த 216 கிராமங்களில் 138 கிராமங்களை பறித்தனர். இன்னும் மேற்கொண்டு கிராமங்களை பறிப்பதற்காக, கோர்ட்டார் உத்தரவை நிறைவேற்ற வேண்டாமென்று கூட கலெக்டருக்கு உத்தரவு பிறப்பித்தனர்.

சுவீகாரம் எடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது. நிலச்சுவான்தார்கள் விஷயத்தில் இது செல்லுமென்றுசொல்லி

அநேக நிலச்சுவான்தார்களை வாரிசு அற்றவர்களெனச் செய்தார்கள். மூத்த பிள்ளைக்கே வாரிசு என்பதை அங்கீகரிக்க மறுத்து, ஜங்கம சொத்துக்களை எல்லாம் வாரிசுதார்களுக்கு சரிசமமாக பங்கிட்டுக் கொடுத்தனர். இதன் விளைவு பணக்காரர்களை நாளாவட்டத்தில் ஒழித்து, அவர்களை வறியர்களாக்கினது. இந்த முறையை வரிச்சுமை துரிதப்படுத்தியது. பாறைக்கடியில் எறும்பை வைத்து நசுக்குவதைப்போல வரிப்பளு வதைத்தது. பாடலிபுரம் ஜில்லாவில் 136 பேரை வரி கொடுப்பதற்கு ஈடாகக் கொண்டுபோய் குதிரைப்படையில் சேர்த்தார்கள். மற்றும் 22 பேரை பிடித்துக்கொண்டுபோய் போலீஸ் வேலைக்கு லாயக்கென வைத்தார்கள்!

வடமேற்கு மாகாணங்களில் நிலத்தீர்வை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. சர்க்காருக்கு மொத்த வருமானத்தில் 66⅔ சத விகிதம் வரியாகப் போய் விடவேண்டும். 18 சத விகிதம் வரி வசூலிக்கிறவர்களுக்குக் கொடுக்கவேண்டும். நில சொந்தக்காரருக்கோ 15⅓ சத விகிதம்தான் லாபமாகக் கிடைக்கும். கொடூர சித்தம் படைத்த லேவாதேவிக்காரர்களிடம் இவ்வாறாக நில ஆதிக்கம் சென்றது. இவர்களை ஜனங்கள் எவ்வாறு வெறுத்தார்களென்பதற்கு 1857-ல் மூண்ட புரட்சியில் உதாரணம் இருக்கிறது. "இந்த லேவாதேவிக்கார கூட்டமே பூண்டறுக்கப்பட்டது. அநியாயமாக நிலங்களை குத்தகைக்கு எடுத்தவர்களும் வாங்கினவர்களும் அந்நிலங்களிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டனர். இவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கொலைக்கும் ஆளாகி இருக்கிறார்கள்."

அயோதி தாலுக்தாரர்கள் பட்ட நஷ்டம் ரொம்ப அதிகம். அயோதியை பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்க்கும்போது 25,543 கிராமங்கள் இவர்களிடம் விடப்பட்டது.

இதில் 23,640 கிராமங்கள், ரூ. 35,06,519 கட்டவேண்டும். 11,903 கிராமங்கள் சாதாரண ஆட்களிடம் ஒப்படைக்கப்பட்டன. இவை ரூ. 32,08,319 கட்டவேண்டும். இந்த தாலுக்தாரர்கள் தம்வசமிருந்த கிராமங்களில் நேர்பாதியை புரட்சியின்போது இழந்துவிட்டனர். சில தாலுக்தாரர்கள் வசம் நிலமே இல்லாமலும் போய்விட்டது. விவசாயிகள் இதனால் லாபமடைந்தார்களே என்பதை ஸர் ஹென்ரி லாரன்ஸ் அறியவில்லை. வரிச்சுமை தாளாது விவசாயிகள் ஆத்திரமடைந்து எழுந்தார்கள். புரட்சி ஆரம்பமானதும் ஸர் ஹென்ரி இவ்வாறு கூறினாராம்: இந்தியாவை இந்த நிலைமைக்குக் கொண்டுவந்தது ஜான் லாரன்ஸுகளும், தாம்ஸன்களும் எட்மன்ஸ்டன்களும்தான்' என்று அவர் ஆத்திரப்பட்டிருக்கிறார்.

நிலத்தீர்வை விஷயத்தில் இவ்வளவு குழப்பமும், நீதி பரிபாலன விஷயத்தில் ஓரவஞ்சகமும் இருந்தது நல்லதாகவே ஆயிற்று. நிலம் வைத்திருப்பவர்கள் அப்பொழுது 30, 40 வட்டி தருவதாகக் கூறினால் கூட கடன் வாங்க முடியாது. சர்க்காரின் நாணய செலாவணிக் கொள்கையோ எரியும் தீயில் எண்ணெய் வார்ப்பதாக இருந்தது. 1825-லிருந்து 1854-வரை விலைவாசியின் இறக்கத்தால் இந்தியாவில் மந்தநிலைமை உச்ச நிலையில் இருந்ததென புரபஸர் தாமஸ் கூறுகிறார். 'செலாவணி நாணயமுடையும், புதுமுறையான பொருளாதார மாற்றத்தால் ஏற்பட்டிருந்த நாணயத்தேவையுமே இதற்குக்காரணம்.'[7] 1850-ல் உலகத் தேவையை ஒட்டி வெள்ளி உற்பத்தி இல்லை. 1835-ம் ஆண்டிலிருந்தே இந்தியாவின் நாணய அடிப்படை வெள்ளி ரூபாய் அடிப்படைக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. ஆகவே போதிய பணப்புழக்கமில்

7. பொருளாதார சரித்திர ஆராய்ச்சி 1936.

லாமல் இந்தியா கஷ்டத்துக்குள்ளாகியது. ஜனங்கள் சர்க்கார் வசம் பணம் மில்லை—வற்றிப் போய்விட்டது என்று சொல்லியதில் வியப்பொன்றுமில்லை.

வெள்ளைக்கார ஆட்சியின் தன்மை இந்தியரை தாள முடியாததாய் செய்தது. தொலைதூர விளைவுகளை ஏற்படுத்தியது. ஈவு இரக்கமற்ற கொடூரங்கள் நடந்ததினால் துன்பம் சூழ்ந்தது. ஆதிவாசிகளின் நிலைமையை ஆராய்ந்தால் நன்ருக இருக்கும். மலைப்பாங்கான பிரதேசத்தில் வாழும் அவர்களையும் பிரிட்டிஷ் ஆட்சியின் கொடூரமான கரங்கள் வளைத்தன. அவர்களின் நீண்ட கால சரித்திரத்திலேயே முதல்தடவையாக படையெடுப்புக்கும் அடிமை வாழ்வுக்கும் உள்ளானூர்கள். பாரம்பரியமாக அவர்கள் அனுபவித்து வந்த உரிமைகள் உதாசீனப்படுத்தப்பட்டன. 'நாகரிக' முதிர்ந்தவர்களென அழைத்துக் கொள்ளும் பிரிட்டிஷார் ஏற்படுத்தின கோர்ட்டுகள், சட்டங்கள், வரிகள் முதலியவையெல்லாம் இவர்களுக்கு புதியனவாக இருந்தன. தங்களின் சுதந்திரத்தையும் பொருளாதார உரிமைகளையும் காக்க ஆதிவாசிகள் வீரப்போர் புரிந்தனர். 1789-ம் ஆண்டிலேயே தாமர் பிரதேச ஆதிவாசிகள் புரட்சிசெய்ய தலைப்பட்டனர். பல ஆண்டுகள் வரை இது ஓயவில்லை. 1794, 1811,1817,1820, 1832 ஆகிய வருஷங்களிலும் இவர்களின் புரட்சி நடந்திருக்கிறது. ஸ்ரீ பிளன்ட் என்னும் கவர்னர் ஜெனரல் கவுன்ஸில் அங்கத்தினர் எழுதியிருக்கும் குறிப்பில், கடைசி இருவருஷ புரட்சிகளுக்குக் காரணம், அநியாயமாக இவர்களிடமிருந்த நிலங்களைப் பறித்தது தான் என்று கூறினூர். இந்தப் புரட்சிகளை அடக்கி இவர்களை முடிவில் அடிமைத்தனத்துக்குக் கொண்டுவிட்டனர்.[8]

8. முண்டாஸ் என்னும் நூலில் சரத் சந்திரராய் எடுத்துக் காட்டியிருக்கிறூர்.

ஆதிவாசிகளுக்கு ஏற்பட்ட கதியே சமுதாயர் என்ற வகுப்பாருக்கும் ஏற்பட்டது. 1854-ம் ஆண்டில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. இதன் விளைவாக எங்கும் கவ்வியிருந்த கவலை தோய்ந்த மேகக் கூட்டம் சிறிது கலைவுற்றது. நம்பிக்கையும் வீரமும் தலைதூக்கின. மலைப் பாங்கு பிரதேசத்தில் 200 மைல் தூரம்வரை ரயில்பாதை போடப்பட்டது. இந்த ரயில்பாதை போடுவதற்காக அப்பிரதேச வாசிகளை வேலைக்கு அமர்த்தினார்கள். ஆண், பெண், குழந்தை குட்டிகளுக்கெல்லாம் வேலைகிடைத்தது. நிலச்சுவான்தார்களிடமிருந்து விடுதலை கிடைத்தது. 1855-ம் வருஷம் சிறந்த வருஷமாக விளங்கியது. பயிர் பச்சைகள் நன்றாக விளைந்தன. அறுவடை மிக அதிகமாகயிருந்தது. செழுமை பூத்தது. ஒடுக்கப்பட்ட வகுப்பார் சுதந்திரவாழ்வில் நாட்டங்கொள்ள ஆரம்பித்தனர். உடனே தங்களது பூர்விக ஆயுதங்களான அம்பையும் வில்லையும் எடுத்துக்கொண்டு சுமார் 30,000 பேர் கல்கத்தா நோக்கி படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். பிரிட்டிஷ் ஆட்சியின் ஏஜண்டுகள் மீது அவர்களின் சீற்றம் முதலில் பாய்ந்தது. நாராயணபுரி ஜமீந்தார் உள்பட பலபேர் இவர்களின் ஆத்திரத்துக்கு இலக்கானார்கள். இந்த ஜமீந்தாரின் கால் கையை வெட்டி 4 அணுவுக்கு ஏலம் கூறினர். தொடை 8 அணு, புஜங்கள் 12 அணு, தலை பெருந்தொகை என்றனர். சர்க்கார் இந்த புரட்சிக்காரர்களை மிருகவெறி கொண்டு அடக்கியது. 10,000 புரட்சி வீரர்களை கொலைசெய்தது. இப்படியாக தீப்பொறிபோல கிளம்பிய சுதந்திர ஜோதி அணைக்கப் பட்டது.

பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்திய வாழ்வின் தெம்பையே நாசப்படுத்தியது. பிரிட்டிஷ் ஆட்சியின் சமூக அமைப்பு அம்சமோ இந்திய

வாழ்வையே சீர்குலைத்தது. டல்ஹவுஸி காலத்தில்தான் இது மோசமான நிலையை அடைந்தது. 8 வருஷ காலத்தில் 7 பிரதேசங்களை இவர் பிரிட்டிஷ் ஆட்சியில் சேர்த்தார். இந்தியர் ராஜீய, நிர்வாக செயல் திறனைக் காட்ட இனி வழியில்லை என்ற நிலைமை வெகு துரிதமாக ஏற்பட்டு வந்தது. பிடிபட்டிருக்கும் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதிலும், நிலக்குத்தகை முறையை அப்பிரதேசங்களில் கையாள்வதிலும் செய்த காரியங்களின் பலனாக, முக்கியஸ்தர் என்ற புகழோடு இருந்த இந்தியரெல்லாம் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள். ஜனங்களுக்கும் ஆளுகிறவர்களுக்கும் இருந்துவந்த உடன்பாடு எல்லாம் டல்ஹவுஸின் சட்டத்தின் கீழ் மிதிபட்டன. சுதேசிகளின் பழக்க வழக்கம், மத ஆசாரம் இவைகளுக்கு ஒத்தவகையில் சட்டங்கள் இருக்கும் என்றார்கள். ஆனால் நடைமுறையோ இதற்கு நேர் விரோதமாக இருந்ததாக பெரும்பாலான இந்தியர்களுக்குத் தோன்றியது. ஸர் வில்லியம் லீ—வார்னர் என்பவர் கீழ்வருமாறு எழுதினார் :

"1857-க்கு முன் 8 வருஷங்களில், சாதாரண ஒரு ஹிந்துவுக்குக்கூட, மேலைய நாகரிகம் என்றால் என்ன என்பது மிகத் தெளிவாகப் புரிந்துவிட்டது. இதுமாதிரி முன்பு எந்த சமயத்திலும் இப்படி ஏற்பட்டதே கிடையாது." [9]

சமூக சீர்திருத்தம் என்பதற்கு அரசாங்கத்தை பயன்படுத்தினார்கள் என்பதைக் கண்டுமட்டும் ஹிந்துக்கள் கலவரப்படவில்லை. மேலைய முறைகளின் உள்ளக்கிடக்கை என்ன என்பது நாளாவட்டத்தில் தெரிய ஆரம்பித்ததும்தான் அவர்களின் மனம் துன்பப்பட்டது. கிழக்

9. டபிள்யூ லீ-வார்னர் - டல்ஹவுஸின் சரிதம்

கிந்திய கம்பெனி டைரக்டர்களின் தலைவரான ஸ்ரீ. மாங் கல்ஸ் இதை காமன்ஸ் சபையில் கீழ்வருமாறு எடுத் துரைத்திருக்கிறார் :—

"கிறிஸ்துவின் கொடி இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிவரை வெற்றிக்களை யுடன் பறப்பதற்காக, பரந்து கிடக்கும் ஹிந்துஸ் தான் ஏகாதிபத்தியத்தை ஆண்டவன்தான் இங்கி லாந்துடன் ஒப்படைத்திருக்கிறார். ஆகவே இந்தியர் அனைவரையும் கிறிஸ்துவர்களாக்கும் மகத்தான காரியத்தில் எக்காரணத்தை முன்னிட்டு தயக்கம் ஏற்படாதவாறு அனைவரும் முழுமனதுடன் பாடு பட்டாகவேண்டும்."

பஞ்சம் தலைதூக்கி நின்ற 1837-ல் கிறிஸ்துவ மதத் தில் சேர்ந்தால் அனாதைக் குழந்தைகளை ரக்ஷிப்பதாகக் கூறினார்கள். இதைக் கண்ட வடமேற்கு மாகாணங்கள் பூராவும் இதுதான் அரசாங்கத்தின் திட்டத்துக்கு உதா ரணம் என்று இடித்துக் கூறின. 1856-ல் இந்தியாவி லிருந்த பாதிரிகள் ஒரு பிரகடனம் வெளியிட்டார்கள். எல்லா ஜாதியினரையும் ஒரே மதத்தில், கொண்டுவரும் நோக்கத்திற்கு உதவி செய்யவே, ரயில்வேக்களும் கப்பல் போக்குவரத்தும் மறைமுகக் கருவிகளாக ஏற்பட்டிருக் கின்றன என்று அப்பிரகடனத்தில் கூறினார்கள்.

ஒரு பாபமும் அறியாத ஹிந்து இதைக்கண்டு என்ன நினைத்தான் என்பது ஒருபுற மிருக்கட்டும். ஆனால் வீர முஸ்லிம்கள் இதைக்கண்டு ஆத்திரங் கொண்டனர். சையது அஹமது என்பவர் கிளறிவிட்ட எதிர்ப்பியக்கம் அவர் மாண்ட பின்னரும் உயிருடன்தான் இருந்தது. இனாயத் அலி, விலாயத் அலி என்னும் அவரது சிஷ்யர்கள் அவர் விட்டுச் சென்ற இயக்கத்தை தொடர்ந்து நடத்

தியே வந்தனர். 1847-ல் இவர்களை பாஞ்சாலத்திலிருந்து சர்க்கார் நாடு கடத்தியது. பாட்னுவில் கொண்டுபோய் வைத்தார்கள். அங்கும் நன்னடக்கை ஜாமீன் கட்டும்படி கோரினுர்கள். 1850-ல் ராஜாஷாஹி ஜில்லாவில், அதாவது கீழ் வங்காளத்தில் இவர்களிருவரும் "ராஜத் துரோகத்தைப் பரப்பி வந்ததாக"க் கூறினுர்கள். மறு வருஷம் பாஞ்சால எல்லையில் "ராஜ விரோதமான" காரியத்தை செய்து வருவதாக குற்றம் சாட்டினுர்கள். 1852-ல் பாட்னு மாஜிஸ்டிரேட் கீழ் வருமாறு கூறினுர் :—

"பாட்னுவில் கலவரம் செய்கிற புரட்சிக்காரர்களின் தொகை அதிகரித்துக்கொண்டுதான் வருகிறது. பிரிட்டிஷ் மாகாணமான இந்த மாகாணத்தின் தலைநகரிலேயே, ஜனங்கள் பகிரங்கமாக ராஜத் துரோகத்தைப் பரப்பி வருகிருர்கள். தீவிரவாதிகளான இந்த பித்தர்களுடன் போலீஸாரும் உள் ஆட்களாக இருக்கிருர்கள். இந்தப் புரட்சிக்காரர்களின் தலைவர்களில் ஒருவரான மௌலீ ஆமது—உல்லா என்பவர் 700 பேரை தனது வீட்டில் கூட்டி வைத்து, மாஜிஸ்டிரேட் ஏதாவது துப்பு விசாரிக்க எத்தனித்தால் ஆயுதப் பலம்கொண்டு அம்முயற்சியை தாம் எதிர்க்கப் போவதாகப் பிரகடனப்படுத்தினுர்."[10]

ராஜத்துரோகத்தைப் பரப்புவதிலிருந்து "வஹாபிஸ்" என்பவர்கள் நேரடி நடவடிக்கையைத் தூண்டி வந்தனர்.

மற்ருெரு எதிர்ப்பியக்கப் பிரசாரகரும், ஜனங்களைத் திரட்டுவதில் நிபுணருமான மௌலி ஆமதுஷா என்ற பைஜாபாத் வாசி, அமாவாசை எவ்வாறு கடலலைகளை ஆங்காரத்துடன் எழுந்தடிக்கச் செய்யுமோ அதே

10. டபிள்யூ. டபிள்யூ. ஹன்ட்டர் : இந்திய முஸ்லிம்கள் பக்கம் 22-23.

போல ஜனங்களை பிரிட்டிஷ் ஆட்சிக்கு விரோதமாக ஆக்ரோஷத்துடன் எழச் செய்தார். இவர் வடமேற்கு மாகாணங்கள், அயோதி, ரோஹில்கந்த் ஆகிய இடங்களில்தான் சுற்றுப்பிரயாணம் செய்தாரென்றாலும் இவரைப் பின்பற்றி ஜனங்கள் மானுவாரியாக எழுந்தனர். நீரை நிறைய மண்டி யிருக்கும் கரும் மேகங்களுக்கு எவ்வளவு வல்லமை இருக்குமோ அதேபோல அப்பொழுதைய முஸ்லிம்களுக்கு சக்தி இருந்தது. சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டு அனைவரும் இருந்தனர்

மதவிஷய மிருந்தாலும் இன்னும் பல காரணங்களால் ஜனங்கள் ஆத்திரமடைந்து இருந்தனர். உதாரணமாக கோர்ட் சட்டங்கள் எல்லா வகுப்பு ஜனங்களையும் ஒரு படுபாதாளமான நிலைக்குக் கொண்டுவர முயன்றன. ஸிவில் வாழ்க்கையில் சமத்துவத்தை ஏற்படுத்தினதாக பிரிட்டிஷார் தம்பட்டம் அடித்து வந்தனர். ஆனால் இது ஐரோப்பியர் விஷயத்தில் மட்டும் விதி விலக்கா யிருக்கிறது என்பதை இந்தியர் கண்டு வந்தனர். பிராமணர்களிலும் அதிபிராமணர்களாக ஐரோப்பியர் பாவிக்கப்பட்டனரென்பது இந்தியர் கண்ட உண்மை. வெள்ளையர் என்ற ஜாதிய வெறி நிர்வாக யந்திரத்தையே அப்படியே அப்பிக் கிடந்தது. 1834-ல் பிறப்பிக்கப்பட்ட சட்டப்படி சாதாரண குற்றங்களுக்கு கசை அடி இல்லை என்று ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக சிறை தண்டனை உண்டென, இவ்வாறு வகுத்தனர் :

"30 கசை அடி கொடுக்கவேண்டிய குற்றத்துக்கு 2 வருஷ தண்டனை. அதாவது செஷன்ஸ் ஜட்ஜ் கசையடிக்கு தண்டனை விதித்திருந்தால். மாஜிஸ்டிரேட் 30 கசையடி என்று விதித்திருந்தால் அதற்கு ஒரு வருஷ தண்டனை. உதவி மாஜிஸ்டிரேட் தண்டனைக்கு ஒரு மாத

சிறைவாசம்" இம்மாதிரியான நெறிகெட்ட பாகுபாடு களைக் கண்டதும் ஜனங்களுக்கு ஆத்திரம் மேலிட்டது.

நாகரிகம் என்ற சூறுவளியில் இந்தியா சிக்கியது. ஆனால் பழமைக்கும் புதுமைக்கும் போராட்டம் என்ற சகஜமான உதாரணத்தை இதற்கும் கூறக்கூடாது. ஏனென்றால் பழமையில் விலை மதிக்கொண்ணாத பொருளிருந்தது. புதியதில் அது லவலேசமும் இல்லை. ஆகவே நவீன நாகரிகத்துக்கும் பழம் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கும் இடையே நடந்த சாதாரண சண்டை என்பதில்லை.........குழப்பமான சண்டை. பழம் பெருமை வாய்ந்த மக்கள் தாங்கள் அவமானப்படுத்தப்படுவதாக இதில் நினைத்தார்கள். புரட்சிக்கார பிரகடனம் ஒன்று 'உலகில் மனிதருக்கு முக்கியமாக நாலு விஷயங்களே முக்கியம், அதுவே மதம், ஜாதி, கௌரவம், வாழ்க்கை, இவற்றை மக்கள் காக்கவேண்டும்' என்று அறிவுறுத்தியது. இந்த பிரதான அம்சங்களை பிரிட்டிஷார் எதிர்க்கிறார்கள். ஜனங்களிடம் ஆயுதமிருந்தது. மூன்றுக்கு ஒருவர் வீதம் ஆயுதம் வைத்திருக்கிறார்கள். 1857-ல் அலக்ஸாண்டர் டப் என்பவர் கீழ் வருமாறு எழுதினார்:—

"கடந்த 2 மாதத்தில் பல லக்ஷக்கணக்கான துப்பாக்கிகளும் இதர ஆயுதங்களும் முஸ்லிம்களிடமும் மற்ற சுதேசிகளிடமும் விற்பனையாகி இருக்கின்றன."[11] புரட்சிக்காரர் பிரகடனத்தில் குறிப்பிட்ட அந்த 4 உரிமைகளையும் திரும்பப் பெற ஆயுதங்களைத் தூக்குங்கள் என்று முரசொலிக்க வீரமக்கள் உறுதிகொண்டனர்.

---

11. எ. டப்: "இந்தியப் புரட்சி" பக்கம் 73.

II. சூழ் நிலைமைகள்

1857-ல் புரட்சிக்கு சாதகமாக சூழ்நிலைகள் ஒன்று திரண்டு வந்தன. பிளாஸி யுத்த முடிவின் நூற்றாண்டு விழாவே பிரிட்டிஷ் ஆட்சிக்கு அந்திமக் காலத்தை அடி கோலுவது என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தார்கள். செந்தாமரை போன்ற மர்மமான சின்னங்கள் கைக்குக் கை சென்று வந்தது. இதனால் மக்கள் ஒற்றுமையும் ஒற்றுமையில் பிறக்கும் ஊக்கமும் கிடைத்தன. "'எல்லாம் ரத்தக் கறையாகப் போகிறது' என்று சிப்பாய்களும் விவசாயிகளும் ஒரே குரலில் கூறி வந்தனர். இதைக் கூறும்போது அவர்களின் கண்களில் பொருள் செறிந்த ஒளி தோன்றும்."[12] விதியை முடிவுகட்டும் நாள் நெருங்கிக்கொண்டு வந்தது. தலை உருளும்; ரத்தம் பெருக்கெடுக்கும்; பழம் கணக்குகள் விரைவில் தீர்க்கப் படும்—என்ற மனோ பாவமே எங்கும் நிலைத்திருந்தது. "எல்லாம் ரத்தக் கறையாகப் போகிறது" என்பதே பேச்சு.

சிப்பாய்கள் பெரும் பரபரப்புடனிருந்தார்கள். முக்கியமாக பல வருஷமாக, வங்க ராணுவம் கலகம் செய்யும் நிலையிலேயே இருந்தது. அவர்கள் பொதுஜன லட்சியத்தை மேற்கொள்ளுவதாக இருந்தால் சுதந்திரப் பாதை நேரானதாகவும் லகுவானதாகவும் இருக்கும். ஏனென்றால் பிரிட்டிஷாருக்கு அப்பொழுதிருந்த ராணுவ நிலைமை மகா மோசமாக இருந்தது. 1857-ல் இந்தியாவில் இருந்த பிரிட்டிஷ், இந்திய ராணுவத்தினர் தொகையெல்லாம் முறையே 40,000-மும் 2,15,000-மும்தான். இவை இருந்த விகிதாசாரமாவது:—

12. ஜீ. ஓ. டிரவிலியன்: 'கான்பூர்'.

	வங்கம்	சென்னை	பம்பாய்	மொத்தம்
பிரிட்டிஷ் குதிரைப்படை (பட்டாளங்கள்)	2	1	1	4
பிரிட்டிஷ் காலாட்படை (பட்டாளங்கள்)	15	3	4	22
கம்பெனியின் ஐரோப்பிய காலாட்படை (பட்டாளம்)	3	3	3	9
பீரங்கிப்படை	12	7	5	24
சுதேசிக் காலாட்படை	74	52	29	155
சுதேசி குதிரைப்படை (பட்டாளம்)	10	8	3	21

வங்காளத்திலிருந்த சுதேசிப் பட்டாளத்தின் சராசரி தொகை 1,100 பேர். சென்னை, பம்பாய் முதலிய இடங்களில் ஒரு பட்டாளத்தில் 900 பேர்தான் உண்டு. பிரிட்டிஷ் பட்டாளங்களில் ஒரே விகிதத்தில் 1000 பேர் இருந்தார்கள்.

வங்காளத்தில்தான் பிரிட்டிஷ் ராணுவமே பெரும் பகுதி இருந்தது. இதைக் கீழ்கண்ட விகிதத்தில் வைத்திருந்தார்கள்.

சுதேசி : தற்காலிகப் படை

காலாட்படை	74 பட்டாளம்
குதிரைப்படை	11 ,,
குதிரை பீரங்கிப்படை	4 ,,
பீரங்கிப்படை	2 ,,

சுதேசி : சாசுவதப் படை

குதிரைப்படை	23 பட்டாளம்
சீக்கிய காலாட்படை	7 ,,

ஐரோப்பியர்

காலாட்படை	16 பட்டாளம்
குதிரைப்படை	2 ,,
குதிரை பீரங்கிப்படை	2 ,,
பீரங்கிப்படை	6 ,,

(பீரங்கிப்படையில் 12,000-க்கு மேற்பட்ட இந்தியர் பீரங்கி சுடுபவர்களாக இருந்தனர். ஐரோப்பியர் 6,500 பேர்தான்).

இந்த ராணுவத்தை நூறுக்கு மேற்பட்ட இடத்தில் பிரித்து வைத்திருந்தனர். 40,000 ஐரோப்பிய துருப்புகளில் பெரும் பகுதியை ஏகாதிபத்திய எல்லைகளின் இரு கோடிகளில் வைத்திருந்தார்கள். அதாவது பாஞ்சாலத்தில் சுமார் 20,000 ஐரோப்பிய துருப்புகள் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டிருந்தன. ஐரோப்பிய பீரங்கிப் படையைச் சேர்ந்த பெரும்பாலோரையும் பாஞ்சாலத்தில்தான் வைத்திருந்தார்கள். இந்தியாவின் இதர பகுதிகளில், முக்கியமாக வங்காளத்தில் ஐரோப்பிய துருப்புகளின் தொகை சொல்பமாக இருந்தது. உதாரணமாக அயோதியில் ஒரே ஒரு பட்டாளம்தான் இருந்தது. பல கேந்திர ஸ்தானங்கள், கஜனுக்கள், ஆயுதச்சாலைகள் முதலியவையெல்லாம் சுதேசிப் படைகளின் கண்காணிப்பில்தான் இருந்து வந்தன.

ராணுவ அமைப்பு முறையில், மேல் ஜாதியாரே ஆதிக்கம் வகித்து வந்தார்கள். புரட்சியின் லட்சியத்துக்கு இவர்கள் ஆதரவாக இருந்தார்கள். நிலைமைகள் அனுகூலமாகி வருவதற்கு இதுவும் ஒரு வசதியாக இருந்தது. வங்க சுதேசி ராணுவத்தில் 24,849 பிராமணர்களும் 27,993 ரஜபுத்திரர்களும், கீழ் ஜாதியினர் என்று கருதப்பட்டவர்களில் 13,920 பேரும் முஸ்லிம்கள் 12,416 பேரும் இருந்தனர். கிறிஸ்துவர் தொகை 1,076.

சிப்பாய்கள் இந்த சூழ்நிலையை உணராமலில்லை. அதோடு தங்களின் பலம் என்ன என்பதையும் அறிந்து தான் இருந்தார்கள். புரட்சிக்கார சிப்பாய்களின் ரகசிய அறிக்கை ஒன்று "சிப்பாய்களாகிய நாமனைவரும் ஒன்று

பட்டு விட்டோமானுல் வெள்ளேயர் எம்மாத்திரம்? கடல்போன்றிருக்கும் நம்மில் வெள்ளேயர் ஒரு துளி தண்ணீர் மாதிரி" என்று கூறுகிறது.

"சகோதரர்களே அந்நியராகிய இந்த வெள்ளே யரின் கத்திகளில் போய் முட்டிக்கொள்ளுவது நாமே தான். நாம் மட்டும் எதிர்த்துக் கிளம்பிவிட்டால் வெற்றி நமக்குத்தான் என்பதில் சந்தேகமே கிடையாது. கல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரை எவ்வித எதிர்ப்பு மில்லாமல் முன்னேறிவிடலாம்" என்று சிப்பாய்களின் அறிக்கைகள் முழங்கின. புரட்சிக்காரர்களின் பக்கம் சிப்பாய்கள் சேர்ந்துவிட்டால் சுதந்திரத் தேன் ஊறும்,— செங்கமலம் அதரம் விரித்து மலர்ந்துவிடும். சுதந்திர வேட்கைகொண்ட வண்டினங்கள் அதைச் சூழப் பருக வரும். இந்தியாவின் இதயத் துடிப்பு, பீரங்கிபோல வீறுகொண்டிருந்தது என்று வெள்ளேயர் சொன்ன பாஷையிலேயே நாமும் இக்காலத்தைக் கூறுகிறேம்.

ஹிந்துஸ்தானம் கொதிப்படைந்து, தீ நாக்குகள் நாலாபுறமும் சீறிக் கிளம்பிக் கொண்டிருக்கையில் பிளாஸி யுத்தத்தின் நூற்ருண்டு விழாவை கொண்டாட வெள்ளேயர் ஏற்பாடு செய்தார்கள். கோடைகால அறு வடை சீக்கிரத்தில் நடக்கப் போகிறது, கஜனுக்களில் செல்வம் குவிந்து கிடக்கப்போகிறது. புரட்சிக்காரர் களுக்கு நல்ல வேட்டை கிடைக்கும் என்று நிலேமை இருந்தது! புரட்சிக்காரர்கள் டில்லியை அணுகினதும் சக்கரவர்த்தி, "என்னிடம் செல்வம் கிடையாது. ஊதிய மாக எதையும் எதிர்பார்க்காதீர்கள்" என்று மொழிந் தார். "உங்களிடமிருந்து ஒன்றும் வேண்டாம்; இந்தியா முழுவதிலும் உள்ள வெள்ளேயர் கஜனுக்களே கொள்ளே கொண்டு வந்து உங்கள் பாதாரவிந்தத்தில் சமர்ப்பிக் கிறேம்" என்று சிப்பாய்கள் பதில் கூறினர்கள்.

புரட்சிக்காரர்கள் திட்டம் ரொம்ப சாதாரண மானது :

ஒரு குறிப்பிட்ட தினத்தன்று இந்தியா முழுவதிலும் தாக்குதலை ஆரம்பிப்பது. ஐரோப்பிய அதிகாரிகள் அவ்வளவு பேரையும் கொல்லுவது. சிறைகளை உடைத்து உள்ளே இருப்பவர்களை விடுவிப்பது. சர்க்கார் கஜனுக் களை கொள்ளை கொள்வது. தந்திக் கம்பிகளை வெட்டு வது, ரயில் தண்டவாளங்களை பெயர்ப்பது, வெடிமருந்து, ஆயுதச்சாலை முதலியவைகளை கைப்பற்றுவது.

இந்த திட்டத்தை ஏககாலத்தில் இந்தியா முழுவதி லும் நிறைவேற்றினால் அந்நியன் ஆட்சியின் கோட் டையே ஆட்டங் கண்டுவிடும் என்று எண்ணினார்கள். மேலே குறிப்பிட்ட திட்டங்கள் நிறைவேறியதும், ஜனங்களுக்கு ஒரு கோரிக்கை விடுவது. அதாவது ஜனங்கள் அவ்வளவு பேரும் தங்களின் முழு பலத்தோடு புரட்சியில் ஈடுபடுவது என்று அக்கோரிக்கை கோரும். புரட்சிப் பிரகடனங்கள் சில கிடைத்திருக்கின்றன. அவற்றைப் பார்த்தால் ராஜீய விவேகத்துடனும் மக்களின் மனோபாவம் எப்படி திரும்பும் என்பதையும் புரட்சிக்காரர்கள் தீர ஆராய்ந்தே திட்டம் போட்டிருந் திருக்கிறார்களென்பது தெரிய வருகிறது.

முகலாய இளவரசர் ஒருவர் 1857 செப்டம்பர் 29-ம் தேதி அன்று வெளியிட்ட ஒரு பிரகடனத்தை மட்டும் கீழே தருகிறோம் :

“ ஹிந்துஸ்தானத்திலுள்ள மக்களனைவரையும் அதா வது எல்லா ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் கொடூரமும் மத விரோதமும் கொண்ட வெள்ளைக்காரர்கள் நசுக்கிப் பிழிந்து, வதை புரிகிறார்கள் என்பது இப்பொழுது அனைவருக்கும் தெளிவாகிவிட்டது. தங்களது மத ஆசா ரங்களை பாதுகாக்க வேண்டுமென்ற கருத்தில், வெள்ளை

யர் ஆட்சி ஏற்பட்டதும் தங்களது வீடுவாசல்களை விட்டு வெளிச்சென்ற பல ஹிந்து, முஸ்லிம் தலைவர்கள் வெள்ளையர் ஆட்சியை பூண்டோடு அறுத்தெறிய இது வரை பாடுபட்டு வருகிறவர்கள், அவர்களெல்லாம் பொது நோக்கமான வெள்ளையரை ஒழிப்பது என்பதில், என்னிடம் வந்து தங்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு கூறி விட்டனர். இந்தியாவின் புனிதப்போரில் பங்கெடுக்கவும் தயாராக இருக்கிறார்கள். ஆகவே கீழ்க்கண்ட பிரகடனம் எல்லா மக்களும் படித்து அதன்படி நடக்க வேண்டுமென்பதற்காக பொதுமக்களுக்கு அனுப்பப்படுகிறது. பொது லட்சியத்தில் பங்கெடுக்க ஆர்வமுள்ள கட்சிகளுக்கு வாழ்க்கை நடத்த பணம் இல்லை என்றால், அவர்கள் அதற்கான நித்திய நிதியை நம்மிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். நமது தேச புராதன ஹிந்து, முஸ்லிம் நூல்கள், எதிர்காலத்தை அறிந்து சொல்லும் தீர்க்கதரிசிகள், ஜோசியர்கள், பண்டிதர்கள், இஸ்லாமிய பண்டிதர்கள் முதலியோர் அனைவரும் இந்தியாவில் வெள்ளையரின் ஆட்சி நிலைத்திருக்காது என்றுகூறுகிறார்கள். இதை பொது மக்கள் அனைவரும் உணரவேண்டும். ஆகவே வெள்ளையர் ஆட்சி நீடிக்குமென யாரும் நினைத்திருந்தார்களானால் அந்த நினைப்பை விட்டுவிட்டு என்னுடன் சேர்ந்து அனைவரின் நன்மைக்காகவும் உயர்வுக்காகவும் உழைக்கும் பாதுஷா சர்க்காரில் சேருவார்கள் என்று நம்புகிறேன். அப்பொழுதுதான் அனைவரின் லட்சியமும் நிறைவேறும். இல்லையேல், பொன்னான இந்த சந்தர்ப்பம் நழுவி, பின்னர் அனைவரும் துக்கப்பட நேரிடும். கவிவாணர் ஒருவர் கூறியது போல, "அனுகூலமான நிலைமையை என்றும் கைவிடாதீர்; சந்தர்ப்ப அனுகூலமே வெற்றிக்கனியை தேடித்தரும். இதைத் தவற விட்டால் பின்னர் துன்பத்தால் துடிப்பீர்கள்."

"வெள்ளையர் ஆட்சி நீடிக்க வேண்டுமென்கிறவர்களின் பேச்சைக்கேட்டு யாரும் இப்பொழுதுள்ள நமது கஷ்டங்களே தொடர்ந்து இருக்கும், சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட பின்னரும் இருக்கும் என்று நினைக்கவேண்டாம். ஏனென்றால் புரட்சியின் போது துன்பங்கள் நேருவது சகஜம். சிப்பாய்கள் யாரும் அதிக்கிரமமாக நடந்தார்களென்று யாருக்கும் புகார் இருக்குமானால், அல்லது தங்களது உடைமைகளை சிப்பாய்கள் கொள்ளை கொண்டனர் என்று எவரும் கூறுவார்களேயானால் அவர்கள் நேராக என்னிடம் வந்து சொல்லலாம். அவர்கள் நஷ்டத்தை நான் ஈடுசெய்கிறேன். புரட்சியில் ஏற்படும் குழப்பத்தில் என்னென்ன நஷ்டங்கள் ஏற்படுகின்றனவோ, அவற்றை சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும் பொதுமக்கள் திரட்டிய கஜனுக்களிலிருந்து ஈடுசெய்யப்படும்.

"பகுதி 1 ஜமீந்தார்கள் பற்றி: ஜமீந்தாரி முறையை ஏற்படுத்தினதில் பிரிட்டிஷார் அத்துமீறி வரி விதித்து அநேக ஜமீந்தார்களை அவமானத்துக்கு உள்ளாக்கும் வகையில் அவர்கள்து சொத்துக்களை பொது ஏலம் கூறி துன்பப்படுத்தி இருக்கிறார்கள். ஜமீந்தார் பண்ணை ஆள் ஒருவன் வழக்கு எதுவும் தொடர்ந்தால், தீர விசாரியாமல் உடனே ஜமீந்தார்களை கைது செய்தும் சிறையிலடைத்தும் அவமானப்படுத்தி இருக்கிறார்கள். சிவில் வழக்குகள் எதுவும் ஏற்படும்போது ஸ்டாம்ப் என்றும், கோர்ட் கட்டணம் என்றும் ஏமாற்றும் வார்த்தைகளைக் கூறி இரு தரப்பு தாவாக்காரர்களையும் வெள்ளையர் ஏராளமாக சுரண்டி வறியர்களாக்கி யிருக்கிறார்கள். இதெல்லாமல் பள்ளிக்கூடம் வைத்த பணம், ஆஸ்பத்திரி வைத்த நன்கொடை, ரஸ்தாபோட உபகாரநிதி என்று கூறி அப்போதைக்கப்போது ஏராளமாக பணம் பறித்து வந்திருக்

கிருர்கள். சுதந்திர சர்க்கார் ஏற்பட்டால் இம்மாதிரி யான சுரண்டல் வேலையெல்லாம் நடக்காது. ஜமீந்தார்க ளெல்லாம் சுயேட்சையாகவும், தங்கள் பகுதிகளில் அதிக பட்சமான சுதந்திரத்தைக் கொண்டுமிருக்கலாம். ஜமீந்தார் வழக்குகள் எதுவும் ஏற்பட்டால்,. பழைய ஹிந்து, முஸ்லிம் கோட்பாடுகளைக்கொண்டு எவ்வித செலவுமின்றி சுலபமாகத் தீர்க்கப்படும். இந்தப் புரட் சிக்கு பணமோ ஆட்களோ தந்து உதவுகிற ஜமீந்தார்கள் நாளை சுதந்திரம் கிடைத்தால், சுதந்திர சர்க்காருக்குக் கட்டும் தீர்வையில் கால் பாகத்தைக் குறைத்துக்கொள்ள லாம். பிரிட்டிஷ் ஆட்சியில் ஜமீந்தாரியை இழந்த வர்கள், இப்பொழுது புரட்சியில் நேரிடையாக வந்து பங்கெடுத்துக் கொண்டால் அவர்களுக்கு முன்பிழந்த ஜமீந்தாரிப் பிரதேசம் மீட்கப்படும். அதோடு தீர்வை யிலும் கால்பாகத்தைக் குறைத்துக் கட்டலாம்.

பகுதி 2. வியாபாரிகள்: மத விரோதிகளும் கொடூரக் காரர்களுமான வெள்ளைக்காரர்கள் துணிமணி நவதான்ய முதலிய வர்த்தகத் துறையைக் கைப்பற்றி, கப்பல் வியா பாரம் போன்றவைகளில் ஆதிக்கம் கொண்டு இவைகள் நிலையூன்றியிருக்க சுங்க வரி போன்றவைகளை விதித்து சுரண்டி வருகிருர்கள். இதனால் ஏழை மக்கள் வாழ்க்கை படு பாதாளத்துக்குப் போய்விட்டது என்பது அனை வருக்கும் தெரிந்த விஷயம். இந்திய வியாபாரிகளோ எவ்வித லாபம் இன்றி பெயரளவுக்குத்தான் வியாபாரி கள் என்றிருக்கிருர்கள். இதோடு வியாபாரிகளுக்கு தபால் கட்டணமென்றும், வரி என்றும், நன்கொடை தர வேண்டுமென்றும் பல இடைஞ்சல்களை உண்டாக்கி இருக்கிருர்கள். இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல மற்ருெரு அநியாயமும் இருக்கிறது. தனிப்பட்ட வன் எவனுவது ஒருவன் ஒரு புகார் எழுதிப்போட்டாலும்

இந்திய வியாபாரிகளை சிறையில் தள்ளலாமென்பதே அந்த அநியாயம். சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும் மேற் சொன்ன இந்த அக்கிரமங்கள் எல்லாம் நடக்காது. கடல், தரை பாதை வர்த்தகங்களெல்லாம் இந்திய வியாபாரிகளின் ஏகபோகத்துக்கே விடப்படும். சர்க்கார் ரயில் போட்டு, வியாபாரிகளுக்கு வசதிசெய்து கொடுப்பார்கள். மூலதனம் போதுமானபடி இல்லாதிருக்கும் வியாபாரிகளுக்கும் சர்க்கார் கஜானாவிலிருந்து பணம் உதவி செய்யப்படும். ஆகவே யுத்தத்தில் பங்கெடுத்து, சுதந்திர சர்க்காருக்கு நேரிடையாகவோ, மறைமுகமாகவோ பணமும் ஆளும் தந்து உதவவேண்டியது ஒவ்வொரு வியாபாரியின் கடமையுமாகும்.

பகுதி 3. சர்க்கார் ஊழியர்கள்: பிரிட்டிஷ் சர்க்காரில், ராணுவ, சிவில் துறையில் ஊழியம் பார்க்கும் சுதேசிகளுக்கு வெள்ளையர் மதிப்போ, நிறைய சம்பளமோ செல்வாக்கோ தரவில்லை என்பது ஊரறிந்த விஷயம். சிவில், ராணுவ துறையிலுள்ள பெரிய உத்தியோகங்கள் எல்லாம் வெள்ளையர்களுக்கு போகின்றன. ராணுவத்திலுள்ள இந்தியர் தங்கள் வாழ்நாள் முழுவதும் சேவை செய்தாலும்கூட சுபேதார் பதவிதான் கிடைக்கும். இதற்கு சம்பளமோ 60, 70 ரூபாய்தான். சிவில் இலாகாக்களில் உள்ளவர்களுக்கு, மிஞ்சிப் போனால் 500 ரூபாய்தான் சம்பளம் கிடைக்கும். மற்றெவ்வித சலுகையும் கிடைக்காது. சுதந்திர சர்க்காரிலோ வெள்ளையர் அனுபவிக்கும் கர்னல், ஜெனரல், சேனாதிபதி முதலிய பதவிகளெல்லாம் இந்தியர்களுக்கு அளிக்கப்படும். அதேபடி சிவில் துறையிலும் மாஜிஸ்டிரேட், நீதிபதி, சர்க்கார் காரியதரிசி, கவர்னர் இந்தப் பதவிகளெல்லாம் இந்தியருக்கே வழங்கப்படும். இப் பதவிகளுக்கு லக்ஷ

ரூபாய் வரை சம்பளம் உண்டு. இதல்லாமல் இதர சலுகைகளும் உண்டு.

பகுதி 4. தொழில் நிபுணர்கள்: இந்தியாவில் இங்கிலீஷ் சாமான்களை புகுத்தியதன் மூலம் இந்நாட்டு சிறந்த நெசவாளர்கள், நிபுணத்துவம் வாய்ந்த தையற்காரர்கள், தச்சர்கள், கொல்லர்கள், மற்றும் இதுபோன்ற தொழிலாளர்களை எல்லாம் இடுப்பை ஒடித்து, தரித்திரர் நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறார்கள். ஆனால் சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும் இவர்களெல்லாம் சமஸ்தான தொழில் நிபுணர்களாகக் கருதப்படுவார்கள். இவர்கள் துன்பமெல்லாம் அறவே நீங்கும். ஆகவே இவர்களெல்லாம் வெள்ளையரை உதறித் தள்ளிவிட்டு புரட்சிப் போரில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு தங்களாலியன்ற உதவிகளை செய்வார்களாக. அதன் மூலம் தங்கள் வாழ்வை சுகப்படுத்துவார்களாக.

பகுதி 5. பண்டிதர்களும் பக்கீர்களும்: ஹிந்து, முஸ்லிம் மதங்களின் தர்மகர்த்தர்கள் பண்டிதர்களும் பக்கீர்களும். ஐரோப்பியரோ இவ்விரு மத எதிரிகள். தற்சமயம் இந்த பொது எதிரியான வெள்ளையர்மீது யுத்தம் தொடுக்கப்பட்டிருக்கிறது. மதத்துக்காக இப்போராட்டம் நடக்கிறது. ஆகவே பக்கீர்களும் பண்டிதர்களும் என் முன் வந்து, இந்தப் புனித போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். இல்லையேல் ஹிந்து, முஸ்லிம் மத ஆசாரங்கள் முன் இவர்கள் திரஸ்கரிக்கப்பட்டவர்களாவார்கள். இவர்கள் உடன்படுவார்களானால் சுதந்திர சர்க்கார் ஏற்பட்டதும் நிலபுலம் வழங்கப்படும். இதற்கு இவர்கள் வரி கட்டவேண்டியிராது.

கடைசியாக ஒரு வார்த்தை. இப் பிரகடனம் வெளியானபின்பும், மேற்சொன்ன பிரிவினையில் எவரும் பிரிட்டிஷ்காரர் ஆட்சியில் தொத்திக்கொண்டிருந்தால் அவர்கள்

சொத்துகள் எல்லாம் பறிக்கப்படும். ஆஸ்திகள் கொள்ளை அடிக்கப்படும். அதோடு அவர்களும் அவர்களது குடும்பத்தாரும் மரண பரியந்தம்வரை சிறையிலடைக்கப்படுவார்கள். இதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்."

இவ்வளவு விரிவான பிரகடனத்தை அப்படியே மேலே கொடுத்ததற்கு சமாதானம் சொல்லவேண்டியிருக்காது என்று நம்புகிறோம். ஏனென்றால் காரணம் அதிலேயே தெரியும். எல்லாத் துறைகளில் ஈடுபட்டிருந்தவர்களும் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிருப்தி கொண்டிருந்தார்களென்பதை இப் பிரகடனம் வெளிப்படுத்துகிறது. அதோடு புரட்சிக்காரர்கள் எத்தகைய புது சகாப்தத்தைப் புகுத்த தீர்மானித்திருந்தார்களென்பதையும் விளக்குகிறது. புரட்சிக்காரர்களின் பலம் அதன் வரம்பு இவற்றையும் கூறுகிறது.

III சிப்பாய்க் கலகமா?

புரட்சிக்கு முதுகெலும்பு ராணுவம்தான். எங்கெங்கு இடத்தில் ராணுவம் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாக இருந்ததோ அங்கெல்லாம் புரட்சிக்காரர்களின் எதிர்ப்பு சிறிதாக இருந்தாலும் பெரிய எதிர்ப்பாக இருந்தாலும் அது சொற்ப எதிர்ப்பாகவே தோன்றியது. சென்னை ராணுவம் முற்றிலும் பிரிட்டிஷாருக்கு விசுவாசமாகவே இருந்தது. பம்பாயில் ஹிந்துஸ்தானி பேசும் துருப்புகளைத் தவிர பாக்கி அனைவரும் பிரிட்டிஷார் பக்கமே இருந்தார்கள். தக்ஷணத்தில் இங்குமங்குமாக சிறிது சலசலப்பு இருந்தது. பிரிட்டிஷ் சர்க்கார் இதைக்கண்டு அஞ்சினார்களென்றாலும், உண்மையில் அவர்களுக்குத் தொல்லை எதுவும் ஏற்படவில்லை. வங்க ராணுவத்தினர்தான் வலுகொண்டெழுந்து தீரமாகப் போராடியது. புரட்சிக்கு ஒவ்வொரு பிரிட்டிஷ் இலக்காக பலியிட்டு முன்னேறிவந்தனர். இந்த வங்க ராணுவத்தில் 11 பட்டாளங்கள் மட்டும்தான் பிரிட்டிஷ் சர்க்காரை ஆதரித்தது. பாக்கி அவ்வளவு பேரும் புரட்சித் தீயில் குதித்தனர். புரட்சி சங்கநாதத்தைக் கேட்டு வந்த 32,311 பேரில் கீழ்க்கண்ட விகிதம் இருந்தது:

குவாலியர் 8,401; கோட்டா 1,148; போபால் 829; மால்வா 1617; ஜோதிபுரி 1246.

வங்க ராணுவத்திலிருந்த மத்திய இந்தியத் துருப்புகள் அவ்வளவுபேரும் புரட்சியில் சேர்ந்தனர். ஹைதராபாத்திலிருந்த 8,094 பேரும் மைசூரிலிருந்த 4,000 பேரும் பரோடாவிலிருந்த 3,756 பேரும் ஒன்றும் செய்யாமல் தென்பகுதி ராணுவத்தினர் மாதிரி இருந்துவிட்டனர்.

டில்லி, மிராத், ரோஹில்கந்த், ஆக்ரா, காசி, அலகாபாத், வடமேற்கு மாகாணம், பாட்னு, கோட்டா, நாகபுரி, தெற்கு வங்காளம், ஆஜ்மீர் முதலிய இடங்களில் எல்லாம் ராணுவ சட்டத்தை பிரிட்டிஷார் பிரகடனப் படுத்தினர்களென்பதே புரட்சி எங்கெங்கெல்லாம் பரவி யிருந்தது என்பதை ஒருவாறு விளக்கும். பாஞ்சாலத்தி லும் அயோதியிலும் இருந்த அதிகாரிகளோ, 'ராணுவப் பிரகடனம் பிறப்பிக்கப்பட்ட மாதிரியே நடவடிக்கை எடுத்தார்கள்.' 1857 ஜூன் மாதத்துக்குள் அயோதியிலும் புரட்சிக்காரர் தரப்பில் 25,000 பேர் முழுப் பயிற்சி யுடனிருந்தார்கள். மத்திய இந்தியாவில் 50,000 பேர் இருந் தனர். டில்லி, அயோதி, ரோஹில்கந்த், பண்டல்கந்த் முதலிய இடங்கள் பிரிட்டிஷ் ஆட்சியை நிலைகலங்கச் செய்துவிட்டன. வடமேற்கு மாகாணம், மத்திய மாகா ணம், மத்திய இந்தியா, பீஹாரின் மேற்குப்பகுதி இங் கெல்லாம் கோரப் போராட்டங்கள் நடக்க ஆரம்பித்து விட்டன. இந்தியாவில் புரட்சி கிளம்பிவிட்டது என்ற செய்தி கேட்டதும் இத்தாலியிலிருந்த ஸர் ரிச்சர்ட் டெம்பிள் இந்தியாவுக்கு ஓடோடியும் வந்தார். வந்த உடன் அவர் "பாஞ்சாலத்துக்குப் போக ஒரு ரஸ்தாகூட இல்லை; புரட்சிக்காரர்கள் எல்லா ரஸ்தாக்களையும் அடைத்துவிட்டனர்"[13] என்று செய்தி அனுப்பினர். பாரசீகத்திலிருந்து ஓடிவந்த ஜெனரல் ஹாவ்லக் டில்லிக் குப்போக பாதையே இல்லை என்று எழுதினர். இவர் கல்கத்தாவுக்குக் கடல் மார்க்கமாகத்தான் போய்ச் சேரவேண்டி ஏற்பட்டது.

சில விடங்களில் புரட்சி பெரும் போர் போலவே நடந்தது. "அயோதி, ரோஹில்கந்த், பந்தல்கந்த், ஸாகர்,

13. ஆர். டெம்பிள் : இந்தியாவிலிருந்தபோது நான் பார்த்தவை களும் கேட்டவைகளும் பக்கம் 127.

நர்மதைப் பிரதேசம் இங்கெல்லாம் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து பொது ஜனங்களே வீறுகொண்டெழுந்து புரட்சி செய்தார்கள். நமது ஏகாதிபத்தியத்தில் நாலு மாகாணங்கள் இப்பொழுது ரணகளறியில் இருக்கின்றன. மேற்கு பீஹாரிலும் பாட்னு டிவிஷனைச் சேர்ந்த பல ஜில்லாக்களிலும் ஆக்ரா டிவிஷனிலும் மிராத் டிவிஷனின் பல பகுதிகளிலும் ஜனங்களும் சிப்பாய்களும் ஏககாலத்தில் தாக்க ஆரம்பித்துவிட்டார்கள்."[14]

ரோஹில்கந்த் புரட்சி என்று ஒரே நாளில் கிளம்பியது. "பரீலி, ஷாஜஹான்பூர், முரதாபாத், பூதான் மற்றும் பல ஜில்லாக்களில் ராணுவத்தாரும் போலீஸாரும், பொது மக்களும் பிரகடனங்கள் விட ஆரம்பித்துவிட்டார்கள். பிரிட்டிஷ் ஆட்சியை தொலைத்துக் கட்டிவிட்டதாக அப்பிரகடனங்கள் புரட்சி ஆரம்பித்த சில மணி நேரத்துக்குள் அறிவிக்க ஆரம்பித்து விட்டன! இந்திய மக்களின் ரத்தம் ஒரு துளிகூட இப்பகுதிகளில் சிந்தப்படவில்லை. 'ரோஹில்கந்த் அடிமைப்பட்டிருக்கிறது' என்பதற்குப் பதிலாக 'ரோஹில்கந்த் சுதந்திரமடைந்து விட்டது' என்று கோஷித்தார்கள். 'லட்சியத்தை நிறைவேற்றி விட்டோம்' என்ற முழக்கங்கள் காதை செவிடாக்கின."[15] ரோஹில்கந்த் சாதித்ததை இந்தியாவே சாதிக்கமுடியும் என்று புரட்சி வீரர்கள் கூறினர். அரை நொடியில் காரியத்தை முடிக்கலாமென்றனர்.

யமுனை நதியின் மேற்குக் கரையில் பிரிட்டிஷ் விசுவாசிகளான சில ராஜாக்கள் புரட்சிக்குக் கிளம்பக்கூடாதென மக்களை அடக்கி வைத்திருந்தனர். ஆனால் கங்கை

14. ஜி. பி. மால்ஸன்: இந்திய சிப்பாய்க் கலக சரித்திரம் iii 487.

15. வி. டி. சாவர்க்கார்: விடுதலைப் போர் பக்கம் I. 159.

யின் கிழக்குக்கரை மக்களோ, தோபி நதியோர கிராம மக்களோ பிரிட்டிஷ் ஆட்சியை அப்பகுதிகளில் பூண்டோடு அறுத்தெறிந்தனர். "கங்கை நதிக்கு அப்பாலுள்ள ஜில்லாக்களில் மட்டுமல்லாமல், கங்கை, தோபி நதிகளுக்கு அப்பாலுள்ள பிரதேசங்களிலும் கிராம மக்கள் புரட்சி செய்தனர். பிரிட்டிஷ் பக்கம் ஒரு ஆள் கூட இல்லை. ஹிந்துக்களும் சரி, முஸ்லிம்களும் சரி நமக்கு எதிராகவே இருந்தனர்."[16] அயோதியில் புரட்சிக்குத் தலைமை தாங்கி நின்றது சிப்பாய்கள்தான். எங்கெந்த இடத்தில் சிப்பாய்கள் புரட்சிக்குக் கிளம்பினார்களோ, உடனே அந்த ஜில்லாக்கள் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிடும். "10 நாட்களில் (ஜூன் 4-ம் தேதியிலிருந்து 14-ம் தேதிக்குள்ளாக) அயோதியில் பிரிட்டிஷ் ஆட்சி, கதிரவனைக் கண்ட பனிபோல மறைந்தது. அடையாளமாகக்கூட பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னம்கூட இல்லை. சிப்பாய்கள் புரட்சி என்று கிளம்பினர். மக்கள் அவர்கள் தரப்பில் சேர்ந்தனர். இதில் அதிசயமென்னவென்றால் கொடூரமோ, பாதகச் செயல்களோ எதுவும் நேரமில்லை."[17]

சுதந்திரக் காற்று வீச ஆரம்பித்ததும் அயோதியிலிருந்த மக்கள் அனைவரும் போர்வீரர்களென்று கிளம்பினர். சில நாட்களில் அயோதி எங்கும் ஆயுதந் தாங்கிய மக்கள் காணப்பட்டனர். சிப்பாய்களைத் தவிர போராட்டத்துக்குத் தயாராக 1,00,000 பேர் தயாராக இருந்தார்கள். மாகாண முழுவதும் 1,500 கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. இவையல்லாமல் அநேக கிராமங்

---

16. ஜே. கே. கேய்: இந்தியப் புரட்சி பக்கம் II. 195.

17. ஜி. டபிள்யூ. பாரஸ்ட்: இந்தியப் புரட்சியின் சரித்திரம் பக்கம் I. 217.

கள் கோட்டை கொத்தளங்களாக இருந்தன. எதிரிக்கு இங்கெல்லாம் மிகக் கடுமையான எதிர்ப்பு இருந்தது. "கிராமவாசிகள் சிப்பாய்களைவிட வீரமாகப் போரிடு கிறார்கள்" என்று எச். ஸி. டக்கர் எழுதினார்.

மத்திய இந்தியா எப்படி இருந்தது என்பதற்கு லார்ட் கானிங் எழுதினதே போதுமானதாகும்: "மத்திய இந்தியா நம் கையை விட்டுப் போய் விட்டதென்றே நினைக்கிறேன். மத்திய இந்தியா வேண்டுமானால் திரும் பத்தான் பிடித்தாக வேண்டும்."

இந்தியாவின் சில பகுதிகளில் பிரிட்டிஷ் ஆட்சி எப்படி அடியோடு ஒழிக்கப்பட்டது என்பதை ஒரு முக்கிய உண்மையே விளக்கும். அதாவது கல்கத்தாவி லிருந்த தலைமை சர்க்காருக்கு பிரிட்டிஷ் தளபதிகளிட மிருந்து செய்திகளே நேரிடையாக வர முடியாமற் போய் விட்டது. செய்தி வரவேண்டுமென்றால் தலையை சுற்றி தான், அதாவது டில்லி, ஆக்ரா இங்குள்ளவர்களுக்கெல் லாம் கிடைத்த பின்னர்தான் சர்க்காருக்கு வரவேண்டி யிருந்தது. ஏதாவது ஒரு செய்தி கிடைக்கும் பட்சத்தில் அதை முதலில் லாகூருக்கும், பம்பாயிக்கும் அனுப்பி, பிறகு அங்கிருந்து சுற்றி வளைத்துக்கொண்டு கல்கத்தா அனுப்பி வைப்பார்கள்.

புரட்சிக்காரர்களின் தீரம் மிகுந்ததும், சிறப்பு வாய்ந்ததுமான சாதனைதான் டில்லியைக் கைப்பற்றியது. டில்லி கைக்கு வந்ததும் புரட்சியே புத்துயிர் பெற்றது. தேசப் புரட்சி என்ற கவுரவத்தைப் பெற்றது. "க்ஷண நேரத்தில் புரட்சி சிப்பாய்கள் ஒரு தலைவரைப் பெற்று விட்டார்கள். ஒரு கொடி, லட்சியம் என்றும் ஏற்படுத்திக் கொண்டார்கள். சிறு கலகம் என்ற நிலைபோய், புரட்சி

கரமான யுத்தம் என்ற பெயர் பெற்றுவிட்டது"[18]
புரட்சிக்காரர்களுக்குக் கொடி, தலைவர், கேந்திர ஸ்தான மான டில்லிமா நகரம் முதலியவைகளெல்லாம் கிடைத் ததைவிட மற்றொரு பெரிய வெற்றி கிட்டியது. அது தான் அவர்களுக்கு மிகமிக அவசியமாயிருந்த ஆயுத பலம். டில்லி ஆயுதச்சாலையை புரட்சிக்காரர்கள் கைப் பற்றி விட்டார்கள். 9,00,000 துப்பாக்கிக்கு போதிய குண்டுகளும், பீரங்கிகளும், 10,000 துப்பாக்கிகளும், 10,000 பீப்பாய்கள் நிறைய வெடிமருந்தும் கிடைத்து விட்டன.

டில்லி மக்கள் காட்டின எதிர்ப்பு ரொம்ப ஆக்ரோஷ மாக இருந்தது. வெகு நாட்கள்வரை விடாப்பிடியாக டில்லி மக்கள் போராடி யிருக்கிறார்கள். டில்லிக்குத் தலைவனாக இருந்த ஜான் லாரன்ஸ் என்பவனே 'எதிர் பார்த்ததைவிட நிலைமை மாறி யிருக்கிறது. நம்மால் எதுவும் செய்ய முடியாது' என்று அலுத்துப்போய் கூறினான். இவன் படையெடுத்து வந்தபோது கண்ட எதிர்ப்புபோல இதற்குமுன், மராட்டியர், லார்ட் லேக் ஆகியோர் படையெடுத்து வந்தபோதுகூட அவ்வளவு கடுமையாக இல்லை. பிரிட்டிஷார் பல தடவை தோல்வி கண்டு கடைசியாக டில்லி நகரை ஊடுருவிச் சென்றனர். ஊடுருவி வந்த பிரிட்டிஷாரை ஜனங்கள் வீதிக்கு வீதி நின்று அங்குல அங்குலமாக எதிர்த்து நின்றார்கள்.[19] நகரத்தை பிரிட்டிஷார் ஆக்கிரமித்தும்கூட, சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மக்கள் எதிர்த்து சமர் புரிந்தார்கள். வெற்றி மமதையிலிருந்த வெள்ளையருக்கு இவர்களைப் பார்த்தால் புற்றிலிருந்து கிளம்பும் ஈசல் கூட்டம் போன்று தோன்றியது. "பல கிராமங்கள் ஒன்றுபட்டு

---

18. நீதிபதி மெக்கார்த்தி: **நம்கால சரித்திரம்** பக்கம் 111.
19. ஜான் காம்பெல்: **இந்திய நினைவுகள் ii.** பக். 353.

நிற்கும். கிராமங்களை சுற்றி அகழி, மண்ணால் எழுப்பின சுவர் கொத்தளமாக விளங்கும். இக்கிராமங்களில் ஆயுதந்தாங்கிய கூட்டம் ஆயிரக்கணக்கில் அலை வார்கள்.''

'டைம்ஸ்' பத்திரிகையின் நிருபரான வில்லியம் ஹாவர்ட் ரஸ்ஸல் டில்லியிலிருந்து காசிக்குச் சென்றார். அவர் கூறுகிறார்: "வழியில் சிரித்த முகத்தில் ஒரு ஆள் கூட எங்களைப் பார்க்கவில்லை. வெள்ளையர் வண்டியைப் பார்த்த ஜனங்கள் யாராவது ஒருவர் சிநேக முறையில் பார்ப்பார் என்றால் மருந்துக்குக்கூட ஆளில்லை." கிராம வாசிகள் நெற்றியில்வெள்ளையர் துவேஷத்தின் சின்னமாக செந்நிற திலகம் மிளிர்ந்தது. பீஹார் மக்களோ வெள்ளை யரை அண்டி, அவர்களுக்கு தவறான செய்திகளைக் கூறி வந்தார்கள். பீஹார் மக்களின் இந்த செய்கையால் வெள்ளையர் சரியான நடவடிக்கையே எடுக்க முடியாமற் போனது. அயோதியிலிருந்த புரட்சிக்காரர்கள் எங்கே முன்னேற வேண்டுமென்றாலும் வீசின கையோடு விடு விடுவென முன்னேறுவார்கள். உணவுகொணடு போக வேண்டுமென்ற கவலை அவர்களுக்குக் கிடையாது. ஏனெனில் போகுமிடத்தில்தான் ஜனங்கள் வேண்டிய உணவு கொடுப்பார்களே. சாமான் தட்டுமுட்டுகளைப் பற்றியாவது கவலைப்படுவார்களா என்றால் இல்லை. ஏனெனில் இவர்கள் விட்டுச் செல்லும் சாமான்களை, ஜனங்களே முன்வந்து பத்திரப்படுத்தி வைப்பார்கள். பிரிட்டிஷ் நடமாட்டம் பற்றி இவர்களுக்கு மணிக்கு மணிக்கு தகவல் கொண்டுவந்து கொடுத்தது ஜனங்கள். இவர்களுக்குத் தெரியாத பிரிட்டிஷ் ரகசியமே கிடை யாது. பிரிட்டிஷ் அதிகாரிகளைச் சுற்றி அநேக இந்திய அனுதாபிகள் இருந்தனர். இவர்கள் ஒற்றர்கள்போல இருந்து தகவலை அனுப்பி விடுவார்கள். வெள்ளைக்காரன்

எங்கே போனாலும் இவர்களும் போவார்கள். ஆகவே திடீரென வந்து பிரிட்டிஷார் தாக்கி விடுவார்களென்ற நிலைமையே ஏற்படவில்லை. வாயுவேகத்தில் இந்திய புரட்சி வீரர்களுக்கு பிரிட்டிஷாரின் ரகசிய திட்டமெல்லாம் வந்துவிடும்.

மேற்சொன்ன மாகாணங்களில் புரட்சியில் சிப்பாய்கள் மட்டும் சேரவில்லை; போலீஸாரும், சர்க்கார் சுதேசி ஆபீஸர்களும்கூட போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். பண மூட்டைகள்கூட அசைந்து கொடுத்தார்கள். இதனால் அவர்களின் பிரிட்டிஷ் விசுவாச மனப்போக்கு சிறிது ஆட்டங்கொண்டது. பிரிட்டிஷாரின் கோட்டையான பாஞ்சாலத்தில்கூட ஒரு முக்கிய சம்பவம் நடந்தது. அங்கிருந்த பிரிட்டிஷ் சர்க்கார் 1,000,000 பவுன் கடன் கேட்டது. பொதுமக்கள் இந்தக் கோரிக்கைக்கு இணங்கவில்லை. வெகு நாட்களாகியும், குறிப்பிட்ட தேதி காலாவதியாகியும் இந்தத் தொகை சேரவில்லை. "அமிர்தசரஸ், லாகூர் போன்ற பணக்கார நகரங்களில் 5 லக்ஷம் பவுன் செலுத்த சக்தி கொண்ட பணக்காரர்கள் 100 பவுன்தான் கொடுத்தார்கள். இதே விகிதத்தில்தான் மற்றவர்கள் கொடுத்ததுமிருந்தது."[20] இப்படியாக புரட்சி தேசீய கொந்தளிப்பின் அறிகுறியாக விளக்கியது.

1857-ல் இந்திய சர்க்காரின் வருமானத்தில் 15,000,000 பவுன் பற்றுக் குறையாக இருந்தது. இதற்குக் காரணம் பல கஜானுக்கள் கொள்ளை அடிக்கப்பட்டது, வரி வசூலாகாதது, சர்க்கார் சொத்துக்கள் நாசமானது, இவை யெல்லாவற்றிற்கும் மேலாக புரட்சி என்று கூறினார்கள். இந்தப் புரட்சியை அடக்க 46,000,000 பவுன் என்று

20. ஆட்கின்ஸன்: **லார்ட் லாரன்ஸ்** பக். 81.

கூறி பொதுமக்கள்மீது இந்த பணச் சுமையைசுமத்தினார்கள். புரட்சிக்குமுன் சர்க்கார் கடன் எவ்வளவு இருந்ததோ அதைவிட இப்பொழுது மும்முடங்கு அதனுடன் சேர்க்கப்பட்டது.

புரட்சியால் சர்க்கார் மீதிருந்த நம்பிக்கைப் போய் விட்டது. கடன் பத்திரங்களின் மதிப்பு நூற்றுக்கு 75 வீதம் குறைந்தது. தங்க முலாமின் பளபளப்பு பறி போயிற்று! நிதி நிலைமையை சர்க்காரால் தாங்க முடியவில்லை. 1857 அக்டோபரில் வங்காள பாங்க், சர்க்கார் பத்திரத்தைக்கொண்டு மேற்கொண்டு பணம் ஈட்ட முடியாது என்று கூறியது.

உள்நாட்டு வர்த்தகம் மந்த நிலையை அடைந்தது. இங்கிலாந்திலிருந்து இறக்குமதி இல்லவே இல்லை என்ற நிலைமை எட்டியது. பல விடங்களில் வர்த்தகர்களும் பாங்கர்களும் கடைகளை இழுத்துப் பூட்டினர். அத்தியாவசியமான பொருள்களின் விலை விஷம்போல ஏறியது, முக்கியமாக அரிசி விலைதான் அதிகமாகக் கூடியது. புரட்சியின் கடுமையை உணர்ந்தால் இது ஆச்சரியமான விளைவு அல்ல.

புரட்சி ஆரம்பித்த முதல் பன்னிரண்டு மாதங்களில் யுத்தகளத்தில் வீழ்ந்து மடிந்த சிப்பாய்களின் தொகை 30,000. பிரிட்டிஷாரோடு ஆயுதந்தாங்கி போராடிய சிவிலியன்களின் தொகை 10,000. துப்பாக்கிக்கும் பீரங்கி வாயிக்கும், தூக்குமரத்துக்கும் பலியானவர் தொகை "ரொம்ப ரொம்ப அதிகம்". புரட்சி அடக்கப்பட்ட பின்னர், "காயத்தாலும் கஷ்ட நஷ்டங்களாலும், சட்டப்படி கொடுத்த தண்டனைகளாலும் இரு வருஷ காலத்தில் மாண்ட சிப்பாய்களின் தொகை ஒரு லக்ஷம் என்று கணக்குக் காட்டினர். இவர்களல்லாமல், சாதாரண வீரர்கள் மாண்ட தொகை . இந்தத் தொகையை விட

ரொம்ப ரொம்ப அதிகமென்ருகிறது. வெற்றி பெற்ற வெள்ளேயருக்கும் நஷ்டம் இருக்கதான் செய்தது." [21]

தாய்நாட்டின் விடுதலேயை எண்ணி வீர மரணத்தை ஆரத்தழுவி நின்ற இந்தியாவின் புகழ்மணிகளின் தொகை 2 லக்ஷத்துக்கு மேல். கீழேதரப்பட்டிருக்கும் அட்டவணேயைப் பாருங்கள். இந்தியாவின் கடைசி சுதந்திரப் போராட்டம்தான் இது. இந்த அட்டவணே யில் தரப்பட்டிருக்கும் விவரத்தைப் பார்த்தால் இப் போராட்டம் எவ்வளவு முக்கியமானது என்பது விளங் கும். அட்டவணேயில் தரப்பட்டிருக்கும் நஷ்ட விவரம், உண்மை நஷ்டத்தை குறைத்து ஒன்றுக்குக் கால்வீதம் தரப்பட்டதாகும். எனினும் 1857-ம் வருஷ புரட்சி எவ்வளவு விஸ்தாரமாய் நடந்தது என்பதை இது தெளிவுபடுத்துமென்பது நிச்சயம்.

வருஷம்	யுத்தகளம்	நஷ்டம் பிரிட்டிஷாருக்கு	நஷ்டம் இந்தியருக்கு †
1757	பிளாஸி யுத்தம்	72 *	1000*
1764	பாக்ஸார்	747	2000
1803	அஸேயி	2070,	1,200
1803	லஸ்வாரி	838	1500
1818	காட்கி	86	500
1818	மாஹித்பூர்	797	3000
1843	மியானி	275	6000*
1843	மகராஜ்பூர்	778	3000
1845	பிரோஜ்ஷா	2415	7000
1848	சிலியன் வாலா	2446	5000
1848	கூர்ஜரம்	2400	5000

21. எல். டிராட்டர்: **விக்டோரியா ராணி காலத்தில் இந்தியா** பக். 11. 89.

* காயமடைந்தவர் தொகையும் சேர்த்து. † இந்தியர் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் நஷ்டம் உத்தேசமானதுதான்.

புரட்சிக்கு ஏற்பட்ட ஆள் நஷ்டம், பண நஷ்டம் முதலியவை புரட்சியின் தன்மையை விளக்குவனவாகும். ஐரோப்பிய நாடுகளில் நடந்திருப்பவைகளோடு இவற்றை ஒப்பிட்டோமானால் நம் போராட்டத்தின் அளவையும் உக்கிரத்தையும் அறிய முடியும். புரட்சிக்காரர்கள் 100,000 சதுர மைல் பிரதேசத்தைக் கைப்பற்றி இருந்தார்கள். 38,000,000 பேர் புரட்சிக்காரரின் ஆதீனத்தில் குடிபடைகளாயினர். அதாவது இத்தாலியின் நிலப் பரப்புக்கு சமமாக புரட்சிக்காரர் பிரதேசமும் ஜனத் தொகையுமிருந்தன. லக்ஷ்மணபுரியில் 36,000 பிரிட்டிஷ் துருப்புகளை எதிர்த்து இந்தியர் நின்றனர். செபாஸ்டா போல் முற்றுகையின் போதுகூட 26,000 நாஜிகள்தானிருந்தனர். ஆகவே 1857-ல் நடந்த புரட்சி வெள்ளையர் சொல்லுவது போல 'வெறும் சிப்பாய்க் கலகமல்ல,' சுதந்திரத்துக்காக நடந்த கோரப்போர், நமது பரம்பரையின் வீரசாதனை, நமது வணக்கம் அதற்கு உரித்தாகும்.

IV அரும்பின தேசிய ஆர்வம்

புரட்சியை வெறும் சிப்பாய்க் கலகம் என்று சொல்லி ஒதுக்கித்தள்ளிவிடும் வழக்கம் வெள்ளைக்கார நூலாசிரியர்களுக்கு இருக்கிறது. ஸர் ஜான் ஸிலி என்னும் ஆசிரியர் கூறியிருப்பதை உதாரணத்துக்குப் பார்ப்போம். "தேசபக்தி அற்றது இக்கலகம். சுயநலமிகளான சிப்பாய்கள், சுதேசித்தலைவர்கள் எவருமில்லாமல், பொது ஜன ஆதரவும் இன்றி நடத்தின கலவரம்' என்று கூறுகிறார். சரித்திரப் புகழ்வாய்ந்த மகத்தான சம்பவத்துக்கு இம்மாதிரியான பெயர் கொடுப்பது என்பது இயலாத காரியம். பல சக்திகள் நாலா ஒரு பக்கம் முண்டிக்கொண்டு இழுத்தாலும், சக்தியிலிருந்து உருவகப்படுவது உருவகப்பட்டுதான் தீரும். பலர் பலவித கருத்துப்படி நடப்பார்களென்றாலும், அடிதளத்தில் வட்டமிட்டு ஓடும் உள்ளுணர்வே சக்திகள் சிதறுவதை ஒரு கட்டத்தில் உருவகப்படுத்தி ஆட்கொள்ளும். ஆகவே புரட்சியிலிருந்து பிறந்த நானுவகை ஒலிகள் என்ன, பின்னர் அவற்றை ஒரே கோட்டில் இழுத்துச் சேர்த்த அந்த காணுமிர்தம்தான் என்ன ?

புரட்சிக்கு மூல புருஷர்களாக விளங்கியவர்கள் சிப்பாய்கள்தானென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவின் அடிமைத் தளையை தகர்த்தெறிவதில் ஏற்பட்ட இன்னல்களை அவர்கள்தான் ஏற்றார்கள். சர்க்கார் மீதிருந்த கொதிப்பு, நானுபக்கம் சிதறி புசுபுசுத்துவிடாமல் தடுத்து உருவாக்கியது அவர்கள்தான். எதிர்ப்பு என்பதற்கு முதுகெலும்பாய் நின்றவர்கள், வாளுக்கு வாளாகவும் கேடயத்துக்கு கேடயமாகவும் விளங்கியவர்கள் வீர சிப்

பாய்கள்தான் என்பதில் ஐயயில்லை. தங்களின் முக்கியத்தை அவர்கள் உணர்த்த முயன்றார்கள். பண்டா என்ற இடத்தில் தமுக்குப்போட்டு அவர்கள் இதை பறையடித்ததே இதற்கு அத்தாட்சியாகும்.

சிப்பாய்களுக்கு அடுத்தபடியாக பல லக்ஷக்கணக்கில் இந்திய மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். மாண்டவர்கள் ஜாபிதாவில் சிப்பாய்களுக்கு அடுத்தபடியாக இவர்கள் பெயர் விளங்கியது. சிப்பாய்கள் ராணுவத்தில் காணப்பட்ட சில குறைபாடுகளைப் போக்குவதற்காக புரட்சியில் சேர்ந்தார்களென்பது பொய்யென்பதை நினைவில் கொள்ளவேண்டும். தேசத்தை விடுதலைசெய்ய கட்டுப்பாடாக இருக்கும் தங்கள் பலத்தை பிரயோகிக்கவே அவர்கள் புரட்சியின் கொடியைத் தாங்கினார்கள். புரட்சி வெறும் கலகம் அல்ல என்பதை நிரூபிக்க, தேசீயப் போராட்டமே புரட்சி என்பதை நிலைநாட்டுவதற்குப் பல உதாரணங்கள் எடுத்துக் காட்டமுடியும்.

ஒரே ஆட்சியின் பெயரால், அந்த அரசரின் கொடியின் கீழ் பல இடங்களில் புரட்சி துவங்கியது. மாஜி மன்னர்களான நானாசாகிப், அயோதி பேகம், ஜான்ஸிராணி, பரீலி கான்பகதூர்கான் ஆகியோர் புரட்சிக்குத் தலைமை தாங்கி நின்று நடத்தினார்கள். தத்தம் பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள், எனினும் முகலாய மன்னனின் பிரதிநிதிகளாகவே அவர்கள் தங்களைக் கருதிக்கொண்டார்கள். முகலாய மன்னனின் ஆதிபத்திய உரிமையை அவர்கள் ஒப்புக்கொண்டதோடு, அப்போதுக்கப்போது ராஜ்ய பாரம் பற்றின செய்திகளை, பாராட்டுதல்களை அனுப்பியும் வந்திருக்கிறார்கள். "டில்லி செல்லுவோம், டில்லி சேருவோம்" என்ற எக்காளத்தோடுதான் புரட்சி சைன்யங்கள் போராட்டத்தில் ஈடுபட்டன. புரட்சிக்கு முகலாய மன்னன் தலைவராக மட்டும் விளங்கவில்லை.

புரட்சியை நடத்திவைக்கும் பேரொளியாகவும் அவர் திகழ்ந்தார். அவருக்கே அனைவரின் விசுவாசமும் என்ற நிலை இருந்தது. மக்களும் அதை ஏற்றனர்.

புரட்சி பரவின வேகம், புரட்சிக்காரப் பிரதேசம் வியாபித்துக் கொண்டுபோன ரீதி, இவைகளை எல்லாம் பார்த்தால் பொதுஜன ஆதரவு புரட்சிக்காரர்களுக்கு எவ்வளவு தூரம் கிடைத்தது என்பது தெளிவாக விளங்கும். பல விடங்களில், உதாரணமாக மிராத், அலிகார் போன்ற இடங்களில் சிப்பாய்களை புரட்சியில் கொண்டு போய் நிறுத்தியது பொதுஜனங்கள் என்றுதான் சொல்ல வேண்டும். பிரிட்டிஷாருக்கு பரிவு காட்டினவர்கள் பொது ஜன தூற்றலுக்கு ஆளானார்கள். பாட்னாவில் இவர்கள் மீது பொதுஜன பகிஷ்காரமே நடந்தது. இதே மாதிரி பல ஊர்களிலும் நடந்திருக்கிறது. பிரிட்டிஷாரை நேருக்குநேர் நின்று எதிர்க்க முடியாதவர்கள் ஒத்துழை யாமை நடத்தினார்கள். ஜெனரல் ஹாவ்லாத் என்ற பிரிட்டிஷ் தளகர்த்தர் ஒரு சமயம் ஒரு நதியைக் கடக்க முயன்றார். அவருக்கு யாரும் படகோ, படகோட்டிகளோ தர மறுத்துவிட்டார்கள். அவரும் அவரது சிப்பாய் களும் தவியாய்த் தவிக்க நேரிட்டது. கான்பூரில் தொழி லாளரை பிரிட்டிஷார் கடத்திக்கொண்டுபோய் முகாமில் அடைத்து வைத்திருந்தார்கள். இரவில் பொது மக்கள் போய் இத்தொழிலாளரை ரகசியமாக கடத்திக் கூட்டிக் கொண்டு வந்து விட்டார்கள். ஆன்ஸன் என்பவரின் துருப்புகள் டில்லி வரும்போது "எல்லா சுதேசிகளும், அதாவது வர்த்தகர், பாங்கர், கான்டிராக்டர்கள், கூலிகள் முதலிய அனைவரும் பிரிட்டிஷார் பக்கம் அண்டாமல் தனித்து ஒதுங்கி நின்றார்கள்" என கூறப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சி எந்தயிடத்தில் ஒழிந்ததோ, உடனே அங்குள்ள மக்களுக்கு ஆயுதங்கள் வழங்கினார்கள்.

உதாரணமாக ரோஹில்கந்த் பிடிபட்டதும் சிப்பாய்களை எல்லாம் ஜெனரல் பகத்கான் என்பவரின் தலைமையில் டில்லிக்கு அனுப்பிவிட்டார்கள். உள்நாட்டுப் பாது காப்பு, அப்பொழுதுதான் திரட்டப்பட்ட சிவிலியன் படைகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

புரட்சி தேசீயத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதற்கு தலைசிறந்த உதாரணம் மக்கள் இன ஒற்று மையுடன் தோழமைபூண்டு நின்றதுதான். ஹிந்து முஸ்லிம் என்ற பாகுபாடு இன்றி அனைவரும் தோளோடு தோள் சேர்ந்து நின்று ஒரு முகமாகப் போராடினார்கள். புளித்துப்போன பிரித்தாளும் கொள்கையின் மூலம் நெருக்கடியை சமாளித்து விடலாமென சர்க்கார் மனப் பால் குடித்தது. 1857 மே மாதம் முதல் தேதியன்று லார்ட் கானிங்குக்கு ஸர் ஹென்ரி லாரன்ஸ் கீழ்வருமாறு எழுதினார்:

"இரு சமூகத்தாரிடையேயும் தகராறு ஏற்படுகிறதா என்பதை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு வரு கிறேன்."

ஆக்ராவில் லெப்டினன்ட் கவர்னராக இருந்த ரஸ் ஸல் கால்வின் என்பவருக்கு புரட்சி கிளம்பிவிட்டது என்ற செய்தி எட்டியதும் அவர் செய்த முதல்வேலை குவா லியரிலிருந்த மராட்டியர்களையும் பரத்பூரிலிருந்த ஜாட் வகுப்பாரையும் திரட்டி "உங்களது பாரம்பரிய விரோதி களை" எதிர்க்க வேண்டுமென்றார். வகுப்பு துவேஷம் என்ற தந்திரம் பலிக்கவில்லை. ஆட்கின்ஸன் என்பவரே இதைக் கூறுகிறார்:

"இந்த சந்தர்ப்பத்தில் ஹிந்துவை முஸ்லிம் மீதோ முஸ்லிம்மீது ஹிந்துவையோ நாம் தூண்டிவிட முடியாது".

சர்க்கார் என்ன முயற்சி செய்தும் பலிக்கவில்லை. காரணம் இரு வகுப்பாரும் ஒன்றுபட்டு நின்று ஒற்றுமையைக் காத்து நின்றார்கள். மற்றொரு வகுப்பாரை திருப்திப் படுத்துவது எப்படி என்று இரு வகுப்பாரும் ஏக காலத்தில் நினைத்தனர். பரஸ்பர நல்லுணர்ச்சியில் இரு சமூகத் தலைவர்களும் நெருங்கிப் பழகி வந்தார்கள்.

பரீலி கான்பகதூர்கான் ஒரு பிரகடனத்தில் கீழ் வருமாறு அறிவித்தார்:

“வெள்ளையரை இந்நாட்டிலிருந்து விரட்டி அடிக்கும் திருப்பணியில் ஹிந்துக்கள் அனைவரும் சேருவார்கள் என்றால் பசுக்கொலையை நிறுத்திவிடுவதாக முஸ்லிம் மதத்தலைவர்கள் தெரிவிக்கிறார்கள். ஹிந்துக்கள் போராட்டத்தில் சேரும்பட்சத்தில், பன்றியின் மாமிசத்தைக் கண்டு முஸ்லிம் என்னவிதமாக பாவித்து பயப்படுவானோ, அதேபோல பசு இறைச்சியையும் கண்டு பயப்படுவான், வேண்டிய மரியாதை செய்வான்.”[22]

முகலாய சக்கரவர்த்தியோ ஹிந்துக்கள் போராட்டத்தில் சேரட்டும் என்று காத்திருக்கவில்லை. ஹிந்துக்கள் ஆதரவைப்பெற வேண்டுமென்பதற்காக உடனே அவர் பசுக்கொலையை நிறுத்திவிட உத்தரவு பிறப்பித்து விட்டார். அயோதி சிப்பாய்கள் பரக்பூரிலிருந்த தம் தோழர்களுக்கு ‘சக்கரவர்த்தி தேசத்தில் பசுக்கொலை கூடாது என்று தடுத்துவிட்டார்’ என்று இச்செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

பசுக்கொலையை நிறுத்தினதைவிட மற்றொரு முக்கியமான காரியத்தை சக்ரவர்த்தி செய்தார். அதாவது ஹிந்து ராஜாக்களுக்கு எழுதின கடிதத்தில் தாம் முடி துறப்பதாகக் கூறினார். ஒப்பு உவமை அற்ற இந்த

22. ஆட்கின்ஸன் Op. Cit. பக் 77.

தியாகத்தை அவர் ஜெய்ப்பூர், ஜோதிபுரி, பிக்கானீர், ஆள்வார் முதலிய சமஸ்தானாதிபதிகளுக்கு எழுதிய கடிதத்தில் காணலாம்:

"ஹிந்துஸ்தானத்திலிருக்கும் பறங்கியை விரட்டி அடிக்கவேண்டு மென்பதுதான் என் ஹிருதயபூர்வமான ஆசை. என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் இதைச் செய்தாக வேண்டும். ஹிந்துஸ்தானம் முழுவதும் சுதந்திரத்தோடு திகழவேண்டுமென்பது என் அவா. இந்நோக்கத்தோடு நடந்துவரும் புரட்சிகரமான யுத்தத்துக்கு சகல பாரத்தையும் தாங்கக்கூடிய, அனைவரையும் அணைத்துக்கொண்டு போகக்கூடிய தலைவர் ஒருவர் இல்லாவிட்டால் வெற்றி கிட்டுவது முடியாத காரியம். வெள்ளையரை இந்நாட்டிலிருந்து துரத்தி அடித்த பின்னர் என் ஆதிக்கம் ஏற்படுவதற்காக இந்நாட்டை ஆளவேண்டுமென்ற எண்ணம் எனக்குத் துளிக்கூட கிடையாது. ஆகவே சுதேச ராஜாக்களாகிய நீங்களனைவரும் வாளை உருவி எதிரியை விரட்டக் கிளப்புவீர்களேயானால் எனது ஆதிபத்திய அதிகாரங்களை எல்லாம் குறிப்பிடும் சுதேச மன்னர்களிடம் ஒப்படைத்துவிட்டு நான் விலகி விடுகிறேன்."

முஸ்லிம்களை திருப்திபடுத்த வேண்டுமென ஹிந்துக்களும் ஆவல் கொண்டிருந்தார்கள். கான்பூரில் நானாசாகிப் விடுத்த முதல் பிரகடனத்திலேயே சக்ரவர்த்தியிடம் விசுவாசம் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். அவர் ஏற்றின தேசியக்கொடியில் பிறைச்சந்திரன் பிரகாசித்தது. முதாதையரின் கொடியான 'பகாகன் ஜென்டா' என்பதையும் ஏற்றினார். நானாசாகிப் எழுதின கடிதங்களில் எல்லாம் முகலாய மன்னர் உபயோகித்த உருது வருஷத்தையே குறிப்பிட்டார். நேப்பாள மகாராஜாவுக்கு எழுதின கடிதத்திலும் இந்த வருஷமே உபயோகிக்கப்பட்டிருந்தது. நானாசாகிபின் அந்தரங்கக் காரியதரிசி

யும் ராஜாங்க மந்திரியாக விளங்கியவரும் அஜ்முல்லா கான் என்ற முஸ்லிம்தான். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு உழைத்தார்கள். இரு பேரின் உடலில் சுழி யிட்டு ஓடின குருதி ஓரே இனத்தின் குருதியெனக் ஓடியது. வேற்றுமைகளை மறந்தார்கள்.

புரட்சி தேசீய அடிப்படையில் நடந்தது என்பதற்கு இவையெல்லாம் ஆதாரங்கள். புரட்சிக்காரர்களுக்கு அனுகூலமாக அடித்துவந்த காற்று திடீரென மாறினதும் சீக்கியர் துரோகம் நடந்தது. "சீக்கியர் படையில் சேர்ந் தனர். ஆனால் பெருமளவில் சேரவில்லை. டில்லி பிடி படும் வரை அவர்கள் தயங்கி நின்றார்கள். பிடிபட்ட பின்னர் ஆயிரக்கணக்கில் ஓடோடிவந்து படையில் சேர்ந்தார்கள்" என்று ஆட்கின்ஸன் சீக்கியர் நமக்கு செய்த துரோகத்தைக் கூறுகிறார். சிப்பாய் கலகம் என்று சொல்லலாமே ஒழிய தேசீயப் போராட்டம் என்று சொல்ல சர்க்காருக்கு ரொம்பப் பயமாக இருந்தது. ஏனெனில் தேசீயம் என்ற சொல்லைக் கேட்கவே அவர்கள் அஞ்சினார்கள். புரட்சிக்குப் பின்னர் வெள்ளையர் நடத் தின அடக்குமுறையைக் கவனித்தால் ஜனங்களின் கட்டுப்பாட்டையும் மன உறுதியையும் குலைப்பதிலேயே நாட்டங் கொண்டிருந்தார்கள் என்பது புலனாகும்.

"லார்ட் கானிங் புரட்சிக்காரர்களில் யாருக்காவது கருணை காட்டினாரென்றால் சிப்பாய்கள் பக்கம்தான் அவர் கருணை விழுந்தது. புரட்சியில் சேர்ந்த சாதாரண மக்களைத்தான் அவர் பழிவாங்க நினைத்தார்"[23]

சுயராஜ்யத்துக்கு மக்கள் எவ்வளவு போராடினார் களோ அவ்வளவு மத சுதந்திரத்துக்காகவும் போராடினார்

23. காம்பல் Op. Cit. பக். 283.

கள். புரட்சி கொதித்தெழ மத சம்பந்தமான குறையும் காரணமாக இருந்தது. ஒவ்வொரு பட்டாளத்திலும் ஒவ்வொரு மௌலியும் ஹிந்துமத பண்டிதரும் இருப்பது வழக்கம். பட்டாளத்தினர் தேவைக்காகவே இவர்கள் இருந்தார்கள். இந்த மௌலிகளிலும் பண்டிதர்களிலும் பெரும்பாலோர் புரட்சிக்காரர்களால் கவர்ச்சிக்கப் பட்டவர்கள். பல புரட்சி வீரர்கள் இவர்கள் உதவியை பெரிதும் பயன் படுத்திக் கொண்டார்கள். புரட்சிக் காரர்களின் ரகசிய வேலைகளுக்கு பக்கீர்கள் பெரிதும் உதவி செய்திருக்கிறார்கள்.

புரட்சிக்காரர்களின் உள்ளத்தை உறுதிப்படுத்த மதக் காரணங்களும் உதவிசெய்தன என்றாலும், மத வெறி தலைகாட்டாமல் போனது பாராட்டுதலுக்கு உரியதே. புரட்சியில் கிறிஸ்துவர்கள் பாதிக்கப்பட்டார் கள். இதற்கு அவர்கள் மதம் காரணமல்ல. விரோதி யான வெள்ளையனிடத்தில் அவர்கள் காட்டிவந்த மட் டற்ற அனுதாபமே அவர்கள் துன்பப்படுவதற்குக் கார ணம். ஆங்கிலக் கல்விகற்ற இந்தியர்களும் முக்கியமாக வங்காளிகளும் கிறிஸ்துவர்போல கஷ்டப்பட்டார்கள். இவர்களை துன்பப்படுத்தியது புரட்சிக்காரர்கள்தான்.

"ஆங்கிலம் படித்த சுதேசிகளும் கிறிஸ்துவ மதத் துக்கு மாற்றப்பட்டவரும் அநேகமாக நமக்கு விசுவாச மாகத்தான் நடந்தார்கள்" என்று பிரிட்டிஷார் எழுதி யிருக்கிறார்கள்.

காலத்துக்கு ஒத்ததாக புரட்சி இருந்தது. பண்டைய, நவீன நாகரிகத்துக்கு தக்கபடி புரட்சியை நடத்தியிருக்கி றார்கள். புரட்சியின் தன்மையை அறிய முற்படுவது என்றால் அதன் இரு தன்மைகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

மதம் புரட்சிக்காரர்களை பெருமளவுக்குத் தூண்டி விட்டது என்றாலும் ராஜீயக் காரணம்தான் புரட்சியின் அம்சமாக விளங்கியது. புரட்சித் தலைவர்கள் மதத் தலைவர்களல்ல, சமூகத்தின் தலைவர்களாகவும், சந்தர்ப் பத்தில் தோன்றி அதை அனுசரித்து நடப்பவர்களு மாகவே விளங்கினார்கள். எங்கெங்கு இடத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை விரட்டினார்களோ, அந்த இடத்தில் எல்லாம் பழைய மன்னர்களின் ஆட்சியே திரும்பவும் ஸ்தாபிக்கப் பட்டது. மக்கள் இந்த ஆட்சியை வரவேற்றுநின்றார்கள். சமஸ்தானாதிபதிகளுக்குமட்டும் இந்த சலுகை காண்பிக் கப்படவில்லை. ஜமீந்தார்களுக்கும் இதே உரிமை தரப் பட்டது. அயோதியிலும் வடமேற்கு பாஞ்சாலத்திலும் புரட்சி பொதுஜன இயக்கமாகவே நடந்தது. காரணம் ஜமீந்தார்களே முன்வந்து போராடினார்கள்.

அயோதியை பிரிட்டிஷார் சேர்க்கும்போது 272 தாலுக்தாரர்கள் கையில் அயோதி இருந்தது. புரட்சி சமயத்தில் பிரிட்டிஷாரை அண்டி நின்ற தாலுக்தாரர்கள் தொகை ஏழே ஏழுதான்.

வடமேற்கு பாஞ்சாலத்தில் பிறப்பிக்கப்பட்ட நிலச் சட்டங்கள் பழைய ஜமீந்தார்களை முறியடித்தன. இதனால் நிலச்சுவான்தார்களோ ஏழை குடியானவர்களோ திருப்தி அடையவில்லை. புரட்சி சமயத்தில் இவர்களெல் லாம் சேர்ந்துகொண்டு வெள்ளையரை எதிர்த்து போராடி னார்கள். சர்க்கார் தஸ்தாவேஜுகளெல்லாம் எரிக்கப் பட்டன. பாரம்பரிய சொத்துடைமை உரிமை இதன் மூலம் திரும்பவும் மீட்கப்பட்டது. புதிதாக, பிரிட்டி ஷாரின் தயவின்பேரில் பணக்காரரான நிலச்சுவான்தார் கள் விரட்டி அடிக்கப்பட்டனர். இது பழைய நிலச்சு வான்தாரின் போராட்டம் என்றும் சொல்லலாம்.

இயற்கையில் காண்பதைப்போல சரித்திரத்தில் நிலைமை பழைய நிலைக்குத் திரும்புவதைக் காண முடிய வில்லை. பொதுஜன கிளர்ச்சி ஒன்று இயங்கும் பாதை சாதாரணமாக இருக்காது. கிளர்ச்சியின் போக்கு அது அடைந்திருக்கும் பலத்தைப் பொறுத்தது. கொழுப்புத் தடவிய துப்பாக்கி குண்டு விவகாரம்கூட அதிருப்தி என்ற தீங்கைக் கிளறிவிட்டு பெரும் புரட்சித் தீயை மூட்டிவிட உதவியது. பிறகு அதே குண்டைக் கொண்டு தான் சற்றுகூட தயங்காது வெள்ளையர்மீது சுட்டார்கள். இயக்கம் பெரும் அளவில், உக்கிரமாக நடந்ததினுல் புதுக் கருத்துக்கள் இயக்கத்தில் இரண்டறக் கலந்தன. எனினும் நவீன ஜனநாயகக் கருத்துக்கள் புரட்சியின் போது அவ்வளவாக இடம் பெறவில்லை.

லக்ஷ்மணபுரியிலும் டில்லியிலும் புரட்சிக்காரர்கள் ஏற்படுத்தின சர்க்கார்களில் நவீன ஜனநாயக அம்சங்கள் ஓரளவுக்கு விளங்கின. டில்லியில் ஏற்பட்டிருந்த சர்க்கார் சட்டப்படி அமைந்த ஒரு முடியாட்சியாக இருந் தது. மன்னர் மன்னராகவே விளங்கினுர். சட்டப்படி மதிக்கப்பட்டார். ஆனுல் பார்லிமென்ட் என்பதற்குப் பதிலாக போர் வீரர்களின் கவுன்ஸில் ஒன்றிருந்தது. இக்கவுன்ஸில் வசம்தான் அதிகாரம் இருந்தது. மன்னர் சேனுதிபதியாக இருக்கவில்லை. அரபு, பாரசீக பெயர் களையோ, சம்பிரதாயங்களையோ இக் கவுன்ஸில்மீது திணிக்கப்படவில்லை. இங்கிலீஷ் முறைப்படியே காரியாதி களை இக்கவுன்ஸில் கவனித்து நடத்திவந்தது. எல்லா மனுக்களையும் முதலில் மன்னருக்கே அனுப்பவேண்டும். பிறகு மன்னர் அதில் கையெழுத்திட்டு கோர்ட் என்ற ஒரு சபைக்கு அனுப்புவார். இந்த சபையில் பல கர்னல்கள், பிரிகேடியர், மேஜர்கள் முதலியோர் இருப்பார்கள். காரியதரிசி என்றும் ஒருவர் இருப்பார். போராட்டத்தில்

வீர தீரமாகப் போராடியவர்களுக் கெல்லாம் கர்னல் பதவி வழங்கி யிருந்தார்கள்.

அயோதிக்கு மன்னராக வந்தவர் பால்ய வயதினராக இருந்ததால் ஒரு மந்திரி வசமே பூர்ண அதிகாரங்கள் வழங்கப்பட்டன. ராஜாங்க சபை யென்று ஒரு சபை இருந்து இம்மந்திரிக்கு வேண்டிய உதவிகளை புரிந்து வந்தது. இந்த சபையில் அங்கம் வகித்தவர்களெல்லாம் மாஜி மன்னரிடம் முக்கிய அலுவல்களைக் கவனித்து வந்தவர்கள். அதாவது, பிரதானிகள், தாலுக்தாரர்கள், சிப்பாய்களின் பிரதிநிதிகள் ஆகியோர். புதிதாக ஏற்பட்ட ராணுவத்தில் ஆபீஸர்களெல்லாம் சிப்பாய் களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே. இந்த ஆபீஸர்க ளெல்லாம் சேர்ந்துதான் ஜெனரல்களை தேர்ந்தெடுக்க வேண்டும். பிரிட்டிஷ் ராணுவத்தில் சிறு சிப்பாய்க்கும் ஒரு ஆபீஸருக்கும், அதேபோல ஆபீஸருக்கும் ஜெனர லுக்கும் உள்ள சம்பள வித்தியாசத்தைப் பார்த்தால் மலைக்கும் மடுவுக்கும் உள்ளதுபோல இருக்கும். ஆனால் புரட்சிக்காரர் ராணுவத்திலோ இப்படி இல்லை. நான சாகிப் ஆட்சியில் கர்னலுக்கும் மேஜருக்கும் ரூ. 500 தான் சம்பளம். சாதாரண சிப்பாய்க்கு ரூ. 21 சம்பளம். இவ்வாருக ராணுவத்துறையில் ஓரளவுக்கு ஜனநாயக வாடை வீசியது.

ஜமீந்தார்கள் நிலைக்கும் மேற்சொன்ன ஜனநாயக அம்சத்துக்கும் மோதல் ஏற்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சி யில் ஜமீந்தார்கள்மீது கீழ்வருமாறு வஞ்சம் தீர்த்தார்கள். அதாவது ஒரு ஜமீந்தார்மீது ஒரு சாதாரண குடியான வனே, குடியானப் பெண்ணே, வேலையாளோ, அடிமை களோ வழக்குத் தொடர்ந்தால், அந்த ஜமீந்தாரை உடனே கோர்ட்டுக்குப் பிடித்துவருவது வழக்கம். அவசிய மாஞல் கைதும் செய்வார்கள். பிறகு அவமானப்படுத்து

வது சர்வ சாதாரணமாக நடக்கும். புரட்சியில் சேர்ந்த ஜமீந்தார்கள் இந்த வழக்கம் பிரிட்டிஷாரோடு ஒழியட்டும், திரும்பத் தலை காட்டக்கூடாது என்றனர். சிப்பாய்க்கோ, குடியானவர்களுக்கோ உரிமை தரும்படியான யோசனைகளை அவர்கள் ஏற்கமாட்டார்களென்று தெரிந்தது. தங்களது ஜமீன்களுக்குள் அவர்கள் நுழைந்ததும் தங்கள் விரோதிகளை, பங்காளிகளை எல்லாம் ஈவிரக்கமின்றி விரட்டி அடித்தார்கள். ஒரு சமயம் சில சிப்பாய்கள் சேர்ந்து சர்க்கார் தஸ்தாவேஜுகளை நாசப்படுத்த முயன்றிருக்கிறார்கள். ராஜா குமார்சிங் என்பவர் அவர்களைத் தடுத்து, "நீங்கள் நாசப்படுத்தி விட்டால், நாளை வெள்ளைக்காரன் போனபிறகு யார் யார் பணம் தரவேண்டுமென்பது தெரியாமல் போய்விடுமே" என்றாராம். ஆண்டையை எதிர்த்து அடிமை நடத்தும் புரட்சியின் லட்சியத்தை பெரும்பாலான ராஜாக்கள் புரியவே இல்லை என்று அப்போதிருந்த ஓர் ஆசிரியர் வரைகிறார்.

பிரிட்டிஷ் ஆட்சியில் அதிருப்தி அடைந்தவர்களும் கடன் பட்டவர்களும் அவர்களது ஆத்திரத்தைக் காட்ட புரட்சி வழி வகுத்தது என்றாலும் அவர்களைக்கொண்டு, இது அடிமைகள் கலகம் என்று ஆதார பூர்வமாகக் கூறமுடியாது. புரட்சிக்குத் தலைமை, லட்சியம், சுற்றுச் சார்பு இவைகளைப் பார்க்குமிடத்தில் இந்த வாதம் நிலையூன்றாது. ஆனால் பணக்காரர் இந்தப் புரட்சியைக் கண்டு சிறிது கலங்கினார்கள். தங்களை அறியாமல் வானில் புயலின் உக்கிரம் தோன்றுவதை அறிந்தனர். கருமேகக் கூட்டங்கள் வான மண்டலத்தில் திரளுகின்றன. கண்ணைப்பறிக்கும் மின்வெட்டுகள் ஆத்திரத்தை அடக்க முடியாமல் வெட்டிக்கொண்டிருக்கின்றன, அமைதி

உருக்குலேகிறது என்பதைக் கண்டனர். நெஞ்சிலே உரமில்லாத பணக்கார கூட்டம் 'பிரிட்டிஷ் கோட்டையில்' புகலிடம் கொண்டது.

பின்னணியில் நின்று போராடின ஜமீன்தார்களின் வீரத்தையும், கொதித்தெழுந்த மக்களின் விழிப்பையும், அரும்பின பருவத்தில் இருந்த தேசியத்தின் சுடரொளியையும் சமூக, மத தடைகளே கட்டுமீறி எழும் ஆவேசத்தையும் 1857-ம் வருஷப் புரட்சியின் சித்திரத்தில் பல வர்ண ஜாலங்களில் மின்னிப் பிரகாசிப்பதைப் பார்ப்பீர்கள்.

V. புரட்சியில் பூத்த பூக்கள்

புரட்சியில் வெற்றி கண்டால் ராஜதந்திரிகள், தோல்வி சம்பவித்தால் கொலைகாரர்கள் என்னும் பேராபத்து தலைவர்களின் விதியாக எங்கும் இருப்பது வழக்கம். 1857-ம் வருஷ புரட்சித் தலைவர்கள் இதற்கு விதி விலக்கல்ல. சரித்திரத்தை வெறுப்பு, துவேஷம் இன்றி துருவிப் பார்த்தோமானால், புரட்சித் தலைவர்கள் செயல் திறன் மிக்கவர்கள் என்பது புலனாகும். ஊழிக் காற்றில் குதித்து, புயலின் போக்கை அடக்கும் தோள் வலியும் உள்ள உரமும் கொண்டவர்கள் என்பது தெளிவுறும். ஏதோ திடீரென வானத்திலிருந்து இருட்டில் குதித்தவர்கள் இவர்கள் என்று முதலில் தோன்றும். இவர்கள் திடீரென முளைத்தவர்கள் என்று நினைப்பது தவறு. புரட்சி திடீரென முளைத்ததல்ல. வெகு நாளாக இதற்கு சர்வஜாக்கிரதையாக திட்டம் போடப்பட்டது. ஆகவே தலைவர்களின் தோற்றமும் திடீரென சம்பவித்ததல்ல.

புரட்சியில் முன்னின்ற தலைவர்களின் தனிப்பட்ட சேவை என்ன, அவர்கள் செய்துமுடித்த காரியங்கள் என்னென்ன என்று பிரித்துச் சொல்லுவது ரொம்பக் கஷ்டமான காரியம். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்த ராணுவத்தை எப்படி நம் பக்கம் திருப்பினார்கள், மூலைக் கொன்றாக சிதறி ஓடும் சக்திகளை அணைத்துப் பிடித்து ஒருமுகமாக எவ்வாறு திருப்பினார்கள், முரண்பாடான அம்சங்களை எப்படி சமநிலைக்கு இழுத்துவந்து நிறுத்தினார்கள் என்பதை எல்லாம் ஆராய்ந்தறிய வழியில்லை. செந்தாமரை என்னும் புரட்சி சின்னத்தையும், சப்பாத்திகளையும் பொதுமக்களை தூண்டிவிடுவதற்காக ரகசியமாக

நாலாபக்கமும் இவர்கள் அனுப்பிவைத்து ஆட்களைத் திரட்டி யிருக்கிறார்களென்பதைப் பார்க்கும்போது, மக்களின் மனோபாவத்தை இவர்கள் வெகுதூரம் அறிந்தவர்கள் என்பது வெளிப்படுகிறது.

புரட்சிக்கான வேலைகளை பெருமளவுக்கு நடத்தி வைத்தது நானா சாகிபும் அஜ்முல்லாகானும்தான் என்று தெரிகிறது. புரட்சிக்கு முன்னால் இருவரும் வட இந்தியாவில் பல இடங்களுக்குப் போய் வந்திருக்கிறார்கள். இதன்மூலம் புரட்சிக்கான ஆயத்தங்கள் துரிதம் கண்டன. அதோடு புரட்சியின் சக்திகள் சிதறுண்டு கிடந்தது ஒரு நெருக்கத்துக்கு வரவும் முடிந்தது.

* நானாசாகிப் சுகப்பிரியர், மூளைக்கு அதிக வேலை கொடுக்காதவர், யாருடனும் சாதாரணமாகப் பழகித் திரிபவர் என்றுதான் பிரிட்டிஷ்காரர் இவரை மதிப்புப் போட்டிருந்தார்கள். இவர் விருந்து வைத்தால் ஊர் முழுவதும் அதைப்பற்றியே பேச்சாக இருக்கும். 1856-ம் வருஷ இறுதியில் எல்லாம் விருந்தோம்பலில் இவர் காட்டும் தாராளம் அளவுமீறி போய்க்கொண்டிருந்தது. வெளி ஆடம்பரம் உள் மனிதரை மறைத்து வந்தது. உள்ளூர நானா சாகிப் தீக்ஷண்ய புத்திக்காரர். அவர் பொறுமைக்கு அளவே இல்லை. உறுதி அசைக்க முடியாத உறுதியாக இருந்தது. புரட்சிக்கு ஆயத்தம் செய்வதற்காக நானாசாகிப் பல மாகாணங்களுக்குச் சென்று வந்தார். சர்க்கார் கடன் பத்திரங்களாக இருந்த மூலதனங்களை எல்லாம் விற்று கையில் ரொக்கமாக ரூபாய் 50,00,000 வைத்துக்கொண்டார். நானாசாகிப் புரட்சிக்கு ஆயத்தம் செய்கிறாரென சர்க்கார் எண்ணவே இல்லை. அவர்

* நானாசாகிப் 1824-ல் பிறந்தவர் என்று கூறப்படுகிறது இது உண்மைதானா?

நடவடிக்கைகளைப் பிறகு சொல்லவா வேண்டும். சர்க்காருக்கு அவர்மீது எவ்வித சந்தேகமும் தோன்றவே இல்லை. இன்னுமொரு விசேஷமும் உண்டு. புரட்சி ஆரம்பமாகும் தருவாயில் ஒரு இங்கிலீஷ் ஜெனரலும் பிரிட்டிஷ் கலெக்டரும் அவரை கான்பூருக்கு வருமாறும், அங்குள்ள கஜானுவுக்கு காவல் இருக்க வேண்டுமெனவும் கோரினார்களாம்! புரட்சிக்காரர்களின் மன்னராக அவர் திகழ்ந்தார். அவர் புகழ் எங்கும் பரவியிருந்தது. நானா சாகிபின் வீரதீர சாதனைகளுக்கு பக்கபலமாக அஜ்முல்லாகானின் சாணக்கிய விவேகம் வேலை செய்தது.

அஜ்முல்லாகானின் வாழ்க்கை அராபியக் கதையில் காணப்படும் வாழ்க்கையைப்போல கவர்ச்சிகரமான வாழ்க்கை. சமையற்காரனாக இவர் வாழ்க்கை ஆரம்பமாகியது. தாழ்மையான நிலைமையையும் இவர் பயன்படுத்திக்கொண்டார். தனது ஐரோப்பிய எஜமானர்களிடமிருந்து இவர் இங்கிலீஷ், பிரெஞ்சு பாஷைகளைக் கற்றுக்கொண்டார். கடைசியில் இவர் நானாசாகிபின் பிரதான ஆலோசகரானார். பீஷ்வா வழக்கை கிழக்கிந்திய கம்பெனியின் டைரக்டர்களடங்கிய மன்றத்தில் வழக்காட இவரை நானாசாகிப் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். மேபேர் ஜில்லாவில் இவர் அழகையும் நகைச்சுவை மிகுந்த சொல் வன்மையையும் கண்டு பிரபுக்களின் மனைவிமார்களெல்லாம் இவரை சூழ்ந்து புகழ்ந்தனர். இங்கிலாந்தில் தங்கின காலத்தை இவர் வெகு நன்ருகப் பயன்படுத்திக்கொண்டார். பிரிட்டிஷாரின் பலமெங்கிருக்கிறது, பலவீனமெங்கிருக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்தார். அப்பொழுது கிரிமியாவில் சண்டை நடந்து கொண்டிருந்தது. கிரிமியா முனைக்கும் சென்ருர். அதாவது போராட்டத்தில் பிரிட்டிஷார் எப்படி இருக்கிருர்கள் என்பதைப் பார்க்கவே இவர் சென்றது.

இந்தியாவுக்கு வருவதற்கு முன்னால் துருக்கிக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும் சென்று, இந்தியா புரட்சி செய்தால் அந்நாடுகளெல்லாம் இந்தியாவுக்கு உதவ வேண்டுமென்பதற்காக முயற்சி செய்தார்.

அஜ்முல்லாகான் எப்படி பெரிய ராஜதந்திரியோ அதேமாதிரி மௌலி அகமதுஷா என்பவர் ஒருவர் இருந்தார். பைஜாபாத்தை இவர் சேர்ந்தவர். ஸ்தாபன ரீதியில் சக்திகளை திரட்டுவதில் வல்லவர். சிறந்த பேச்சாளர். சேனாதிபதியாயிருப்பதில் திறமை மிக்கவர். இவர் சொன்வன்மையினால்தான், பிரிட்டிஷார்மீது அனல் கக்கும் வகையில் பிரசங்கங்கள் செய்ததால்தான் அயோதி கொதித்தெழுந்து புரட்சி என்ற கங்கு தெரிந்ததுமே அதை பெரும் ஜுவாலையாக்க முன் வந்தது. இவரை பிரிட்டிஷார் பிடித்துவிட்டார்கள். தூக்கு தண்டனையையும் வழங்கிவிட்டார்கள். அந்த சமயத்தில் புரட்சிக்காரர்கள் இவரை சிறையிலிருந்து மீட்டுக்கொண்டு போயினர். தூக்குக்கயிறை எதிர்நோக்கி யிருந்த சிறையிலிருந்து வெளிக் கிளம்பின இவர் மக்களின் தலைவனாக வெளிவந்தார். மௌலிகள் சமாதான காலத்தில் எப்படி தைரிய மிக்கவர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கினார்களோ அதேபோலவே யுத்த சமயத்திலும் விளங்கினார்கள்.

புரட்சி ராணுவத் தலைவர்களான அகமதுஷா, குமார் சிங், தந்தியாதோபி, லக்ஷ்மிபாய் முதலியோருக்கு யுத்த அனுபவம் போதாது. இவர்களுக்கு எதிராக இருந்த பிரிட்டிஷ் ஜெனரல்களோ அனுபவம் மிக்கவர்கள். சிறந்த போராட்டக்காரர்கள். ஆகவே நேருக்கு நேர் நின்று நடந்த போராட்டங்களில் எல்லாம் இந்தியருக்கே பெரும் நஷ்டம் ஏற்பட்டது. புரட்சித் தலைவர்களோ மறைந்திருந்து தாக்கும் போராட்டத்தில் நிபுணர்களாக

விளங்கினார்கள். புதுப்புது முறையிலும் சாதுர்யமான தாக்குதல்களிலும் தீரத்திலும் இந்தியர்கள் விளங்கவே, பிரிட்டிஷ் துருப்புகளை இரு ஆண்டுகள்வரை படாத பாடு படுத்தினார்கள். அதாவது 1857 மே மாதத்திலிருந்து 1859 நவம்பர்வரை இந்தியாவின் பல பகுதிகள் குமுறிக் கொண்டுதானிருந்தன.

புரட்சிக்காரர்கள் திடீர் திடீரெனத் தாக்குவது, மறைவாக இருந்து பாய்ந்து அடிப்பது என்னும் கொரில்லாப் போர் முறையே தங்களது ராணுவத் திட்டமாகக் கொண்டிருந்தனர். சர்க்கார் கஜனுக்களைக் கைப்பற்றுவது, சிறைகளை உடைத்து கைதிகளை விடுவிப்பது, போக்குவரத்துகளை சீர்குலைப்பது என்னும் காரியங்களை ஒழுங்கு தவருமல் நடத்திவந்தனர். 11,000 விருந்து 12,000 பேர் வரை சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டனர். சர்க்கார் கஜனுக்களில் கொள்ளை அடித்த பணமோ பல கோடி ரூபாய்களிருக்கும். போக்குவரத்தை சீர்குலைப்பதில் முக்கியமாக ரயில்வே தண்டவாளங்களையும் தந்திக் கம்பிகளையுமே புரட்சிக்காரர்கள் தகர்த்தெறிந்தனர். புரட்சி ஆரம்பமான உடனேயே ராணிகஞ்ச் என்ற ரயில்வே நிலையம் தாக்குண்டது. 2000 மைலுக்கு தந்திக் கம்பிகளே இல்லாதபடி செய்தனர். இதரப் போக்குவரத்துகளும் இதேகதிக்கு உள்ளாயின. கான் பகதூர் கான் என்பவர் கீழ்வரும் பொது உத்தரவை பிரகடனப் படுத்தினர்:

"பிரிட்டிஷ் படைகளை நேருக்கு நேர் நின்று எதிர்க்க வேண்டுமென யாரும் முயற்சி செய்யவேண்டாம். ஏனெனில் அத்துருப்புகள் உங்களைவிட சிறந்த பயிற்சி, கட்டுப்பாடு, படை பக்கபலம், பெரிய பீரங்கி வசதிகள் முதலியவைகளைக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே எதிரிகள் நடமாட்டத்தைக் கவனியுங்கள். நதிப் பாலங்கள்

மீதெல்லாம் உங்கள் கவனமிருக்க வேண்டும். போக்கு வரத்துகளை எல்லாம் சீர்குலைத்து அவர்களுக்கு சப்ளைகள் போகாதபடி தடுக்கவேண்டும். அவர்களுக்கு உணவு முதலியவை செல்லக்கூடாது. எந்த இடத்தில் அவர்கள் முகாம் போட்டிருக்கிறார்களோ அங்கு உங்களின் கவனம் சதா இருந்து வரவேண்டும். ஓய்வு என்பது அவர்களுக்கு இருக்கவே கூடாது."

இந்த பொது உத்தரவை எவ்வளவு உன்னிப்பாக இந்தியர் நிறைவேற்றி வைத்தார்களென்பதை ஒரு பிரிட்டிஷ் ஆசிரியரே விவரிப்பதைப் பாருங்கள் :

"எதிரியை (இந்தியரை) சந்தித்தபோதெல்லாம் அவர்கள் முறியடிக்கப்பட்டனர். ஆயுதங்களை இழந்து, மூலை முடுக்குகளுக்கு விரட்டப்பட்டனர். ஒரு தடவைகூட அவர்கள் இதிலிருந்து தப்பவில்லை. எனினும் எத்தனை தடவை தோற்கடித்தாலும் தோல்வியுற்ற இந்தியப் படைகள் திரும்பவும் படை திரட்டிக்கொண்டு வந்து போராட்டத்துக்குத் தயாராக நிற்பதைக் காணலாம். ஒரு நகரம் பிடிபட்டது, அல்லது எதிரியிடமிருந்து மீட்டோம் என்றால் உடனே நம் வசமுள்ள மற்றொரு நகருக்கு ஆபத்து வந்துவிடும். ஏதாவது ஒரு ஜில்லாவுக்குள் நம் துருப்புகள் போய்விட்டன, அந்த ஜில்லா பத்திரமாக இருக்கிறது என்றால், மறு நிமிஷமே மற்றொரு ஜில்லாவுக்கு ஆபத்து என செய்திவரும். ஒரு பாதை சரியாய் விட்டது என்றால் அடுத்த வினாடியே அந்த பாதை திரும்பவும் துண்டிக்கப்படும், ஒரு வருஷ காலத்துக்கு தொடர்பே ஏற்படாது. ஒரு பாகத்தில் எதிரியை ஓட்டினோம் என்றால் அதே எதிரி பல படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து தாக்குவதைக் காணலாம். ஒரு பீரங்கிப் படை எதிரியின் அணியை பிளந்து சென்று விட்டது என்றால், அந்த க்ஷணமே அப்பிளவை மூடி,

உள்ளே சென்ற படையை நாசமாக்கி விடுவார்கள். எதிரிக்கு நஷ்டம் என்றால் உடனே சரியாய்விடுகிறது. இதனால் போராட்ட நிலவரம் எப்படி இருக்கிறது என்பதே தெரியவில்லை........."[24]

இந்த கொரில்லாப் போராட்டத்துக்குத் தலைவராக விளங்கியவர் குமார்சிங்தான், ரொம்ப சுறுசுறுப்பாக தாக்குதலில் முனைவார். செயலில் இறங்கினாலோ ரொம்ப ஆபத்தான இடத்துக்கெல்லாம் துணிந்து தானே முன் செல்வார். அவருக்கு வயது 80 என்றாலும் வாலிப சகாக்களெல்லாம் அவரைக் கண்டு பின் வாங்குவார்கள். டன்பர் என்பவரின் ராணுவம் சிதறுண்டு போனதற்குக் காரணம் இவரின் கொரில்லாப்படை தாக்குதலே. அந்த ராணுவம் எவ்வளவு பெரியது, கடைசியில் எப்படி நாச மானது என்பதைப் பார்த்தால் இவர் திறமை புலனாகும். இந்த வீரக் கிழக் குமரனின் உயர்வு அவர் மரணத்திலும் பரிணமித்தது. தன் அன்புக்குரிய ஜகதீசபுரி என்னும் நகரை இவர் வெள்ளையரிடமிருந்து மீட்டார். அங்கு சுதந்திரக்கொடி மீண்டும் பறந்தது. கடைசியில் வெள்ளையர் வந்து தாக்கினர். அக் கொடியைப் பாது காக்க போராடுகையில் அக்கொடியின் கீழேயே இவ் வீரப் புதல்வனின் உயிர் வீரசுவர்க்கம் புகுந்தது. சுதந்திரப் போராட்டத்தின் முன்னணியில் நின்ற இவர் போராட்டத்திலேயே உயிரை மாய்த்துக்கொண்டார். எனினும் அவர் உருவிய சுதந்திர வாள் திரும்பவும் உறைக்குள் புகவில்லை.

ராணுவத் திட்டத்தை திறம்பட வகுத்தவர் தந்தியாதோபி. இவர் 1819-ல் பிறந்தவரென்றும் 1859-ல் இறந்தவரென்றும் கூறுகிறார்கள். நானா சாகிபின் பால்ய நண்பர். கடைசிவரை அவருடன் நின்ற தோழர். இவர்

24. டப் : op. cit.. p. 223.

நரம்புகளில் சுழியிட்டுச் சென்றக் குருதியிலே வீரத்துக்கு வீரத்தையும் தந்திரத்துக்குத் தந்திரத்தையும் காணலாம். சிவாஜி பரம்பரையில் உதித்தவர். சிவாஜியின் திருநாமப் புகழுக்குப் பங்கம் வராதபடி நடந்தவர். இவரின் விவேக சக்தி புரட்சிக்காரர்களுக்குப் பெரும் துணையாக இருந்தது. துன்பத்தில்தான் புரட்சிக்காரர்களுக்கு அனுகூலங்கள் கிடைக்கும். எல்லாம் போய்விட்டது என்ற நிலை புரட்சிக்காரர்களுக்கு ஏற்பட்டபோது இவர் தோன்றி குவாலியரை புரட்சிக்காரர்களின் புகலிடமாகச் செய்தார். குவாலியர் அரசாங்கம், கஜனு, ராணுவம், கோட்டை முதலியன எல்லாம் புரட்சிக்காரர்களின் கைக்கு இவர் மூலம் வந்தன. புரட்சித் தலைவர்களில் தன்னந்தனியாக நின்று நர்மதை நதிக்கும் அப்பால் சென்றவர் இவர் ஒருவர்தான். இவரைப் பிடிக்க பிரிட்டிஷ் ராணுவம் 3000 மைல் வரை விரட்டிக்கொண்டு வந்தது. ஒன்பது மாத காலமாக விரட்டியும் இவரைப்பிடிக்க முடியவில்லை. பிரிட்டிஷ் ராணுவ நிபுணர்களெல்லாம் இவர் திறமைக்கு முன் மண் கவ்வினர். கடைசியில் இவரது சகா ஒருவனே இவரைக் காட்டிக்கொடுக்க துர்மரணம் விளைந்தது. எனினும் தியாகபுருஷர் என்ற பெயர் விளங்காமல் போகவில்லை. "என் தலையைக் கொய்து மக்களிடம் காட்டுங்கள், ஏனெனில் தினந்தோறும் அவர்கள் இம்மாதிரி தலையைக் காண்பதில்லை" என்று டான்ட்டன் கூறியது போல கூறியிருப்பார்.

வீரர்களை ஊக்குவித்தவர், தேசத்தின் அமரத்துவம் வாய்ந்த மதிப்பைப் பெற்றவர்தான் கனல் எழுப்பிய லக்ஷ்மிபாய், ஜான்ஸி ராணி. (1835-58). அழகும் வீரமும் அவரிடம் காணப்பட்டன. அவர் வயதோடு அவரது விவேகத்தை ஒப்பிட்டால் ஆச்சரியமாக இருக்

கும். புரட்சி என்ற சங்கநாதம் ஒலித்ததும் போர்க்களம் புகுந்த பெண்சிங்கமவர்.

வாளை உருவி, கேடயத்தைத் தூக்கி எறிந்துவிட்டு யுத்தகளத்தில் குதித்தவர். ஆண்வேடம் தாங்கிப் போரிடுகையில் வீரமரணம் அவருக்கு ஏற்பட்டது. ஆணுக்கு உள்ள வீரம் அவருக்கிருந்தது. யுத்தகளத்தில் கையில் உருவின வாளுடனேயே அவரது சடலம் யுத்த களத்தில் கிடந்தது. இரும்பு நேர் நெஞ்சுறுதி. சரணுகதி என்ற பேச்சுக்கே அவர் அகராதியில் இடமில்லை. அவரது ஜில்லாவை வெள்ளைக்காரர்கள் அபகரித்துக் கொண்டபோது அவர் கீழ்வருமாறு கூறினுர்:

> "என் ஜான்ஸியை பறித்துவிட சம்மதிக்க மாட்டேன்."

தன் உறுதிக்கு மரணத்தையும் துணிந்து செல்லும் வீரத்தையும் அணியெனக் கொண்டார். ஜான்ஸி விழுந்து விட்டது என்றதும் அவர் 102 மைல் தூரத்திலுள்ள கல்பி என்னும் இடத்துக்கு 24 மணி நேரத்தில் குதிரை யில் சென்று தப்பியிருக்கிருர். ஒரே மூச்சில் இவ் வளவு தூரம் குதிரை சவாரி சென்ருரென்ருல் இவர் துணிகர உள்ளம் நன்கு தெரியும். வெள்ளைக்காரர் கள் அவரை விரட்டிக்கொண்டு வந்தும் வழியில் பிடிக்க முடியவில்லை. துன்பத்தை அவர் சகித்திருந்த குணம் சரித்திரத்தில் இடம்பெறத் தகுந்தது. அரியாசனத்தில் இருந்தபோதும் அமர்க்களத்தில் இருந்தபோதும் அவரை மக்களும் வீரர்களும் பேரரசி, தலைவி என்று போற்றினர். புரட்சியின் தேவதையாக இவர் விளங்கினுர். புரட்சிக்கு அடிகோலி வீரர்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளிக் கும் வீராங்கனையாகத் திகழ்ந்தார். அவர் புகழ் வீர சாதனையின் பரணியாக ஒலித்தது. சரித்திரம் அவர் சாதனைகளை பொறித்தது. மக்கள் அவற்றை பாக்களாக

அமைத்து பாடிக் களித்தனர். சுதந்திர பலிபீடத்தில் அணையா சுடரை அவரது வீர ஆத்மா ஏற்றுவந்தது. அத் தீபச்சுடர் கொழுந்துவிட்டெரிகிறது.

புகழ்திரைக்கு அப்பால், உண்மைப் புரட்சி வீரர்களாக இருந்த இந்தியத்தாயின் புதல்வர்கள் 2 லட்சம் பேர். அடிமை வாழ்வைவிட வீர மரணமே மேலெனத் துணிந்து வெளிக் கிளம்பியவர்கள். அந்த வீரர்களின் நினைவுக்கு ஞாபகார்த்தமாக எந்த சின்னமும், கோயிலும் இல்லை. அவர்கள் புகழ் மங்கவில்லை யெனக் காட்டும் திருவிளக்கு எதுவும் இல்லை. அவர்கள் சவக்குழிகளுக்கு புகழ்மாலை சூட்டுவார் எவருமில்லை. அவர் ஆத்ம சாந்திக்கு ஆலயங்களில் மணிகள் ஒலிப்பதில்லை. நம்மை அடக்கி ஆண்டவர்கள், இப் புரட்சி வீரர்களின் நினைவை ஒழிக்க முயன்றார்கள். எனினும், ஒவ்வொரு உண்மை இந்தியன் உள்ளத்திலும் அவர்கள் அழியாக் கோயில் கொண்டு விட்டனர்.

“மூப்பு அணுகுவது நம்மை
முதுமை அணுகுமோ அவரை
காலம் அவரை சாடுமோ
கறைதான் அவரை அடையுமோ
காலை கதிரொளி வேளையிலும்
மாலை மயங்கும் வேளையிலும்
அவர்தம் புகழ் பாடிநாம்
ஆனந்தக் கூத்தாடிடு வோமே”.

VI அடக்குமுறை

பூமண்டலம் குமுறி எழும் வேளையில் வான மண்டலத்தில் எதிரொலி கேட்கும். ஊழியின் சாயல் படியும் வேளையில் பலாத்காரம் விளைவது தவிர்க்க முடியாது. பலாத்காரமே வரப்போகும் விளைவுக்கு செவிலித்தாய். புரட்சி வீறிட்டெழுந்ததும் இரு சாராரும் பலாத்காரம் என்ற கடலில் இறங்கினர். விவேகம், மனுஷ தர்மம் என்னும் அம்சங்கள் பயங்கர காட்சிகளையும் மனக்கசப்பு ஊட்டும் பழைய சம்பவங்களையும் திரையிட்டு மூட பணிக்கிறது. கறையில்லாமல் எவர் கையும் இல்லை. துரதிர்ஷ்டமாக வெள்ளைக்கார சரித்திராசிரியர்கள் புரட்சியைப்பற்றி கூறுகையில் இந்தியரே அட்டூழியம் செய்ததாக அலுப்புத் தட்டுகிறவரையில் வர்ணித்துக் கொண்டே போகிறார்கள். இதை ஒரேவிதமாக எல்லா ஆசிரியர்களும் விடாப்பிடியாக எழுதிவந்ததால்தான் "மறுபக்கத்தைத் திருப்பிப்பாரு" என்ற நூலே வெளிவர வேண்டி ஏற்பட்டது. அதன் பிறகுதான் நடந்த சம்பவங்களைக்கண்டு இந்தியர் ஆத்திரமடையும் சம்பவங்களுக்காக பிரிட்டிஷார் வருந்தவும் இடமிருக்கிறது என்ற உண்மையே வெளிப்பட்டது.

எரிமலை அனலைக் கக்கும்போது அருகில் இருப்பவர் தீக்குழம்பில் சிக்கத்தான் செய்வார்கள். அவர்களுக்கு பிரிட்டிஷார் அமரக்கோயில் கட்டியிருக்கிறார்கள். இந்தியாவுக்கு இது ஒரு பெரிய அபகீர்த்தியாகும். பிரிட்டிஷ் அக்கிரமங்களையோ அவர்கள் துச்சமாக விட்டுவிட்டார்கள். இவர்கள் விடுத்தாலும் இந்தியர் உள்ளத்தின் அடிதளத்திலே அவை ஆழமாகப் பதிந்துதான் இருக்

கின்றன. இந்தியர் உணர்ச்சி, கருத்து இவைகளில் பிரிட்டிஷ் அட்டூழியத்தினுல் ஏற்பட்ட ஆத்திரம் நிலையூன்றித்தான் இருக்கிறது. இந்த அட்டூழியங்களை விவரிப்பதில் நமக்கு ஆசையில்லை. எனினும் அவற்றை ஆராயவேண்டியது அவசியமென வேண்டா வெறுப்புடன் இக்காரியத்தை செய்கிறோம்.

இங்கிலீஷ்காரரைக் கொல்லுவது புரட்சிக்காரர்களின் திட்டத்தில் ஒரு பகுதியாக இருந்தது. பலவிடங்களில் உதாரணமாக டில்லி போன்ற இடங்களில் வெள்ளைக்காரரை கொல்லுவதன்மூலம் புரட்சியை ஆரம்பித்தார்கள். புரட்சிக்காரர்கள் முன்னிலையில் அவர்கள் கண்டதுண்டமாயினர்.

இவ்வித கொலைகளும், கான்பூரில் நடந்த துர்ப்பாக்கிய சம்பவங்களும் நடந்ததற்குக் காரணம் வெள்ளைக்கார அதிகாரிகள் நடத்தின கண்மூடித்தனம் நிறைந்ததும் ஈவிரக்கமற்றதான, மிருகத்தனமான அடக்குமுறையே காரணம். ஒரு வெள்ளைக்காரன் மாண்டான் என்ருல் அதற்கு நூறு இந்தியர் உயிர்ப்பலி கொடுக்க வேண்டி ஏற்பட்டது. எனினும் சரித்திரம் இந்தியரை கொலைகாரர்கள் என்று திட்டுகிறது. வெற்றி வீரர்களின் புகழைப் பாடுவதுதானே அநேகமாக சரித்திரம்!

இந்தியர்தான் கொலைக்கு ஆதிகாரணம் என்று சொல்லுவதால் பலனில்லை. எதற்காக கொலைகள் புரிய இந்தியர் முன்வந்தனர்? பெண்களையும் குழந்தைகளையும் கொன்றதற்குக் காரணம் சொல்ல முடியாது. நியாயம் என்று வாதிக்கவே முடியாது. நமது வீரத்துக்கு அது ஒரு களங்கம். ஆண்களைக் கொன்ருர்களென்ருல் அவர்களைப் பிடித்துவைக்க முடியாமல்தான் கொன்ருர்கள். ஏனெனில் அவர்களை எல்லைக்கு அப்பால் விரட்டுவது என்பது முடியாது. ஒரு ஜில்லாவிலிருந்து இன்ஞெரு

ஜில்லாவுக்கு விரட்டுவது என்றால் அந்த ஜில்லாவுக்கு தலைவலிதான். மேலும் ஒரு காலத்தில் வல்லமை மிகுந்தவர்களாக விளங்கின பிரிட்டிஷ் ஆபீஸர்களைக் கொன்று அந்தப் பிரேதங்களை ஜனங்கள் முன்னிலையில் வைத்தாலோ ஒரு மகத்தான ருசு கிடைக்கிறது. அதாவது பிரிட்டிஷ் ஆட்சி தலை கவிழப்போவது திண்ணம் என்பதற்கு ஆபீஸர்களின் பிரேதங்களை அசைக்க முடியாத ருசுவென மக்கள் கருதினர். புரட்சிகரமான சமயங்களில் கண்ணால் பார்ப்பதுதான் பெரிய ருசுவென மக்கள் கருதுவது வழக்கம்!

பிரிட்டிஷார் இதற்கு எதிராக நடத்தின பயங்கரச் செயலைப் பார்த்தால் அவை தேவைக்கு அதிகமானது, நியாய வரம்பை அளவுகடந்து மீறியது என்பது புலனாகும். சில நடவடிக்கைகள் நியாயமானவை, சட்டப்படி உள்ளவை; அதாவது மீட்கப்பட்ட மாகாணங்கள் மீது வரி விதித்தது, அதாவது கடந்துபோன காலத்துக்கும் சேர்த்து வரி விதித்தது, அபராதம் போட்டது எல்லாம் சரியே. கான்பூருக்கு மட்டும் ரூ. 30 லட்சம் அபராதமாக விதித்தார்கள். ஆனால் வேறு நடவடிக்கை எடுத்தார்களே அவை கண்மூடித்தனமானவை; அர்த்தமற்றவை. ஜான்ஸியில் 75 வெள்ளைக்காரர்கள் கொலையுண்டதற்கு 5000 இந்தியரை பழிவாங்கியது சகிக்க முடியாததாகும். ஜான்ஸி திரும்ப பிடிபட்டதும் பிரிட்டிஷார் தம் துருப்புகளை நகருக்குள் ஏவிவிட்டு ஒருவாரம்வரை உங்கள் இஷ்டம்போல எது வேண்டுமானாலும் செய்யுங்கள், கொள்ளை அடியுங்கள் என்று கட்டளையிட்டார்கள்.* டில்லியில் ஒரு சில வெள்ளைக்காரர்கள் கொலையுண்டார்க

* ஜான்ஸியில் பிரிட்டிஷார் பழிதீர்த்த படலத்தை விஷ்ணு கோதாஸ் வார்ஸெய்கர் எழுதிய "மஹா பிரவாஸ்" என்னும் நூலில் காண்க.

ளென்பதற்காக 26,000 இந்தியரைக் கொன்றார்கள். அதாவது சுட்டார்கள், தூக்கிலிட்டார்கள், வெடிமருந்துக் கிடங்குகளுக்குள் ஆட்களைத்தள்ளி தீ வைத்தனர்.

ரத்த வெறியர்களுக்கு நகர மக்களும் கிராமவாசிகளும் பலியானார்கள். கொல்லு! கொல்லு! கொல்லு! என்ற எக்காளமே நாள்கணக்கில் கேட்டது. பிரடரிக் கூப்பர் என்பவன் செய்த ஒரு காரியத்தை மறக்கவே முடியாது. இவன் அமிர்தசரஸ் உதவிக் கமிஷனர். லாகூரில் இருந்த துருப்புகள் கலகம்செய்து 2 ஐரோப்பிய ஆபீஸர்களைக் கொலை செய்துவிட்டது. இதற்கு எப்படி இவன் பழிவாங்கினான் என்பதை அவனே கூறுவதைக் கேளுங்கள்.

"இப்படியாக 150 பேர் தூக்கிலிடப்பட்டனர். ஒரு ஆள் தூக்கில் ஏறும் சமயம் மயங்கி விழுந்துவிட்டான். அவனுக்கு ஆசுவாசப் படுத்திக்கொள்ள சிறிது அவகாசம் கொடுத்து, மயக்கம் தெளிந்ததும் தூக்கிலிட்டோம். மொத்தம் 237 பேர் தூக்கிலிடப்பட்டனர் என்று அறிவித்தார்கள் பாக்கிப்பேர் எங்கே என்றபோது அவர்கள் அடைபட்டிருக்கும் இடத்திலிருந்து வெளிவர மறுக்கிறார்களெனக் கூறப்பட்டது. சிலமணி நேரத்துக்கு முன்னால்தான் இந்தக் கைதிகளை இந்த இடத்துக்குக் கொண்டுவந்து ஒரு அறையில் அடைத்தோம். இவர்கள் ஏன் வெளிவர மறுக்கிறார்களென உள்ளே சென்று கதவைத் திறந்து பார்த்தோம். என்ன? எங்களுக்குத் தெரியாமலே, ஹால்வெலின் (கல்கத்தா) "இருட்டறை" சம்பவம் நடந்துவிட்டது...45 பேர் செத்து விறைத்துக் கிடந்தனர். பயம், சோர்வு, காற்றில்லாக் கொடுமை, களைப்பு இவைகளினால் இவர்கள் செத்துவிட்டார்கள்.

இப்பிரேதங்களை வெளியே இழுத்துக்கொண்டுவந்து போட்டோம்." ‡

கல்கத்தாவில் வெள்ளைக்காரரை ஒரு இருட்டறையில் அடைத்துக் கொன்றதாக பிரிட்டிஷ் சரித்திரம் சாற்றும் சம்பவம் நடக்கவே இல்லை. ஹால்வெல் என்னும் சரித்திராசிரியரின் வரண்ட கற்பனைதான் இது. ஆகவே கூப்பர்தான் இருட்டறை சம்பவத்தை, இதற்கு முன் எவரும் செய்யாதமுறையில் நடத்திவைத்தவர்.

புரட்சிக்காரர்கள் கொடியை பிடித்திருந்த குற்றத்தைச் செய்த சின்னஞ்சிறு பாலகர்களை எல்லாம் தலையைச் சீவினார்கள். பிரிட்டிஷ் சைன்யம் ஒரு நகரைப் பிடித்தது. நகருக்குள் பிரிட்டிஷ் துருப்புகள் அணிவகுத்து வரும்போது 12 இந்தியர் அவர்களை பார்க்க மனமில்லாமல் தலையை வேறுபக்கம் திருப்பிக்கொண்டார்களாம். இதற்காக அவர்களை பக்கத்திலிருந்த மரங்களில் தூக்கிலிட்டார்கள். "நீலன் துப்பாக்கி படையினர் வழியில் பிடிக்க முடிந்தவர்களை எல்லாம் பிடித்துக் கொன்றார்கள். இதில் கொஞ்சங்கூட ஈவிரக்கமற்று நடந்தார்கள்; அலகாபாத்தில்மட்டும் 6000 பேரை கொன்றார்கள். வடமேற்குப் பாஞ்சால ஜில்லாக்களில் ரெனடின் துருப்புகள் "பவனி" வந்தன. பிறகு அந்த ஜில்லாக்கள் வெறும் சுடுகாடுகளாகக் கிடந்தன. பிரிட்டிஷ் துருப்புகள் வைத்த நெருப்புக்கு இலக்காகி அநேகக் கட்டிடங்கள் கரிக்கட்டைகளாக நின்றன. மரணமே பேய் உருக்கொண்டு இந்த இடங்களில் கோர நர்த்தனம் புரிந்தது. சுகவாழ்வு என்பதே அஸ்தமித்தது. பயமும் பீதியும் தலைவிரித்தாடின. இந்த புறத்தோற்றக் கொடுமைகளைவிட ஹிந்துஸ்தான் மக்களின் உள்ளத்தில் மங்கா வடுப்போல இடம்பெற்ற கொடுமைகளை வர்ணிக்க இடம் போதாது.

‡ எப். கூப்பர்: பாஞ்சால நெருக்கடிகள்

ஹிந்துஸ்தான் மக்களை பல வழிகளில் அவமானப்படுத்தினார்கள். ஆத்மிக தர்மத்தை குழிதோண்டிப் புதைத்து மக்கள் மனம் வாடச்செய்தனர். பன்றித்தோலில் முகமதியரை உயிரோடுவைத்து தைத்து நதிகளில் தூக்கி எறிந்தனர். முஸ்லிம்கள்மீது பன்றிக் கொழுப்பைத் தடவி நெருப்பில் வாட்டி, பிறகு தூக்கில் போட்டார்கள். பதேகாட் சமஸ்தான திவான் ஒரு முஸ்லிம். அவர் வாயில் பன்றிக் கறியைத் திணித்து பிறகு தூக்குமரத்தில் ஏற்றினார்கள். ஹிந்துக்கள் வாயில் பசுக்கறியைத் திணித்து பிறகு கொலை செய்தனர். உயர்ந்த அந்தஸ்தில் இருந்த பணக்கார புரட்சிக்காரர்களை எல்லாம் அழைத்துவந்து வீதி கூட்டச்செய்தனர். உடலை வதைத்ததை மறக்கலாம். வெளிப்புண்ணை ஆற்றலாம். ஆனால் உள்ளத்தை வதைத்ததை மறக்கவோ மறைக்கவோ முடியாது. இதன் அடிப்படையில் பிறக்கும் மனோபாவத்தை போக்கடிப்பது என்பது முடியாத காரியம்."

பிரிட்டிஷாரின் இந்த பயங்கர செயல்களை அடுத்து தேசத்தில் அச்சம், பீதி, மனச்சோர்வு எழுந்தன. இதை உள்ளமுருக்கும் வண்ணம் காலிப் என்னும் கலிவாணர் பாட்டாக அமைத்தார்.

பிரிட்டிஷார் இவ்வளவு வெறிகொண்டலையக் காரணமென்ன? யுத்தத்தால் ஏற்பட்ட பரபரப்பே இதற்குக் காரணம். அதோடு பழிவாங்கும் வெறியும் சேர்ந்து கொண்டது. ஆனால் உண்மைக்காரணம் இன்னொன்று இருந்தது. அதாவது ஆளப் பிறந்த நம்மை அடிமையான இந்த சுதேசிகள் எதிர்ப்பதா என்ற ஆத்திரமும் துவேஷமுமே உண்மைக் காரணம்.

"ஆளும் வர்க்கத்தின் அந்தஸ்து, வழக்கங்கள் இவைகளை என்ன ஏற்பட்டாலும் விடவே கூடாது" என்று

ஸர் ஹென்ரி லாரன்ஸ் கர்ஜித்தான். இதை நிறைவேற்றவும் செய்தான் என்பதை ரைஸ் ஹோம்ஸ் என்பவர் ஒப்புக்கொள்ளுகிறார். "இந்தியப் புரட்சிக்காரர்கள் இழைத்த உடல் வதைக்காக பழிவாங்கவில்லை. அந்தஸ்தில் குறைந்த இந்த இந்திய வர்க்கம் நம்மை அவமானப் படுத்திவிட்டதே என்றுதான் வெள்ளையர் பழிவாங்கினார்கள்" என்று அவர் எழுதுகிறார். * அந்தஸ்தில் குறைந்த இந்திய வர்க்கம் அவமானப்படுத்தியது என்பதால் இவர்கள் ரத்தவெறி கொண்டார்கள். ஆகவே கறுப்புச் சனியன்களுக்கு பாடம் கற்பிக்கவேண்டு மல்லவா? ஆகவே புரட்சிக்காரர்களை வேட்டையாட வேண்டுமென்று கூறினார்கள். வேட்டை ஆடுவது என்ற சொல் அவர்களிடை பிரபல்யமாக இருந்தது.

நாம் செய்த கொடுமைகளை அளவு மீறி பிரிட்டிஷார் திரித்துக் கூறினார்கள். தங்கள் அட்டூழியங்களை மறைத்தார்கள். இந்த அநியாயம் நம் இதயத்தில் இடம்பெற்று அழியாமலே இருக்கிறது. "மக்கள் மாறுகிறார்கள், மந்தஹாச சுதந்திரர்களாகிறார்கள்; ஆனால் வேதனை உள்ளத்தில் உறையவே செய்கிறது!

* ஹோம்ஸ் ! OP cit. P. 100.

VII நாமேன் தோற்றோம்?

புரட்சி தோல்வி யடைந்ததற்கு இருவகையில் காரணங்கள் கூறலாம். முதலாவது நம் சக்திக்கு மீறிய கஷ்டங்கள்; அல்லது புரட்சிக்காரர்கள் சக்திக்கு மீறியது. இரண்டாவது நமது கொள்கை, போக்கு. புரட்சிக்கான சமூக காரணங்கள் முதலியவை ஒரு வரம்புக்கு உள்ளடங்கியே இருந்தன.

1857-ம் ஆண்டு பிரிட்டிஷாருக்கு பல வழிகளில் அனுகூலமான ஆண்டு. அப்பொழுதுதான் கிரிமியா முனைப் போராட்டமும் சீன முனையுத்தமும் முடிந்திருந்திருந்தன. பிரிட்டிஷ் ராணுவம் யுத்த முஸ்தீபிலேயே இருந்தது. கலகக்காரர்கள்மீது இந்த ராணுவத்தை நினைத்தால் உடனே ஏவிவிடலாம். 1857 ஆண்டின் ஆரம்பத்தில்தான் பாரசீகத்தை பிரிட்டிஷார் தோற்கடித்திருந்தார்கள். ஆப்கன் நாடுகளுடன் புது நேச ஒப்பந்தம் கையெழுத்தாகியிருந்தது. போலான், கைபர் கணவாய்கள் மூலம் அந்நியர் படையெடுக்கலா மென்றிருந்த ஆபத்து மேற்சொன்ன ஒப்பந்தங்கள்மூலம் அகன்றுவிட்டது. ஆகவே சர்வதேச துறையில் பார்த்தால் இந்திய புரட்சிக்காரர்கள் தன்னந்தனியாகத்தான் நின்றனர்.

கடல்களில் பிரிட்டிஷாருக்கு ஆதிக்க மிருந்ததால் தன்னந்தனியாக நின்ற இந்திய வீரர்களை ஒரு கூண்டுக்குள் அடைத்தது போலாகிவிட்டது. ஹிந்துஸ்தான சமவெளிப் பிரதேசங்களில் வெற்றி கிடைத்தாலும் தோல்வி ஏற்பட்டாலும் அவை முக்கிய விளைவுகளை ஏற்படுத்தவில்லை. உள்ள நிலைமையின் மேற்சொன்ன அம்சத்தை

ஹெர்பர்ட் எட்வர்ட்ஸ் நன்றாக தெரிந்து கொண்டார். பாஞ்சாலத்தையும் துறைமுகம் இருக்கும் நகரங்களையும் என்ன நஷ்ட மேற்பட்டாலும் விட்டுவிடக் கூடாதென அவர் கூறினார். இவை போய்விட்டால் புரட்சிக்காரர் களிடமிருந்து இழந்த இடங்களை பிறகு மீட்கமுடியாது என்றார். "நின்ற விடத்திலேயே நில்லுங்கள். அசையா தீர்கள்" என்று கட்டளை பிறப்பித்தார். "பாஞ்சாலம் உங்கள் கையில் இருந்தால் கடல்மார்க்கமாக இந்தியாவை மீட்க உதவமுடியும். மத்திய இந்தியாவில் என்ன ஏற் பட்டாலும் சரி, துறைமுக நகரங்களைவிட்டுவிடாதீர்கள். எல்லைப்புறப் பகுதிக்கு பாஞ்சாலம் இருந்தால் போதும். துறைமுக நகரங்களும் பாஞ்சாலமும் நம்வசம் இருந்து விட்டால் இப்பொழுது நடக்கும் சண்டை குடும்ப சர்ச்சை மாதிரி" என்று அவர் கூறினார். கடல் ஆதிக்க மிருந்ததால் துருப்புகளை கப்பலில் ஏற்றிக் கொண்டு வந்து பிரிட்டிஷார் குவித்தார்கள்.

ஏராளமான பெரும் தளவாடங்கள் இந்தியாவில் வந்து இறங்கின. புரட்சியை அடக்க பிரிட்டிஷ் ராணு வத்தின் நேர்பாதி பலமே இந்தியாவுக்கு அனுப்பப்பட் டது. லக்ஷம் பிரிட்டிஷ் துருப்புகள் இந்தியா வந்தார்கள். இதல்லாமல் 3 லக்ஷத்து 10 ஆயிரம்பேரை இந்தியாவில் பிரிட்டிஷார் திரட்டினார்கள். பிரிட்டிஷ் துருப்புகளிடம் நவீன தளவாடங்கள் இருந்தன. 19-வது நூற்றாண்டின் ராணுவ சரித்திரத்திலேயே புதுசாதனை என்றழைக்கப் பட்ட 'என்பீல்ட்' துப்பாக்கி பிரிட்டிஷ் துருப்புகளுக்கு இருந்தது. புரட்சிக்காரர்களும் துப்பாக்கி, பீரங்கி முத லியவைகளை இந்தியாவிலேயே செய்ய முயற்சித்தனரென் றாலும் அவர்களுக்கு இருந்த பலம் ரொம்ப ரொம்பக் குறைவு. டபிள்யூ. எச். ரஸ்ஸல் என்பவர் ரொம்ப கவன மாக கணக்கெடுத்த பின்னர், "காயமடைந்தவர்களைப்

பார்த்தால் பெரும்பாலோர் பட்டாக்கத்தியால்தான் காயமடைந்ததாகத் தெரிகிறது" என்று கூறியிருக்கிருர். அயோதியில் புரட்சியை அடக்கிவிட்டு பிரிட்டிஷார் ஆயுதங்களை பறிமுதல் செய்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த தளவாட ஜாபிதாவைப் பார்த்தால் இந்திய வீரர்களுக்கு தளவாட பலம் எவ்வளவு மோசமாக இருந்தது என்பது தெரியவரும்:

பிரங்கி 184. துப்பாக்கி 1,86,177. பட்டாக்கத்திகள் 5,61, 321. ஈட்டிகள் 30, 311. சிறு ஆயுதங்கள் 6,38,183. "சுடுவதற்கு முன்பே இத்துப்பாக்கிகள் கொல்லுகின்றன" என்று என்பீல்ட் துப்பாக்கிகளை நாஞசாகிப் கூறினுர். அவ்வளவு சக்தி மிகுந்த துப்பாக்கிகளுக்கு முன் இந்தியருக்கு இருந்தது ஈட்டிதான். இந்த நிலையில் நாசத்தை நோக்கியே இந்தியர் முன்னேறினுர்கள் என்பது புலனுகும். புரட்சிக்காரர்களுக்கு மட்டும் நிறைய ஆயுதங்கள் இருந்திருக்கும் பட்சத்தில் கதையே வேறு விதமாக முடிந்திருக்கும்.

"புரட்சி செய்த வங்க ராணுவத்திடம் மட்டும் சிறு துப்பாக்கியாவது இருந்திருக்கும் பட்சத்தில் முகலாயர் வசமே டில்லி இருந்திருக்கும். சிறைக் கொட்டடியில் கிழிந்த பாயில் வீற்றிருக்கும் திமூரின் பரம்பரை வந்த முகலாய மன்னன் நவரத்னம் பதித்த அரியாசனத்தில் வீற்றிருப்பான்" என்று ஸ்ரீ. பால் என்னும் ஆசிரியர் எழுதுகிருர்.

புரட்சிக்காரர்களுக்கு எதிராக என்பீல்ட் துப்பாக்கி மட்டும் வந்து நாசத்தை விளைவிக்கவில்லை. தந்தித் தொடர்பு மற்ருெரு எதிரியாக வாய்ந்தது. இதை லண்டன் 'டைம்ஸ்' நிருபரே கூறுகிருர்:

"தந்தியின் அவசியம் இந்தியாவில் தெரிவதுபோல வேறெங்கும் தெரிந்திருக்க முடியாது. தந்தி வசதி மட்டும்

இல்லாதிருந்தால் சேனாதிபதிக்கு தம் பாதி சைன்யமே போயிருக்கும். அவரது வலது கையின் உபயோகத்தைக் காட்டிலும் தந்தியின் உபயோகமே அபரிதமாக இருந்தது." ஆகவே பரக்பூரில் புரட்சி ஆரம்பமானதும் புரட்சிக்காரர்கள் முதன் முதலில் தந்திக் கம்பங்களுக்கு நெருப்பு வைத்ததற்குக் காரணமில்லாமலில்லை. புரட்சி காலங்கடந்துவிட்டது. அதற்குள் விஞ்ஞான அறிவு வளர்ந்து விட்டது. புரட்சியை தகர்த்தது விஞ்ஞானமே.

புரட்சிக்காரர்கள் கட்சி வெற்றி பெறவேண்டுமென்றால் ஒரே ஒரு வழிதான் உண்டு. அனுகூலம் தம் பக்கம் இருக்கும் போதே திடீரெனத் தாக்கி எதிரியை செயல் இழக்கும்படி அடித்து விடுவது. ஏனெனில் அவகாசம் கொடுத்து விட்டால் அது ஆபத்தில் கொண்டுபோய் விட்டுவிடும். ஒரே சமயத்தில் நாலாபக்கமும் புரட்சி கிளம்ப வேண்டுமென புரட்சிக்காரர்கள் திட்டம்போட்டிருந்தார்கள். ஆனல் அப்படி ஒரே சமயத்தில் கிளம்பவில்லை. பல விடங்களில் புரட்சி கிளம்பியது என்றாலும் அவை ஒரே சமயத்தில் கிளம்பவில்லை. அப்படி கிளம்பி யிருந்தால் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தம்பித்துப் போயிருக்குமென்பது நிச்சயம். புரட்சிக்காரர்களிடை நெருங்கிய தொடர்போ ஒத்துழைப்போ இல்லை. பிளாஸி யுத்தத்தின் நூற்றாண்டு விழாதினமான ஜூன் 22-ம் தேதிதான் புரட்சி ஆரம்பிப்பதென திட்டம் போட்டிருந்தார்கள். ஆனல் மீரத் என்னுமிடத்தில் மே 10-ம் தேதியே புரட்சி ஆரம்பமாகிவிட்டது. இதனல் புரட்சித் தலைவர்களின் திட்டமே பெரிதும் பாதிக்கப்பட்டது. பக்குவமற்ற நிலையில் புரட்சி ஏற்பட்டால் என்ன ஏற்படும் என்பதை பெரும் நஷ்டம் கொடுத்து நாம் அறிந்தோம். இது பலதடவை நடந்தது. உண்மையில் இத

ஞல் லாபமடைந்தது எதிரிதான். போட்ட திட்டம் உருக்குலேந்தது என்றால் புரட்சிக்காரர்கள் பிரிட்டிஷ் ஆட்சியை வெகு தூரத்துக்கு ஸ்தம்பிக்க செய்வதன் மூலம் தான் வெற்றிபெற முடியுமெனக் கருதினர். தாங்கள் விட்டு வந்த இடத்தை திரும்ப அவர்கள் பிடிக்க முனேந்திருக்கவேண்டும். நாலாபக்கமும் புரட்சி பரவினுல்தான் வெற்றி உண்டு. இம்மாதிரியான நிலேமைகள் ஏற்பட்டு விடுமோ என்று பிரிட்டிஷார் பயந்திருந்தார்கள். "சிந்தியா புரட்சியில் சேர்ந்துவிட்டால் நான் நாளேயே மூட்டை கட்டிவிட வேண்டியதுதான்" என்று கானிங் எழுதினுர். ஆனுல் சிந்தியாவோ புரட்சியில் சேரவே இல்லே. இவன்மட்டும் சேரவில்லே என்றில்லே, பக்கத்திலிருந்த சமஸ்தானுதிபதிகளும் இவனே அண்டி நின்றனர்.

சமஸ்தானுதிபதிகள் பிரிட்டிஷாரை எதிர்க்காமலிருந்ததற்கு இரு காரணங்கள் இருந்தன. 1834-ம் வருஷத்துக்குப் பிறகு பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி ஒரு அறிவிப்பு விடுத்தது. அதாவது கம்பெனியின் அனுமதியில்லாமல் சமஸ்தானுதிபதிகள் எவரும் பட்டத்துக்கு வரக்கூடாது என்று. காரணம் தங்களுடன் ஒழுங்காக, ஒப்பந்தத்தை கவுரவித்து நடக்கக் கூடியவர்களே சமஸ்தானங்களில் ஆட்சி புரிய வேண்டுமென கம்பெனி நினேத்தே இதுமாதிரி செய்தது. இதன்படி பல யுக்திகள் செய்து பல சமஸ்தானங்களில் தங்களுக்கு அனுகூலமாயிருக்கும் தலேயாட்டி ராஜாக்களே சிம்மாசன மேற்றினுர்கள். சில சமயம் சமஸ்தானங்களில் பிரதம மந்திரிகளே தேர்ந்தெடுத்து நியமிப்பதுகூட கம்பெனிதான். உதாரணமாக பரோடா கம்பெனியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் இந்த வழக்கம் ஒரு நிபந்தனேயாகவே இருக்கிறது. புரட்சி ஆரம்பமான சமயம் முக்கியமான இரு சமஸ்தானங்களான ஹைதராபாத்திலும் குவாலியரி

லும் பிரதம மந்திரிகளாக இருந்தவர்கள் ஸலார்ஜங், தினகர ராவ் என்பவராவர். இவர்களிருவரும் பிரிட்டிஷாரால் நியமனம் பெற்றவர்கள். பிரிட்டிஷாருக்கு விசுவாசியாக தம் ராஜாக்கள் இருக்க வேண்டுமென இவர்கள் பாடுபட்டு வந்தார்கள். பிரிட்டிஷார் தயவினுல் ராஜாவானவர்கள், பிரிட்டிஷ் ஆட்சி நீடித்தால் தான் தங்கள் பட்டமும் நிலைக்குமென நினைத்தார்கள். புரட்சி வெற்றிகரமாக நடந்து வருவதைக் கண்டு சில ராஜாக்கள் அலறினுர்கள். ஏனெனில் பிரிட்டிஷார் போய்விட்டால் பட்டத்தை பங்காளிகள் திரும்பப் பறித்து விடுவார்களோ என்று அஞ்சினர். சிந்தியா புரட்சியில் சேராமல் தடுத்ததற்கு இதுவே காரணம். அங்கிருந்த பிரசிடென்ட் இந்த விவரத்தை கூறுகிருர்: "சிந்தியாவின் மந்திரிகள், ராணுவத்தினர் எல்லாம் புரட்சியில் சேர தூண்டியும் சிந்தியா மறுத்துவிட்டார்." *சுவீகார உரிமையை பிரிட்டிஷார் மறுத்துவிட்டதும் சந்ததி இல்லாமல் சாகும் மன்னர் சொத்துக்களை பிரிட்டிஷார் கைப்பற்றியதும் சமஸ்தாணதிபதிகளுக்கு ஆத்திரத்தை மூட்டி இருந்தது. இதைக் கொண்டு இவர்கள் புரட்சியில் சேர்ந்து விடுவார்களோ என்று அஞ்சி லார்ட் கானிங் புரட்சி ஆரம்பமாகப் போகும் சமயத்தில் "சுவீகார உரிமை உங்களுக்கு நிச்சயமாக உண்டு" என்று கூறினுர். இந்த ராஜதந்திரத்தால் சமஸ்தாணதிபதிகள் ஏமாந்து பிரிட்டிஷ் ஆட்சி நீடிக்க வேண்டுமென பாடுபட்டார்கள்.

புரட்சித் தலைவர்கள் ஒரு முகமாக இல்லாததால் பலம் போய்விடுமோ என்று தோன்றியது. அராஜக நிலை ஏற்பட்டு விடுமோவென்று பணக்காரக் கூட்டம் பதறி

*மாக் லர்ஸன்; இந்தியாவிலிருந்த நினைவுகள் பக். 131.

யது. பிரிட்டிஷ் ஆட்சியை இந்த பணக்கார கூட்டம் அண்டியிருந்தது என்பதை கீழே தரப்பட்டிருக்கும்புள்ளி விவரம் நிரூபிக்கும். கீழே தரப்பட்டிருப்பது இந்திய மொத்த வருமானத்தை விநியோகித்த முறையைக் காட்டுவதாகும்.'

சுதேச சமஸ்தானங்கள்	13,000, 000	பவுன்
வரியில்லா நிலபுலம் ...	5,000, 000	,, பவுன்
வங்க சாசுவத நில ஏற்பாட்டின்படி விட்டுக்கொடுத்தது ...	2,000, 000	பவுன்
ராஜீய பென்ஷன், முதலியவை ...	2,500, 000	பவுன்
	22,5000, 000	பவுன்
பிரிட்டிஷ் இந்திய வருமானம் ...	25,300, 000	
மொத்தம் பவுன் ...	47,800, 000.	

வருமானத்தில் சுமார் பாதிப் பணத்தை பிரிட்டிஷ் ஆட்சி நிலைப்பதற்காக 'சுதேசி தளத்தை' நிர்மாணிக்க செலவிட்டார்கள்.

வங்க சாசுவத நில ஏற்பாடுபற்றி பென்டிங்பேசினர். இதனால் வருமான நஷ்டம் ஏற்படுவதை அவர் சொல்லி விட்டு, "புரட்சி குமுறிக்கொண்டிருக்கும் சமயத்தில் நமக்கு பாதுகாப்பு வேண்டும். இந்த சாசுவத நில ஏற்பாட்டினால் நமக்கு நஷ்டமென்றாலும், நாம் வங்கத்தில் ஒரு பணக்கார கூட்டத்தை ஏற்படுத்துகிறோம். அவர்கள் பிரிட்டிஷ் ஆட்சி நிலைக்கவேண்டுமென சதாகாலமும் வேண்டிக் கொண்டிருப்பார்கள். ஜனங்களை அடக்கி வைப்பார்கள்." என்று கூறினர். இது எவ்வளவு தூரம் நிறைவேறியது என்பதை வங்க ஜமிந்தார்கள் 1857-ம் டிசம்பரில் கவர்னர் ஜெனரலுக்கு வாசித்தளித்த ஒரு பத்தி

ரத்திலிருந்தே காணலாம். மேதாப் சந்திரா, பர்துவான் மகாராஜா முதலியவர்களே இந்த உபசாரப் பத்திரத்தில் கையெழுத் திட்டிருந்தவர்கள்:

"நாங்களெல்லாம் வேறு பட்டிராமல் பிரிட்டிஷ் ஆட்சியையே ஆதரித்து வந்தோம். எங்கள் மக்களும் எங்கள் விஷயத்தில் இப்படித்தானிருந்தனர். இதனால் வங்க சுதேசி மக்களை புரட்சிக்காரர்களும் அவர்களால் தவறான வழியில் செலுத்தப்பட்டவர்களும் கொடுமைப் படுத்தினார்கள். பிரிட்டிஷாரை எவ்வளவு கொடுமைப் படுத்தினார்களோ அதே கொடுமைகளுக்கு ஆளாக்கினார்கள்" என்று அப்பத்திரம் கூறியது.

இந்த ஜமீந்தார் கூட்டம் பிரிட்டிஷாருக்கு உதவி வந்ததை தடுக்க ஒரே வழிதானிருந்தது. அதாவது அந்நிய ஆட்சியை ஒழிக்கும்படி அவர்களிடமிருந்த குடியானவர்களைத் தூண்டிவிடுவது. புரட்சியில் சில ஜமீந்தார்களும் இருந்ததால் இது சாத்தியமாக இல்லாமல் போய்விட்டது. புரட்சி பிரகடனத்தில் சமூகத்தில் இருக்கும் எல்லா மக்களையும் புரட்சிக்குத் தூண்டினார்கள். ஆனால் விவசாயிகள்பற்றி அதில் பேச்சில்லை. விவசாயியைத் தவிர மற்றவர்களுக்கெல்லாம் புரட்சியில் நல்ல பலனிருக்குமென்றார்கள். இதனால்தான் விவசாயி ஜமீந்தாரையே அண்டியிருந்தான். அதிக சுரண்டலுக்கு இலக்கானான். விவசாயிகளை புரட்சித் தலைவர்கள் தம் பக்கம் இழுக்கவில்லை என்ற உண்மையே புரட்சி தோற்குமென அறிவுறுத்தியது.

புரட்சியில் சிப்பாய்கள் சேர்ந்தது அயோதி, ரோஹில்கந்த, டோப், வடமேற்கு மாகாணங்கள். இங்கெல்லாம் பொது ஜனங்களையும் சேரும்படி செய்தது. புரட்சிக்காரர்களின் குதிரைப் படையில் சேர்ந்தவர்களில்

பெரும்பாலோர் ரோஹில்கந்த் முஸ்லிம்கள்தான். காலாட் படையிலிருந்தவரில் பெரும்பாலோர் அயோதி, டோப் ஆகிய இடங்களைச் சேர்ந்த ஹிந்துக்கள், ராணுவத்தி லிருந்த விவசாய வகுப்பினருக்கும் ஜனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அயோதியை பிரிட்டி ஷார் பறித்த நாளிலிருந்து, புரட்சி ஆரம்பமாகும் வரை சிப்பாய்களிடமிருந்து புரட்சியில் சேருவதாக நிறைய மனுக்கள் வந்து கொண்டிருந்தன. அயோதியைச் சேர்ந்த சிப்பாய்களின் தொகை 75,000. இதில் 14,000 பேர் புரட்சி யில் சேருவதாக மனுப்போட்டார்கள். அயோதியில் பிரிட்டிஷார் வரி வசூல் என்று செய்த அக்கிரமத்தாலே இவர்கள் புரட்சியில் சேரவந்தனர். அயோதியைப் பொறுத்தவரை புரட்சி பொதுஜன போராட்டமாகவே இருந்தது.

பம்பாய், சென்னை ஆகிய இடங்களில் இருந்த சிப் பாய்கள் புரட்சியில் சேரவில்லை. பம்பாயிலும் சென்னை யிலும் பட்டாளத்துக்கு ரொம்ப தாழ்ந்த வகுப்பின ரையே திரட்டியிருந்தனர். வங்கத்தில் இதற்கு மாருக நிலைமை இருந்தது. (வங்க ராணுவத்தில் 400 பிராமணர் களும் 200 ரஜபுத்திரர்களும், 200 முஸ்லிம்களும் 200 தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் இருந்தனர்.) காசி, பண்டல் கந்த் ஆகிய இடங்களில் இருந்த துருப்புகளில் ரஜபுத் திரரும் பிராமணருமே ஆதிக்கம் வகித்தது. புரட்சிப் பிரகடனம் உயர் ஜாதியினரையே புரட்சிக்குத் தூண்டி யது. இதை ஸர் ஹென்ரி லாரன்ஸ் பயன்படுத்திக் கொண்டான். தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டு அயோதியை காத்துவிடப் போவதாக பறை கொட்டினன். 1857 வில்லியம் மூயருக்கு பீடன் "நாம் தாழ்ந்த வகுப் பினரையே நம்பவேண்டும்"! என்று எழுதினன். தாழ்ந்த வகுப்பினரில் சிப்பாய்களாக இருப்பவர்கள் குடும்பத்

தோடு வந்திருக்கலாமெனவும் கூறினார்கள். இதனால் சிப்பாய்க்கும் அவன் பூர்விக கிராமத்துக்கும் இருந்துவந்த தொடர்பு அறுபட்டது. இது வங்க ராணுவ விஷயத்தில் நடக்கவில்லை.

பட்டமிழந்த மன்னர்கள், கஷ்ட தசையிலிருக்கும் பிரபுக்கள், மாஜி ஜமீந்தார்கள் முதலியோரின் ஆதரவையே புரட்சிக்காரர்கள் எதிர்பார்த்தார்கள். சுதேச மன்னர்களின் ஆதரவோடு நிலையூன்றியிருக்கும் பிரிட்டிஷ் ஆட்சியை வேரறுக்க இந்த உதவியால் முடியாது. ஜனங்களால்தான் இதைச் செய்து முடிக்கமுடியும். நசுக்கப்பட்ட மக்களின் ஆதரவை புரட்சிக்காரர்கள் திரட்டவில்லை. இந்த சீர்கேடே புரட்சி புசுபுசுக்க ஆரம்பத்திலேயே காரணமாக இருந்தது.

VIII. நாம் மறக்கவில்லை

1860-ம் ஆண்டுக்குள் புரட்சி ஒடுக்கப்பட்டுவிட்டது. ஆனால் அழியா வடுக்களை புரட்சி ஏற்படுத்தியே சென்றது. நமது தேக இதயத்துடிப்பின் ஒலியையே மாற்றி விட்டது.

ஐரோப்பியருக்கும் இந்தியருக்கு மிடையே இருந்த பிரிவுகளை புரட்சி பெரிது பண்ணிவிட்டது. இரு சாராரின் கலாச்சார உறவுகள் இரண்டறக் கலந்து விடுமென நினைப்பதற்கு கஷ்டமாக இருந்தது. எவர் முகத்திலும் சிரிப்பு என்பதைக் காணவேமுடியாது. படங்களில்கூட சிரித்த முகத்தில் இந்தியரைக் காணமுடியாது. பழி தீர்க்க வேண்டுமென்று தொனிக்கும் பாவமே ஒவ்வொருவர் முகத்திலும் பிரதிபலித்தது. இங்கிலீஷ் சோல்ஜர்களோ இந்தியரை வெறுத்தார்கள். தங்களுக்கு அனுசரணையாக நின்று போராடிய இந்தியரைக்கூட வெறுத்தார்கள். இந்தியருக்கு ஆத்மா இருப்பதாகக் கூடக் கருதவில்லை. அப்படியே கருதினாலும் "இந்த கறுப்பர் ஆத்மாவுக்கும் நம் ஆத்மாவுக்கும் வித்தியாசம் உண்டு" என்றார்கள். இந்தியருக்கும் இங்கிலீஷ்காரருக்கு மிடையே குரோதமும் மாச்சரியமும் வளர்ந்தன. டபிள்யூ. எச். ரஸ்ஸல் எழுதியதுபோல "இருவரும் ஒத்துப்போயி நம்பிப் பழகுவது என்பது அநேகமாக நடக்காது" என்றிருந்தது.

புரட்சி தோற்றதால் மற்றொரு ஆபத்தும் ஏற்பட்டது. ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கு மிடையே அபிப்பிராயபேதம் வளர்ந்தது. புரட்சிக்கு முஸ்லிம்

மக்களில் பெரும்பாலோர் அனுதாபமும் ஆதரவும் காட்டினார்கள். தென்னிந்தியாவில் இவர்கள் சொல்ப எண்ணிக்கையில் இருந்தார்களெனினும் அங்கும் சதிக் குத் திட்டம் போட்டிருந்தார்களென்ற உண்மை 1857-க் கும் 1859-க்குமிடையே வெளிப்பட்டது.

புரட்சி ஆரம்பித்ததும் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஏராளமான எண்ணிக்கையில் கலந்துகொண்டனர். ஒரு வகுப்பார்தான் புரட்சி நடத்தினார்களென்று சொல்லிவிட முடியாது. ஹிந்துக்களைவிட முஸ்லிம்கள் இங்கிலீஷ் காரர்களிடத்தில் அதிக விரோதம் காட்டினார்களென்றால் அதற்குப் போதிய சரித்திர, கொள்கை சம்பந்தமான காரணங்களிருந்தன.

ஷாவாலி உல்லா என்பவர் இங்கிலீஷ்காரரை எதிர்ப் பது தேசீயக் காரணத்துக்காக மட்டுமல்ல, மதக் காரண மும் உண்டு என்று கூறினார். இதை பெரும்பாலான முஸ்லிம்கள் நம்பி வெள்ளைக்காரரை எதிர்த்து நடக்கும் புரட்சி புனிதப்போர் என்று கருதினர். இந்தக் காரணத் தால்தான் இங்கிலீஷ்காரரும் ஹிந்துக்களைவிட முஸ்லிம் கள்தான் கொடியவர்களெனக் கருதியது.

பிரிட்டிஷாரின் அடக்குமுறைகளுக்கு ரொம்பக் கஷ்டப்பட்டது முஸ்லிம்கள்தான். ஜாஜர் நவாப், பலக் பாரா நவாப், பருக் நகர் நவாப், பருகாபாத் நவாப் போன்ற முஸ்லிம் தலைவர்களை எல்லாம் இங்கிலீஷ்காரர் கள் தூக்கிலிட்டனர், அல்லது நாடு கடத்தினார்கள். "24 ஷாஜாதஸ்களை 1857 நவம்பர் 17-ம் தேதியன்று டில்லியில் தூக்கிலிட்டோம். இதில் 2 பேர் மன்னரின் மைத்துனர்கள். 2 பேர் மருமக்கள். பாக்கிப் பேரெல் லாம் நெருங்கிய உறவினர்கள்" என்று ஸர் வில்லியம் மூயர் எழுதியிருக்கிறார். பர்தேப்பூரைத் தாக்கி அங்குள்ள

பட்டாணியர் வீடுகளை எல்லாம் நாசமாக்குங்கள் என்று ஜெனரல் நீலன் விடுத்த உத்திரவை உதாரணத்துக்குக் கூறலாம். முஸ்லிம்களின் சொத்துக்களை பெருமளவுக்குக் கைப்பற்றினார்கள். டில்லியை மீட்டதும் சில மாதங்கள் கழித்து, ஹிந்துக்களெல்லாம் திரும்பவும் டில்லிக்குக் குடி வரலாமென்றனர். ஆனால் முஸ்லிம்களுக்கு 1859-ம் வருஷம் வரை அனுமதி தரவில்லை. டில்லி டிவிஷனில் அபராதம் விதித்தபோது முஸ்லிம்களிடமிருந்து ஒவ்வொரு வீட்டை பறிமுதல் செய்தார்கள். ஹிந்துக்கள் விஷயத்தில் அபராதம் 10 சதவிகிதம்தான் இருந்தது.

டில்லியில் நடந்த அட்டூழியங்களுக்கு அளவே இல்லை. டில்லியே பிரிட்டிஷ் பாசறையாக விளங்கியது. பல பிரபல புரட்சித் தலைவர்களின் குடும்பங்களை எல்லாம் சுட்டு நாசமாக்கினார்கள். புரட்சி அடங்கியது என்றாலும் ஜனங்கள், முக்கியமாக முஸ்லிம்கள் உடனே பணிந்து விடவில்லை. எதிர்ப்பு இருந்துகொண்டுதான் வந்தது. எல்லைப்புறத்தில் நடக்கும் போராட்டங்களே இதற்கு போதிய சான்றாகும். இங்கிலீஷ் கல்வியை வெறுத்துத் தள்ளினார்கள்.

புரட்சி ஆரம்பத்தில் கிழக்கிந்திய கம்பெனி மறைந்து விட்டது பிரிட்டிஷ் சர்க்காரே அதிகார லகானைப் பிடித்தார்கள். புரட்சி இனிமேல் ஏற்படாமல் தடுக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் சர்க்கார் தலையில் விழுந்தது. பிரிட்டிஷ் சர்க்காரும் திட்டங்கள் போட ஆரம்பித்தனர். தங்கள் ஆட்சி நிலையூன்றியிருக்க அடிகோலினார்கள். 1879-ல் இந்தியா வந்த ராணுவ கமிஷன் ஒன்று கீழ் வருமாறு எழுதியது :

"புரட்சி நமக்கு இரு பாடங்களைப் போதித்திருக்கிறது. அதாவது இந்தியர்வை விட்டுவிடக்கூடாது

என்றால் நிரந்தரமாக ஒரு பிரிட்டிஷ் ராணுவம் இந்தியாவில் இருக்கவேண்டும். இரண்டாவதாக, பீரங்கிப் படைகள் நம் வசமே இருந்தாக வேண்டும். ஐரோப்பியரல்லாமல் இந்தியர்வசம் பீரங்கிப் படை போகக் கூடாது."

முன்பெல்லாம் ராணுவத்தில் ஒரு வெள்ளைக்காரன் இருந்தால் 5 இந்தியரை வைத்துக்கொள்வது வழக்கம். இதை மாற்றி ஒரு வெள்ளைக்காரனுக்கு 2 இந்தியர் இருக்க வேண்டுமெனக் குறைத்தார்கள். இது வங்கத்துக்கு. சென்னைக்கும் பம்பாயிக்கும் ஒன்றுக்கு 3 பேர் இருக்கலாமென்றார்கள். பீல் கமிஷன் 1858-ல் இந்த சிபார்சை செய்தது. சுதேசிகள் இருந்த ராணுவத்தை எல்லாம் குறைத்து மொத்தம் 77 பட்டாளங்கள் இருந்தால் போதுமென்றார்கள். ஒரு பட்டாளத்தில் 600 பேர் தான் அதிகபட்ச தொகை. இந்த 600 பேருக்குள் தான் ராணுவப் போலீஸும் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகமொத்தம் 200,000 பேர்தான் இருந்தார்கள். ஒரு வெள்ளைக்கார சோல்ஜரின் சம்பளம் 5 இந்திய சிப்பாய்களின் சம்பளத்துக்கு ஒத்திருக்கும். இதன் விளைவாக இந்திய ராணுவ செலவு அதிகரித்துக்கொண்டு போனது. மற்றொன்றும் செய்தார்கள். அதாவது இந்தியாவுக்கு வரும் பிரிட்டிஷ் ராணுவம் இந்தியாவிலேயே நிரந்தரமாக இருக்கக்கூடாது என்றனர். ஏனெனில் இந்தியாவிலேயே நெடுங் காலமாக இருந்துவிட்டால் இந்திய பழக்கவழக்கம் ஏற்பட்டுவிடும், பிறகு அவர்கள் ஆக்கிரமிப்புத் துருப்புகளாகத் தங்களைக் கருதமாட்டார்களெனக் கூறினர். இந்த யோசனை 1861-ல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதனால் இந்தியாவின் ராணுவச் செலவு மேலும் அதிகரித்தது.

கோட்டை கொத்தளம், வெடிமருந்துக் கிடங்குகள், கஜனுக்கள் ஆயுதச்சாலை இங்கெல்லாம் ஐரோப்பிய துருப்புகளைக் கொண்டுவந்து குவித்தார்கள். இனி புரட்சி வந்தாலும் கவலை இல்லை என்று ஸர் ரிச்சர்ட் டெம்பிள் எழுதினார். சுதேசி பீரங்கிப்படை யெல்லாம் கலைக்கப்பட்டது.

சுதேசி ராணுவத்தில் உயர்ந்த ஜாதியினரை எல்லாம் விரட்டினார்கள். பிராமணர்கள் ராணுவத்தில் இருந்தால் அவர்களுக்கு ராணுவக் கட்டுப்பாடுகள் ஒத்து வராது என்றனர். கூர்க்கர், சீக்கியர், மலை ஜாதி பட்டாணியர், தாழ்த்தப்பட்ட ஹிந்துமக்கள் முதலியவர்களுக்கு ராணு வத்தில் சேர வசதி இருந்தது. வங்க ராணுவத்தில் 82,000 பேர் இருந்தனர். பெயர்தான் வங்க ராணுவமே ஒழிய, ஆட்களெல்லாம் பஞ்சாபியர்தான். சுதேசி களுக்கு எதிராக சுதேசிகளைத் தூண்டிவிடுவதே சரியான ராணுவத் திட்டமாகும் என்று 1858-ல் ஸர் ஜான் லாரன்ஸ், லிவிலி சேம்பர்லென், ஹெர்பர்ட் எட்வர்ட்ஸ் முதலியோர் கூறினார்கள். பல பகுதி சிப்பாய்களை ஒன்று திரட்டி வைத்திருந்தால் ஆபத்து என்று கருதினார்கள்.

இந்தியாவைக் காப்பதற்கு ராணுவத்தைத் திருத்தி அமைத்தால்மட்டும் போதாது. சிறந்த தளம் ஒன்று வேண்டாமா? அந்த தளம்தான் இந்தியாவிலுள்ள பிற்போக்காளர்களை எல்லாம் ராஜீய சமூகத் துறைகளில் தூண்டிவிட்டு பிரிவினையைப் புகுத்துவது. விக்டோரியா மகாராணியார் 1858-ல் வெளியிட்ட பிரகடனத்தின் மேல் பூச்சுகளை எல்லாம் களைந்துவிட்டுப் பார்த்தால் பிரிவினை விதை போட்டிருப்பது தெரியவரும். சமஸ்தானதிபதிகள் இதற்கு பெரும் உதவியாக இருந்தார்கள். புரட்சியை அடக்கினது இந்த சமஸ்தானதிபதிகள்தான் என்று லார்ட் கானிங்கே பாராட்டியிருக்கிறார். இவர்களைக்

காப்பது பிரிட்டிஷ் கடமை என்றும் கூறியிருக்கிறார்கள். அடுத்தபடியாக ஜமீந்தார்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உதவினர். இதற்காக அவர்களுக்கு ஜமீந்தார்கள் பட்டம் வழங்கப்பட்டது. அயோதியில் மூன்றில் இரு பகுதி நிலங்கள் ஜமீந்தார்களுக்குப் பிரித்துக் கொடுக்கப் பட்டது. பணக்கார கூட்டம் இருந்துவருவதால் தங்களுக்குத்தான் நன்மை என்பதை இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் இடைவிடாது லண்டனுக்கு வலியுறுத்திவந்தனர். இதன் விளைவாக பாஞ்சாலத்தில் 46,000 விவசாயிகள் ஒரு ஜமீந்தாருக்கு தங்கள் நிலபுலங்களை இழக்கவேண்டி ஏற்பட்டது.

பிற்போக்காளரைத் தூண்டிவிடும் இதர காரியங்களும் இடைவிடாது நடந்துவந்தன. பெண் கல்வி, பலதார விவாகத்தடை முதலிய முற்போக்குக் கொள்கைகளுக்கெல்லாம் இடமில்லாமல் அடித்துவந்தார்கள். பண்டித ஈசுவர சந்திர வித்தியாசாகரர் ஹிந்து விதவா விவாகத்துக்கு 1856-ல் முயன்று சட்டப்படி செல்லுமென செய்தார். செல்வாக்குடையவர்கள் ஆதரவும் அவருக்குக் கிடைத்தது. எனினும் பலதார மணத்துக்கு ஹிந்து சட்டத்தில் இடமிருக்கக்கூடாது என்று அவர் கொண்டுவந்த மசோதாவை சட்டமாக்க பிரிட்டிஷ் சர்க்கார் மறுத்துவிட்டார்கள்.

புரட்சியால் பிரிட்டிஷ் ஆட்சி பரவுவது தடைப்பட்டது என்றாலும் பொருளாதார சுரண்டல் பலப்பட்டது. புரட்சிக்குப் பின்னர் 'வர்த்தகம்' ரொம்ப அதிகரித்தது என்று ஸர் ஜான் ஸீலி எழுதுகிறார். ஒன்றுக்கு கிட்டத்தட்ட $3\frac{1}{2}$ மடங்கு அதிகமாக வர்த்தகம் நடந்தது.

இந்த மாறுதல்கள் என்றாவது ஒருநாள் ஆபத்தான விளைவை ஏற்படுத்தும் என்றிருந்தது. புரட்சியில்

பழைய இந்தியா மறைந்தது. நவ இந்தியாவே இனி சர்க்காருக்கு ஆபத்து ஏற்படுத்த வேண்டும். ஆகவே சர்க்கார் புதுமுறை கையாண்டது. அதாவது பணக்கார ரையும் விவேகமற்றவர்களையும் அரவணைத்துச் செல்லும் கொள்கை. இப்படியாக சர்க்கார் கொள்கையில் புரட்சி ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தியது.

1857-ல் நடந்த புரட்சி வெறும் சிப்பாய்க் கலகத்தை விட பெரியது. சமூக கொதிப்பு என்ற எரிமலையிலிருந்து ஆக்ரோஷமாக குமுறி எழுந்த தீக்குழம்பு. உள்ளூர அரித்துக்கொண்டிருந்த ஆத்திரங்கள் வீறுகொண் டெழுந்துவந்து தாக்கின. எரிமலையின் ஆங்காரம் அடங் கியதும் சமூக அமைப்பே மாறுதல் கண்டது. புரட்சியின் வடுக்கள்மட்டும் மாறவில்லை. உடலில் ஊடுருவிப் பாய்ந் திருக்கும் அவ் வடுக்கள் நமக்கு பழைய சோக நாடகத்தை நினைப்பூட்டுகின்றன.

கால அட்டவணை

மிராத்தில் புரட்சி மூண்டது	1857 மே 10-ம் தேதி
டில்லி பிடிபட்டது	,, ,, 12-ம் ,,
டில்லியின் சுதந்திரப் போர்	,, ,, 12-ம் தேதியிலிருந்து செப். மீ 24-ம் தேதி வரை
காசி, அலகாபாத் எழுச்சி	,, ,, 23-ம் தேதி
லக்ஷ்மணபுரி போராட்டம்	,, ஜூன் 4-ம் தேதி
அயோதி, ரோஹில் கந்த் விடுபட்டன	,, ,, 4-ம் தேதியிலிருந்து 14-ம் தேதி
லக்ஷ்மணபுரி ரணகளம்	,, ,, 5-ம் தேதியிலிருந்து 21-ம் தேதி வரை
கான்பூர் புரட்சி	,, ஜூன் 5-ம் தேதி
கான்பூர் முற்றுகை	,, ,, 6-ம் தேதி
வீலர் சரணாகதி	,, ,, 27-ம் தேதி
சின்ஹாட்டில் பிரிட்டிஷ் தோல்வி	,, ,, 29-ம் தேதி
லக்ஷ்மணபுரியிலிருந்து ஹால்லாக் விரட்டுண்டது	,, ஜூலை 29-ம் தேதியிலிருந்து 16-ம் ஆகஸ்ட் வரை
டில்லி வீழ்ச்சி	,, செப். 14-ம் தேதியிலிருந்து 20-ம் தேதிக்குள்
டோபை பிரிட்டிஷார் பிடித்தது	,, டிச. 14-ம் தேதியிலிருந்து 1858 ஜனவரி 3-ம் தேதிக்குள்

அயோதி திரும்ப பிடிபட்டது	1857	டிசம்பர்	21-ம் தேதியிலிருந்து 1858 மார்ச் 4-ம் தேதிக்குள்
பண்தல்கந்தை திரும்ப பிடித்தது	1858	மார்ச்	3-ம் தேதி
லக்ஷ்மணபுரி வீழ்ந்தது	,,	,,	8-ம் தேதியிலிருந்து 20-ம் தேதிக்குள்
ஜான்ஸி வீழ்ந்தது	,,	ஏப்.	3-ம் தேதி
பரீலி வீழ்ந்தது	,,	மே	6-ம் தேதி
கல்பியில் புரட்சிக்காரர் தோற்றது	,,	,,	23-ம் தேதி
குவாலியர் பிடிபட்டது	,,	ஜூன்	2-ம் தேதி
லக்ஷ்மிபாய் வீர மரணம்	,,	,,	18-ம் தேதி
குவாலியர் வீழ்ந்தது	,,	,,	20-ம் தேதி
கிழக்கிந்திய கம்பெனி தொலைந்தது	,,	ஆக.	2-ம் தேதி
விக்டோரியா மகாராணி பிரகடனம்	,,	நவ.	1-ம் தேதி
அயோதியில் அடக்கு முறை	,,	,,	1-ம் தேதியிலிருந்து 30-ம் தேதி
தந்தியாதோபி துரோகவலையில் வீழ்ந்து பிடிபட்டது	,,	ஏப்.	7-ம் தேதி
தந்தியா தோபி தூக்கில் ஏறியது	1859	,,	18-ம் தேதி
புரட்சிக்காரர்களை வேட்டை ஆடியது	,,	அக்டோபரிலிருந்து டிசம்பர் வரை	

சுதந்திரதின வெளியீடுகள்

1. கட்டபொம்மு

பிரிட்டிஷ் கும்பினி ஆட்சியை நிலைகலங்கச் செய்த வீரன் கதை. ஆசிரியர் தி. நா. சுப்பிரமணியன். இரண்டாம் பதிப்பு விலை ரூ. 2 8

2. அசலும் நகலும்

சிந்தனையைக்கிளரும் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள். ஆசிரியர், மூத்துசிவன் விலை ரூ. 3 0

3. உலக சரித்திரம்

நேருஜி எழுதிய சிறந்த நூல். உலக பாராட்டுதலைப் பெற்றது. கலைகுன்ரு மொழிபெயர்ப்பு. விலை ரூ. 8 12

4. இந்தியா பிரிக்கப்பட்டால்

டாக்டர் ராஜன் பாபுவின் இணையற்ற ஆராய்ச்சிக் களஞ்சியம். இன்றைய ராஜீய பிரச்னைகளை தெளிவுற விளக்கும் புஸ்தகம்.

விலை ரூ. 10 0

அழகிய கட்டிடம், உயர்ந்த காகிதம்

நவயுகப் பிரசுராலயம்

சென்னை :: காரைக்குடி

WRAPPER PAGE PRINTED AT THE B. N. K. PRESS, MADRAS-1